
Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 20.00
දිනමුරසු වාරමලර් ஆக. 31 - செப். 06, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 677


## வைகோ வைக்காதே ஈழத் தமிழர்களுக்கு தீ!

எக்ஸ்ரே ரிப்போர்ட்






## இடம்பெயர்ந்தவர்களின் தீர்க்கப்படாத இடர்ப்பாடுகள்




## அமெரிக்காவில் அம்பலமான புலிகளின் ஆயுதக் கொள்வனவு



ஜெயகாந்தன்

'கூலிக்காக எழுதமாட்டேன்'

## திமிரு இன்னொரு திருப்பம்








இன்னொரு திரைஜோடி சேர்கிறது!



புவா பேகமின் அந்தரங்கம்!



பணம் போவோம்! ரசிப்போம்!



## சோதிவானவன்

'சொற்றுணை வேதியன் சோதிவானவன். நற்றுணை யாவது நமச்சிவாயவே" இந்த வரிகளின் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மைகள் எவ்வளவோ இருக்க, எதை எதையோ எல்லாம் கற்பனை செய்து கொண்டு, வாழ் நாளை வீண் நாளாக்கிக் கொண்டு இருப்பவர்கள் எத்தனையோ பேருள்ள இந்த உலகத்தில், சிந்தனையால் ஏற்படும் திருப்பு முனை தான் இவ்வுலக வாழ்வை பயனுள்ளதாக்கும் என்பது பொதுவான கருத்து. சோதி சகவானவன் என்ற தொடரை எடுத்துக்கொண்டால், சோதி ஒளிப்பிழம்பு. இந்த ஒளிமயமான வாழ்க்கை அமையவேண்டுமாயின் இதயத்தில் தூய்மையான எண்ணங்கள் ஏற்படவேண்டும். தூய்மையான எண்ணங்கள் ஏற்படுமாயின் அறம்" மனதில் குடிகொண்டு விடும். அப்பொழுது தீமைபயக்கும் அவா, வெகுளி, இன்னாச் சொல், பொறாமை இவைகளெல்லாம் அறமெனும் சோதியால் சுட்டெரிக்கப்படுமாதலால் உள்ளம் சோதி வடிவாகிவிடும். அப்படியான ஒரு மனிதன் சோதியானவன் என்றாகி விடுவான். சாதாரண மனிதனும், சோதிவானவனுக்கு ஒப்பாகிவிடுகிறான். அப்படிச் சோதி ஆனவன் வானவருக்கும் ஒப்பாகின் றான் எனத் துணியலாம்.

-என். எஸ். ராஜா, தம்பலகாமம்.

## கர்த்தரை துதிப்போம்!

இந்த உலகையும், நமது உடலையும் படைத்தவர் ஒருவர் இருக்கிறார். அவர்தான் தேவன். அந்த அபூர்வ சக்தி கொண்ட தேவன்தான் உலகத்தை ஆளும் ஆண்டவர். அவர் சித்தம் கொண்டால்தான் நம் வாழ்வும் சிறப்புறும். அவரை கலங்கப்பண்ணும் காரியங்களில் நாம் ஈடுபடும்போது நம்மை அறியாமலேயே அவரை வேதனைப் படுத்துகிறோம். அதன் விளைவாக நாம் சோதனைகளுக்கு உட்படுகிறோம். வாழும் போது கர்த்தரை துதிப்பவர்களுக்கு சாகும்போது மரண பயம் இல்லை. ஆனால் இறைவனை மறந்து வாழ்பவர்களுக்கோ மரண பயம் எப்போதும் உண்டு. "ஐயோ நான் சாகப் போகிறேன்" என்ற வேதனையே அவர்களைச் சாகடித்து விடும். எனவே கர்த்தரிடம் இதய சுத்தியுடன் மன்றாடுப வர்களுக்கு தேவன் துணை நிற்கிறார். மரணம் அவர்களுக்கு ஒரு பொருட்டாகத் தெரிவதில்லை. ஆகவே வாழும்போது கர்த்தரிடம் மன்றாடுவோம். வேதனைகள் விலகும். சோதனைகள் அகலும். வாழ்வு வளம் பெறும்.

-பெனடிக்ட் ஸ்டீபன், ஹெந்தளை

## மறுமை வாழ்க்கை

மனிதன் மறுமை வாழ்க்கையை மறந்து இவ்வுலக வாழ்வில் இன்பம் கண்டு கொண்டிருக்கிறான். அல்லாஹ், அவன் சிருஷ்டித்த இறைமறை மூலம் இறை தூதருக்குக் கூறுகிறான் :

நபியே! நீர் கூறுவீராக, உலகத்தின் சுகம் மிக அற்பமானது. மறுமை யானது பயபக்தியுடையோருக்கு மிகச் சிறந்ததாகும்.

மறுமையைவிட உலக வாழ்க்கையைக் கொண்டே நீங்கள் திருப்தியடைந்து விட்டீர்களா? இவ்வுலக வாழ்க்கையின் சுகம் மறுமையின் வாழ்க்கைக்கு எதிரில் மிக அற்பமானதாகும்.

தங்களுடைய மார்க்கத்தை வீண் விளையாட்டாகவும் வேடிக்கை யாகவும் ஆக்கிக் கொண்டவர்களை விட்டுவிடுங்கள். அவர்களை இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றி விட்டது. எவர் இவ்வுலக வாழ்வை விரும்புகிறாரோ, அவர்களில் நாம் விரும்பியவருக்கு நாம் நாடியதை இவ்வுலகிலேயே விரைவாகக் கொடுத்திடுவோம். பின்னர் அவருக்கு நரகத்தை நாம் தயார் செய்து வைத்துள்ளோம். அவர் அதில் பழிக்கப்பட்டவராகவும், அருளை விட்டு தூரமாக்கப்பட்டவராகவும் நுழைவார்.

-எம். சீ. கலீல், கல்முனை

## கவிதைப் போட்டி இல.674



### பரிசுக்குரிய கவிதை

## இரை

அரசியல் நோக்கம்
அறியாத
துப்பாக்கிகளின்
எச்சில்களுக்கு
இரையாக்கப்படுகிறது
ஜனநாயகம்!!

-க. அல். ஆஸாத்
ஏறாவூர் - 06

## கவிதைப் போட்டி இல.677



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 05.09.2006.

கவிதைப் போட்டி இல.677
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### தீவிரம்

குழந்தைகளையும் தீவிரவாதி
என்று நினைத்தாயா? நினைத்தால்
எதிர்காலத்தில் நாங்களும்
தீவிரவாதிதான்!
விடப்பா நிம்மதியாய் போக!

–அ.ஜெனோஷன்,
நீர்கொழும்பு.

### உயிர்... உயிர்!

உயிருக்குப் பயந்து
ஊரை விட்டுச் சென்றாலும்
உங்கள்
தொல்லை தொடர்கிறது!
உனது துப்பாக்கிக் குண்டால்
என் உயிரைப் போக்கினாலும்
- நீ
என் குழந்தைகளை
ஒன்றும் செய்து விடாதே!

-எஸ்.ஆதிபா,
மன்னார்.

### சுடுடா சுடு!

மனித மிருகமே சுடு!
நெஞ்சமற்றவனே
பிஞ்சுகளின் உடலை
பஞ்சு மெத்தையாக்கி
அதிலே நடக்கவா போகிறாய்?
பொல்லாத கல் நெஞ்சன்
இதையா உனக்குக்
கற்றுத் தந்தான்?

–எஸ்.ஏ.ரகுமான்,
கொழும்பு – 11.

### முடிவு காலம்

அப்பாவி மக்களை
துப்பாக்கி முனையில்
அடி பணிய வைக்கும்
துப்பாக்கிப் பிரியர்களே!
உங்களுக்கொரு
முடிவு காலம்
மிக விரைவில்
வரத்தான் செய்யும்.

– ஏ.எஸ்.எம்.ரவூப்,
கொழும்பு – 15.

### துணிச்சல்!

துப்பாக்கி நீட்டிப்
பூச்சாண்டி காட்டாதே!
வழி விடு எங்களுக்கு.
குண்டுபட்டு வீழ்வோமே
ஒழிய...
உங்கள் பாசிஸ
கொள்கைக்கு
என்றுமே அடி பணிய
மாட்டோம்!!!

–அனீஸா,
ஏறாவூர் – 06.

### பலி

என்னைக் கேட்கிறாயா பலி...?
பிள்ளைகளைக் கேட்கிறாயா
பலி?
பலி என்னும் பெயரில் உனக்கு
ஏன்! இந்தக் கொலை வெறி...

-ரம்ஸீன் றமீஸ்,
குருணாகல்.

### அ(உ)பாயம்

நானோ...
அபாயம் காரணமாக
அகதி முகாம் தேடினேன்...!
நீயோ...
உபாயம் செய்து
உயிருக்கு உலை வைக்காதே...!

–அ.ரவி,
மட்டக்களப்பு.

### குரோதக் கொலை!

சமாதானத்துக்குச் சமர்
மண்ணுக்கு மொய்
சவத்துக்குச் சங்கிரமம்
இனிக் குரோதம் தீர்க்கக் கொலை.

-சீ.தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.




## உங்கள் பக்கம்

### சாய்ந்தமருது வைத்தியசாலையின் நிர்மாணப் பணியை மீண்டும் தொடர வேண்டுகோள்!

கடந்த 2004 டிசம்பர் 26இல் ஏற்பட்ட சுனாமிப் பேரலையின் காரணமாக முற்றாகச் சேதமுற்ற சாய்ந்தமருது வைத்தியசாலையானது, சுமார் ஐம்பது வருடங்களுக்கு மேல் மக்களுக்குச் சேவையாற்றிய பழைமை வாய்ந்த வைத்தியசாலையாகும். இந்த வைத்தியசாலை சுனாமிக்குப் பின் தற்காலிகமாக சாய்ந்தமருது நூல் நிலையத்தில் இயங்கி வருகின்றது. இந்த நூல் நிலையம் ஒரு சிறிய கட்டடத் தொகுதி என்பதால் இட நெருக்கடி தோன்றியுள்ளது. அத்தோடு இந்த நூல் நிலையத்தில் ஒரு பகுதியில் பிரதேச செயலகமும் இயங்கி வருகின்றது. இதனால் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியைப் போக்குமுகமாக தாமரைக்கேணி என்னுமிடத்தில் வைத்தியசாலை நிறுவுவதற்காக காணி தெரிவு செய்யப்பட்டு, ஹெட் நிறுவனம் பொறுப்பேற்று நிர்மாணப் பணிகளையும் மேற்கொண்டு வந்தது.

இந்தக் கட்டட அடிக்கல்லை அமைச்சர் அதாவுல்லா அவர்கள் நாட்டி வைத்ததுடன் அது சார்பாக பல மில்லியன் ரூபாய் பணமும் அமைச்சரினால் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்தக் கட்டட நிர்மாணப் பணி கடந்த நான்கு மாதங்களாக கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. இதன் காரணம் எதுவென்று இன்னும் கண்டறியப்படவில்லை. முன்னர் இயங்கி வந்த இந்தச் சாய்ந்தமருது வைத்தியசாலையின் ஊடாகவே சாய்ந்தமருது மக்கள் மட்டுமின்றி பல ஊர்களையும் சேர்ந்த பல ஆயிரம் மக்கள் தங்களின் சுகாதார தேவைகளை நிறைவேற்றி வந்தனர். தற்பொழுது இட நெருக்கடியான ஒரு இடத்தில் இந்த வைத்தியசாலை இயங்குவதால் மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. ஆகவே, இந்தப் பிரதேச மக்களின் நலன் கருதியும், இடநெருக்கடியிலிருந்து மீட்சி பெறவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகக் இவ்விஷயத்தைக் கவனத்தில் எடுப்பதுடன் இந்த வைத்தியசாலையை கூடிய சீக்கிரத்தில் நிர்மாணித்து, தற்பொழுது எழுந்துள்ள இடநெருக்கடிக்கு முற்றுப் புள்ளி வைக்குமாறு மிகவும் பணிவன்புடன் இப்பகுதி வாழ் மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

–யூ.எல்.ஏ.மஜீட்,
சாய்ந்தமருது – 14.

## வாசகர் சாலை

### முத்துப் போன்ற முரசே!

அழகிய முகவுரை கொண்டு, அறிவுடையதும் ஆழமான பெறுமதி வாய்ந்த கருத்துக்களை உள்ளடக்கி, ஒவ்வொரு வியாழன் தோறும் எனது இல்லம் வந்தடையும் இல்லத்தரசே! வியாழன் சூரியன் உதயமானதும், உன் 'நாமம்' ஞாபகத்திற்கு வரும். உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். உன் வரவில் சிறிய தாமதம் ஏற்பட்டால் கூட அது ஒரு ஏமாற்றம் போல் தென்படும். முத்துப் போன்ற முரசே! உனது சேவை எமக்குத் தேவை.

– பி.சதீஸ்வரன்,
கடற்கரை வீதி, தாண்டியடி –

தினமுரசு வாரமலருக்கு எனது வணக்கங்கள்!

உனது இதழில் வரும் விடயம் அனைத்தும் மிகச் சுவையானது. அதில் சினிமா பக்கம் என்னை மிகவும் கவர்ந்தது. எனக்கு உன்னால் உதவி ஒன்று கிடைக்கவேண்டும். நடிகர் சூர்யாவின் விலாசமும், தொலைபேசி இலக்கமும் தரமுடியுமா? காரணம் சூரியாவுக்கு திருமணவாழ்த்துக் கூறவேண்டும். அதற்குத் தான். எல்லோருடைய விலாசமும் தந்த நீ, இந்த விலாசமும் தந்து உதவவேண்டும். Please. இத்துடன் உன் வாசகன்

எம்.இம்ரான்,
டிமெல்வத்த,
கொழும்பு–14.

### விருட்சமாய் வளர்க!

அன்றிலிருந்து இன்றுவரை
சகல வயதினரும் படித்துச்
சுவைக்கும் பெட்டகமாய்
விளங்கும் முரசே!
நாட்டில் மறைக்கப்படும்
உண்மைகளைத் திரைநீக்கி
வெளிச்சம் போட்டுக்
காட்டும் உனது பணி
மேலும் பெரும்
விருட்சமாய் வளர வேண்டுமென
வாழ்த்துகிறேன்.

உ.றஜி
திருநாவற்குளம்.

கடந்த வார தினமுரசில் (ஆக. 03.08.2006) பக்கம் 06இல் பிரசுரிக்கப்பட்டிருந்த "தூண்டிவிடும் மின்னல்" எனும் தலைப்பின் கீழ் எழுதப்பட்டிருந்த ஆக்கம் முற்றிலும் சரியானது. இத்தகைய விமர்சங்களின் பின்னராவது அந்நிகழ்ச்சித் தொகுப்பாளர் பயனுள்ள சிறப்பான விரும்பத்தகு மாற்றத்தைக் காட்டுவார் என மட்டக்களப்பு வாசக நெஞ்சங்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

இ.தமிழினி,
மட்டக்களப்பு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# அமெரிக்காவில் புலிகளின் ஆயுதக் கொள்வனவு; சர்வதேச அளவில் தேடுதல்களும் கைதுகளும்.

புலிகள் இயக்கத்திற்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகள் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்களை கொள்வனவு செய்ய முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் அமெரிக் காவில் பதினைந்து தமிழர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து சர்வதேச அளவில் விசாரணை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. சர்வதேச பொலிஸ் பிரிவான இண்டர் போல், லண்டனின் புலனாய்வுப் பிரிவான ஸ்கொட்லண்ட் யார்ட், அமெரிக்காவின் மத்திய சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவு கனடாவின் ரோயல் கனடியர், மௌண்டட் பொலிஸ் பிரிவு ஆகியவை தத்தமது நாடுகளில் தொண்டர் அமைப்புகள் என்ற போர்வையில் இயங்கும் பல்வேறு தமிழ் அமைப்புகளின் அலுவலகங்களை பலத்த சோதனைக்கு உள்ளாக்கி இருக்கின்றன. இவ்வருடம் கனடாவில் கன்ஸர்வெட்டிவ் கட்சி ஆட்சிக்கு வந்ததையடுத்து புலி அமை ப்புக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. கனடிய புலனாய்வுப் பொலிஸார் ஒஸாலுகி என்ற பெயரில் கடந்த நான்கு வருடங்களாக புலிகளின் முகவரமைப்புகள் தொடர்பாக நடத்திய புலன் விசாரணைகளின் முதல் அறிக்கையை ஜுலை மாதம் 19ஆம் திகதி கனடிய அரசாங்கத்திடம் கையளித்துள்ளது. இந்த 58 பக்க அறிக்கையை பயன்படுத்திப் பெறப்பட்ட நீதிமன்ற அனுமதியையடுத்து கனடாவின் டொரண்டோ, மொன்றியல், வான்கூவர் ஆகிய இடங்களிலுள்ள உலகத் தமிழர் இயக்கத்தின் அலுவலகங்கள் சோதனையிடப்பட்டுள்ளன. இவை தர்மஸ் தாபனங்கள் என்றும் கூறப்படுகிறது.. கலை, தொழில் நுட்ப தமிழ் அகடமி மற்றும் அம்பாள் வர்த்தக நிலையம் போன்றவையும் சோதனையிடப்பட்டு ஆவணங்களும் புலி இயக்கப் பிரசாரசாதனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

உலகத்தமிழ் இயக்க அமைப்போடு தொடர்பு கொண்டுள்ளதாக கூறப்படும் 21 தமிழ் அமைப்புகளின் பெயர்களும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைப் பெறுமதி ஏழரை இலட்சம் ரூபா பெறுமதியான (ஒவ் வொன்றும் 7500 டொலர்கள்.) ஐம்பதுக்கு மேற்பட்ட SA 18 என்றழைக்கப்படும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை கறுப்புச் சந்தையில் பெறுவதற்காக நியூயோர்க் லோங் ஐலண்டுக்கு வந்திருந்த மூன்று கனடிய தமிழர்களும் கைது செய்யப்பட்ட பதினைந்து பேரில் அடங்குவர்.

சடாச்சரன், சரத்சந்திரன் (சதா), சகிலால் சபாரத்தினம் (சகில்), திருத்தணிகை தணிகாசலம் (தணி) ஆகியோரே கைது செய்யப்பட்ட கனடிய தமிழர்களாவர். கறுப்புச் சந்தை வியாபாரிகள் போலவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் போலவும் பாசாங்கு செய்த அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினரே இவர்களைக் கைது செய்துள்ளனர். வடக்கு லண்டனைச் சேர்ந்த பிரிட்டிஷ் டொக்டரான முருகேசு விநாயக மூர்த்தி (வயது 57) என்பவரும் நியூயோர்க் கில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார். ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் புலிகளை அமெரிக்காவின் பயங்கரவாத பட்டியலிலிருந்து நீக்குவதற்கும் லஞ்சம் கொடுக்க முனைந்தார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பத்து இலட்சம் அமெரிக்க டொலர்களை இவர் லஞ்சமாகக் கொடுக்க முனைந்த போது இவர் பிடிபட்டார். இவரின் மனைவியான புஸ்பம் என்பவர் தனது கணவர் இந்துக் கோவில் ஒன்றைத் திறந்து வைப்பதற்காகவே அமெரிக்கா சென்றிருந்தாரென்று லண்டனில் தெரிவித்தார். ஆனால், 'தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் தவிர்க்க முடியாதவை. எமக்கு வேறு மார்க்கமில்லை' என்ற இவரின் தொலைபேசி சம்பாஷனையை அமெரிக்கப் புலனாய்வுப் பொலிஸார் ஒலிப்பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.லண்டனில் வாழும் டொக்டர் விநாயக மூர்த்தியிடம் மூன்று ஆடம்பரக் கார்கள் இருப்பதாக பிரிட்டிஷ் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அமெரிக்க கிளை சோதனையிடப்பட்டபோது ரைபிள்கள், ஏவுகணைகள் பற்றிய விபரங்கள், விலைகளடங்கிய பட்டியல், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கணனியில் காணப்பட்டதாக அமெரிக்கப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். ஆயுத வியாபாரிகள் என்று கூறப்படுபவர்களின் விலாசங்களடங்கிய தொலைநகல்களின் விலாசங்களடங்கிய தொலைநகல்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக மத்திய சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவின் விசேட அதிகாரியான ஸ்தீவன் சீகெல் குறிப்பிட்டார். மேலும் பலர் கைது செய்யப்படவுள்ளார்கள் என்றும் அவர் கூறினார்.

## அமெரிக்காவில் மோசடி செய்தவர் இலங்கையில்!

அமெரிக்காவில் நிதி மோசடியில் ஈடுபட்டாரென்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் சட்ட விரோத நிதி நிறுவனமொன்றின் சிரேஷ்ட - அதிகாரியான கொபி என்றழைக்கப்படும் ஜேக்கப் அலெக்சாண்டர் என்பவரை இலங்கை இரகசியப் பொலிஸார் தேடி வருகின்றனர். சர்வதேச பொலிஸ் பிரிவான 'இன்டர் போல்' கொடுத்த தகவலையடுத்தே இவர் தேடப்படுகிறார். இஸ்ரேலிலும் அமெரிக்காவிலும் இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டுள்ள இவர், இலங்கையின் நீர்கொழும்புப் பகுதியில் காணப்பட்டாரென்று இஸ்ரேலிய பத்திரிகையொன்று வெளியிட்ட செய்தியையடுத்தே இவர் தேடப்படுகிறார். சட்டவிரோதமாக இஸ்ரேலில் 570 இலட்சம் டொலர்களை இவர் முடக்கியுள்ளாரென்று கூறப்படுகிறது. அமெரிக்க வங்கிகளிலுள்ள இவரது 450 இலட்சம் டொலர்களை அமெரிக்கா கைப்பற்றியுள்ளது.

## இலங்கை நிலைமைகளை இந்தியா உன்னிப்பாக அவதானிக்கிறது

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு யுத்தம் தீர்வல்ல. அரசியல் தீர்வே காணப்பட வேண்டுமென்பதை இலங்கையில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இருதரப்புகளும் புரிந்து கொள்ள வேண்டுமென்று இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் ஷியாம் சரண் புதுடில்லியில் கடந்த 28ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார். இந்தியா நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் குறிப்பிட்ட அவர், அரசாங்கமும் புலிகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டுமென்று இந்தியா அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாகவும் கூறினார். மோதல்களால் பாதிக்கப்பட்டு அகதிகளாக இடம் பெயர்ந்திருக்கும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க இந்தியா தயாராகவிருக்கிறது. புலிகள், தாமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற கோட்பாட்டைக் கைவிட்டு, தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கான ஜனநாயக நடைமுறைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் அவர் கூறினார்.

## ஊடகவியலாளர் குருபரன் கடத்தப்பட்டதற்கு ஜனநாயக தமிழ் அமைப்பு கண்டனம்




கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால் ஊடகவியலாளர்கள் குருபரனை விடுவிக்குமாறு ஆர்ப்பாட்டம் நடத்திய போது

முன்னாள் புளொட் இயக்க முன்னணி அங்கத்தவரும் 'சூரியன்' தனியார் வானொலியின் தற்போதைய செய்தி முகாமையாளருமான நடராஜா குருபரன் கடத்தப்பட்டமை வன்மையான கண்டனத்துக்குரியது. ஊடக தர்மம், பத்திரிகைத் தர்மமென்றெல்லாம் வாய் கிழிய அரசியல்வாதிகளும் ஊடகவியலாளர்களும் எவ்வளவுதான் பேசினாலும் ஊடக எஜமானர்களின் கொள்கைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் அடங்கி நடக்க வேண்டிய கட்டுப்பாடு ஊடகவியலாளர்களுக்கு இருக்கின்றது என்ற உண்மையை எவரும் மறுக்க முடியாது. இருந்தாலும் பெரும்பாலான தமிழ் ஊடகவியலாளர்களைப் போலன்றி, தனது தளத்திலும் தடத்திலும் சிறிதளவாவது மாறுதல்களை அவர் கடைப் பிடித்திருக்கிறார். எது எப்படியிருந்தாலும் அவரைக் கடத்திச்சென்ற ஆயுதக்குழு அவரை விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம் என்று ஜனநாயகத் தமிழ் ஊடகவியலாளர் அமைப்பு விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

"யுத்தத்தில் முதலில் கொல்லப்படுவது உண்மைதானென்று உலகளாவிய ரீதியில் பொதுவாகக் கூறப்படுகிறது. உண்மைக்கு முன்னர் மனிதமே முதலில் கொல்லப்படுகிறது. வாழ்வுரிமை பறிக்கப்படுகிறது. யுத்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் சொல்லும் பொய்களை 'போர்மியுலாப்' பாணியில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஊடகவியலாளர்களுக்கு இருக்கின்றதென்ற உண்மையையும் நாம் மறுத்து விட முடியாது. அவர்களின் இதயங்களுக்கு நேரே துப்பாக்கிகளும் நீட்டப்பட்டிருக்கின்றன என்பதற்கு குருபரனின் கடத்தல் ஓர் அருமையான உதாரண மாகும் என்றும் அவ்வறிக்கையில் குறிபிடப்பட்டுள்ளது.

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்

ஊடகவியலாளர் நடராஜா குருபரன் இனம் தெரியதவர்களால் கடத்தப்பட்ட சம்பவத்தை ஈ.பி.டி.பி. கண்டித்து வெளியிட்ட அறிக்கையில்

சூரியன் எப்.எம். செய்தியாசிரியர் நடராஜா குருபரன் 29.08.2006 அன்று காலை கடத்தப்பட்டுள்ளார் என்ற செய்தி பெரும் அதிர்ச்சியைத் தந்தது.

அவர் கொண்டிருந்த கருத்தைக் கருத்தால் எதிர்கொள்ள முடியாதவர்களே அவரைக் கடத்தியுள்ளனர். இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயலை ஈ.பி.டி.பி. வன்மையாகக் கண்டிக்கிறது.

கடத்தியவர்கள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படவும், கூடவே நடராஜா குருபரன் உயிராபத்து இல்லாமல் மீட்கப்படவும், அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று, கருத்துக்களை மதிக்கும் ஜனநாயகக் கட்சி என்ற வகையில் அரசுக்கு ஈ.பி.டி.பி. எடுத்துக் கூறியுள்ளது.

ஊடகவியலாளர்களைக் கொலை செய்வது, அச்சுறுத்துவது, கடத்துவது போன்ற செயற்பாடுகளினால் அவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்களை சாகடித்து விட முடியாது என்பதை ஒவ்வொரு தரப்பும் புரிந்துகொள்ள வேண்டுமெனவும் தெரிவித்துக் கொள்வதோடு, நடராஜா குருபரனை மீட்கும் பணியில் ஈ.பி.டி.பி. தன்னாலான அனைத்து முயற்சிகளையும் எடுத்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறது என்று குறிப்பிட்டிருந்தது.

## "தமிழ் மக்களின் தாயகக் கோட்பாடு சமாதான முன்னெடுப்பின் ஆதார சுருதி"

இலங்கை அரசாங்கத்திற்கு ஜனதா விமுக்தி பெரமுன சமர்ப்பித்திருக்கும் 20 அம்சத் திட்ட யோசனைகளில் மூன்றினை முக்கிய பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்றுக் கொண்டால் எதிர்கால சமாதான முயற்சிகளுக்குப் பெரும் குந்தகம் ஏற்படுமென்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பைப்பிரி, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நீக்கு, சமாதான ஏற்பாட்டாளர் பணியிலிருந்து நோர்வேயை அப்புறப்படுத்து போன்ற இந்த மூன்று கோரிக்கைகளையும் அரசு நிராகரித்திருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கான அழுத்தங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

வடக்கு, கிழக்கு இணைப்பைப் பிரிக்கக் கோரி ஜே.வி.பி. எம்.பி.க்கள் இருவர் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றினைத் தாக்கல் செய்திருப்பதும், தமிழ் மக்கள் மத்தியிலும் சமாதான ஆர்வலர்கள் மத்தியிலும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கை சுதந்திரம் பெற்றதற்குப் பின்னர் கல்லோயாவிலிருந்து முல்லைத்தீவின் கென், டொலர் பாம் வரை மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தமிழ் மக்களின் தாயக மண்ணின் நிலத் தொடர்புகளை துண்டிப்பதற்கான சூழ்ச்சியே என்பது சகல தமிழ்க் கட்சிகளினதும், இயக்கங்களினதும் நிலைப்பாடாகும். திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் இலங்கை சுதந்திரம் பெற்ற 1948ஆம் ஆண்டு ஐந்து சதவீதமாகவிருந்த சிங்கள மக்களின் சனத்தொகை இன்று முப்பத்தெட்டு சதவீதமாக உயர்ந்துள்ளது. இதைப் போன்றுதான் கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. இதனால்தான் 1987ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் வடக்கு, கிழக்கு இணைப்பை தற்காலிகமாகவேனும் வலியுறுத்தி மேற்கொண்டது. எனவே தமிழ் மக்களின் தாயகக் கோட்பாடு தட்டிக் கழிக்கப்படுமானால் இலங்கையின் எதிர்காலம் இருள்மயமாகி விடுமென்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## கண்காணிக்கத் தவறிய கண்காணிப்பாளர்களின் விளக்கம்

யுத்தச் சூழ்நிலையைக் கண்காணிப்பது என்பது சாத்தியமான விடயமல்ல. இரு தரப்புகளுமே யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டு வருகின்றன. நாளாந்தம் பெருமளவு யுத்த நிறுத்த மீறல்கள் இடம் பெறுகின்றன. 'யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்கவே நாம் இங்கு அழைக்கப்பட்டுள்ளோம். யுத்தத்தைக் கண்காணிப்பதற்கல்ல' என்று இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரான தோர்பிநூர் ஓமர்சன் கூறினார். திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற யுத்தம் நடைபெறும் இடங்களிலிருந்து வெளியேறி யுத்தம் நடைபெறாத இடங்களுக்கு ஏன் சென்றீர்கள்? என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு சொன்னார். யுத்தம் மோசமாக நடைபெறுகிறது. யுத்த நிறுத்த மீறல்களும் மிக அதிகமாக இடம்பெறுகின்றன. இதனால் எமக்கு வழங்கப்பட்ட பணிகளைச் சரிவரச் செய்ய முடியாமல் இருக்கிறது என்றார் ஓமர்சன்.

## நாகபட்டினம் பற்றிய அழுத்தத்தினால் யாழ். மக்களுக்கு உணவுப் பொருட்கள்

### -அமைச்சர் டக்ளஸ் விளக்கம்

வடக்கு - கிழக்கில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு பெருந்தொகையான மக்கள் இடம் பெயர்ந்து அல்லற்பட்ட போதும் பத்து நாட்களாக யாழ்.குடா நாட்டுக்கு உணவுப் பொருட்கள் அனுப்பிவைக்கப்படவில்லை. தரைவழிப் பாதை மூடப்பட்டதால், கடல் வழிப் பாதையால் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதில் இருக்கக் கூடிய அபாயத்தை உணர்ந்து கொள்ள முடிகிறது. புலிகள் இயக்கம் யுத்தச் சூழ்நிலையில் உணவுக் கப்பலை கடத்திச் செல்லக்கூடிய ஆபத்தும் இருக்கிறது. இதனால் தான் தென் இந்தியாவின் நாகபட்டினத்திலிருந்து குறுகிய மணித் தியால கால எல்லைக்குள் காங்கேசன் துறைக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல முடியுமென்றும், அதற்குத் தேவையான வழிவகைகளைக் கையாளுமாறும் அரசுக்கு எடுத்துக் கூறினேன். என்று சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

3800 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களுடன் கப்பலொன்று யாழ்ப்பாணம் செல்வதாக முன்பு கூறப்பட்டது. ஆனால் 1500 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களே கொண்டு செல்லப்பட்டிருக்கிறது என்று கேட்டபோதே, அமைச்சர் 3800 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. அப்போது சீரற்ற காலநிலை காரணமாக பொருட்களை ஏற்றுவதில் தாமதம் ஏற்பட்டது. ஆகவே அதற்காக தாமதிக்காமல் ஏற்றப்பட்ட 1500 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை அவசரமாக அனுப்பிவைத்தோம் எனினும் மிகுதி பொருட்கள் இன்னொரு கப்பலில் அனுப்பி வைக்கப்பட உள்ளது என்று கூறினார். யுத்தத்தினால் யாழ்ப்பாண மக்கள் மட்டுமல்ல, கிழக்கில் மூதூரிலும் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி பகுதிகளைச் சேர்ந்த மக்களும் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து படுகின்ற கஷ்டங்களையும் நான் அறிவேன். அரச கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளுக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதில் சிரமங்கள் இருக்கின்றபோதும் உடனடியாக அம்மக்களுக்கான நிவாரணங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனவும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தஞ்சமடைந்திருக்கும் மக்களுக்கும் மேலதிக உணவுப் பொருட்களும் இயன்றவரை விரைவாக அனுப்பிவைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளேன் என்றும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும், யாழ். கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

## புலம் பெயர் வாழ் தமிழர்களுக்கு புலிகளின் நடவடிக்கைகளால் ஆபத்து

### -ஜனநாயகத்துக்கான கனடியத் தமிழர் அமைப்பு

"புலிகளினதும் அவர்களின் முகவர் அமைப்புகளினதும் நடவடிக்கைகள் இந்தியா, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களை தொடர்ச்சியாக மோசமான நிலைக்குத் தள்ளி விடுகிறது. இதனால் அங்கே தமிழ் மக்கள் சந்தேகத்துடனும் நம்பிக்கையீனத்துடனும் பார்க்கப்படுகிறார்கள் என்று ஜனநாயகத்துக்கான கனடியத் தமிழர்கள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. புலிகளின் ஏவுகணை மற்றும் ஆயுதக் கொள்வனவு முயற்சி தொடர்பாகக் கனடாவிலும் அமெரிக்காவிலும் புலிச் சார்புத் தமிழர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பாக விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. புலிகள் சார்பு 'கனடிய குழுக்கள்' இவ்வாறான சிக்கல்களில் அப்பாவித் தமிழ் இளைஞர்களை மாட்டி விட்டிருக்கிறார்கள் என்றும் அந்த அறிக்கை கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நடைபெற்றுவரும் மோதல்கள் குறித்து சரிவரப் புரிந்து கொள்ளாத இளைஞர்களும் மாணவர்களும் புலிகளின் கனடியத் தலைவர்களால் கையாளப்பட்டுத் தவறாக வழி நடத்தப்பட்டிருக்கின்றனர். நாகரிகமடைந்த உலகினால் நிராகரிக்கப்பட்ட பயங்கரவாதத்தைப் புகழ்ந்துபாட வேண்டாமென்றும் இளம் மனதுகளைப் பயங்கரவாதத்தின்பால் தூண்ட வேண்டாமென்றும் தமிழ் அமைப்புகளை நாம் கேட்டுக் கொள்கிறோம். இதற்குப் பதிலாக, எதிர்கால தமிழ் பரம்பரைக்கு ஜனநாயகத் தூரநோக்கைத் தரக்கூடிய, சமாதானத்தை விரும்பும் ஜனநாயகப் பிரஜைகளாக வாழ்வதற்கு அவர்களுக்கு உதவ வேண்டும். மூன்று தசாப்த கால யுத்தத்தையும் அழிவுகளையும் சந்தித்த இலங்கைத் தமிழ் மக்கள், உலகெங்கும் பரந்து வாழ்ந்து, கஷ்டப்பட்டுத் தமக்குப் பிரச்சினைகளற்ற குடியேற்றவாசிகளென்ற பெயரைப் பெற்றிருக்கிறார்கள். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் நற்பெயரை அழித்தொழிப்பதற்குப் புலிகள் இயக்கம் கங்கணம் கட்டி நிற்கிறது. இலங்கையிலுள்ள அப்பாவித் தமிழ் மக்களின் பிள்ளைகளும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களின் பிள்ளைகளும் புலிகளால் பலிக்கடாக்களாக்கப்படும் அதேவேளை, புலி இயக்கம் மற்றும் அதன் முகவரமைப்புகளைச் சேர்ந்த தலைவர்களின் பிள்ளைகளையும் குடும்பத்தினரையும் பாதுகாப்பாகவும் சுபீட்சமான நிலையிலும் வைத்துள்ளனர். இந்த நிலையில் இவ்வாறான பயங்கரவாதச் செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

## முரசம்

### மக்களைப் புறந்தள்ளும் விடுதலையும், சமாதானமும் வேண்டாம்.

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

வடக்கு - கிழக்கு மாகாணம் மீண்டும் மனித நடமாட்டம் அற்ற சூனியப் பிரதேசமாகவும் பதற்றம் நிறைந்தும் காணப்படுகிறது. இதுவரை 220,000 மக்கள் சொந்த இடங்களை வீட்டு இடம் பெயர்ந்துள்ள நிலையில் எஞ்சியிருப்பவர்களும் எங்கே இடம் பெயர்ந்து தமது உயிரைப் பாதுகாப்பது என்ற முடிவுகளோடு இருக்கிறார்கள். வீட்டை வீட்டு வெளியில் செல்லப் பயந்து ஒடுங்கி வீடுகளிலேயே முடங்கிப் போயிருக்கிறார்கள். வாய் திறந்து தேவைகள் பற்றிப் பேசக்கூட அஞ்சுகின்ற நிலை தோன்றியுள்ளது. அநேகமானவர்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தை விட்டு எப்படியாவது வெளியேறி விட வேண்டும் என்பதுவே தற்போதைய நிலைப்பாடாகவுள்ளது.

மக்களின் இந்தப் பதற்றத்தை அதிகரிக்கும் விதமாக புலிகள் அடிக்கடி சில திகதிகளைக் குறிப்பிட்டும், அந்தத் திகதிகளில் தாம் ஒரு சண்டையை நடத்தப்போவதாகவும், மக்களை இடம்பெயர்ந்திருக்குமாறும் எச்சரித்து வருகின்றனர். படைத்தரப்பு மீது தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்துவதும், ஆயுதக் கடத்தல்களும் புலிகளால் தாராளமாக நடத்தப்பட்டு வருகிறது.

மறுபுறத்தில் அரசு, புலிகளுக்கு எதிரான பதில் தாக்குதல்களையும், அடையாளம் காணப்பட்ட இலக்குகள் மீதான தாக்குதல்களையும் தொடர்கிறது. இவ்வாறான தாக்குதல்கள் காரணமாகவும் கணிசமான மக்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர். ஆகவே பொதுமக்களின் தற்போதைய நிலைக்கு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இருதரப்பும் பொறுப்பேற்க வேண்டும்.

ஏனெனில் பொதுமக்கள் எக் கால கட்டத்திலும், ஆயுத மோதல்களை விரும்பியவர்களில்லை. ஒட்டுமொத்த தமிழினமும் ஆயுத வழிப் போராட்டத்தை ஆதரித்து நடத்திய விடுதலைப் போராட்டம் இன்று புலிகளால் சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளதோடு விடுதலையின் பெயரால் பயங்கரவாதம் கோலோச்சும் இந்த நிலையை தமிழ் மக்கள் விடுதலைக்கான போராட்டமாகப் பார்க்கவில்லை. ஆகவே ஆயுத மோதல்களை தமிழ் மக்களும், நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களும் ஒட்டுமொத்தமாக ஒரே குரலில் எதிர்க்கிறார்கள். ஆகவே மக்கள் விரும்பாததும், மக்களுக்கு நன்மையைத் தராததுமான இந்த மோதல்கள் நிறுத்தப்பட வேண்டும். மக்களின் விருப்பங்களையும், எதிர்பார்ப்புகளையும் கவனத்திலெடுக்காமல் எந்தத் தரப்பும் போர் - மோதல் ஒன்றை நடத்திக் கொண்டு அதற்கு நியாயம் கற்பிக்க முயன்றால் அது கண்டிக்கத்தக்கதாகும். மக்களைப் புறம் தள்ளிப் பெறப்படுகின்ற சமாதானமும் விடுதலையும், சாத்தான்களின் இராஜ்ஜியத்திலேயே சாத்தியமாகும். எனவே தொடரும் மோதல்களும், படுகொலைகளும், இடப்பெயர்வுகளும் உடனடியாக ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட, மோதலில் ஈடுபட்டுள்ள இருதரப்பும் வருவதற்கு சர்வதேச சமூகம் விரைந்து செயற்படுவது இன்றியமையாத தேவையாகியுள்ளது.

அரசியல் தீர்வொன்றுக்காக இந்தியா உட்பட்ட சர்வதேச சமூகம் கொடுத்து வரும் அழுத்தம் வரவேற்கக் கூடியதே. அதே வேளை இதற்குச் சமாந்தரமாக படுகொலைகளும், மோதல்களும் நிறுத்தப்பட வேண்டியதையும் வலியுறுத்த வேண்டும். ஒரு பக்கம் ஆயுதமோதல்களை அனுமதித்துக் கொண்டு இன்னொரு பக்கம் அரசியல் தீர்வு, சமாதானம் என்று கூறுவது பெரும் மடமையாகும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**இலங்கையில்** புலிகளுக்கும் அரசாங்கப் படையினருக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் மோதலின் எதிரொலிகள், பாக்கு நீரிணையையும் தாண்டித் தமிழகத்தை உலுப்பிக் கொண்டிருக்கிறது. 'வைகோ' என்றழைக்கப்படும் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை.கோபாலசாமி சென்னை, தியாகராய நகரில் கடந்த 21ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் ஆற்றிய உரையே அங்கு பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவில் பயங்கரவாத இயக்கமென்று தடை செய்யப்பட்டிருக்கும் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாக வைகோ ஆற்றிய உரையே இந்தச் சலசலப்புகளுக்குக் காரணமாகும். "இலங்கையின் இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் இந்தியா குத்தகைக்கு எடுத்துக் கொண்டு விட்டதா?'



# வைகோ வைக்காதே ஈழத் தமிழர்களுக்கு தீ!

என்று கேள்வி எழுப்பிய அவர், "இலங்கையில் சிங்களப் படையை அடக்க இந்தியா முனையாவிட்டால் தமிழகம் காஷ்மீராக மாறும்" என்று பேசியுள்ளார். அத்துடன் வைகோவின் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தென் சென்னை அமைப்பாளர் மணிவரன் என்பவர், "இலங்கைப் படைகளைக் கட்டுப்படுத்த இந்தியா தவறினால் தமிழக இளைஞர்கள் ஏ.கே.47 ரக ரைபிள்களுடன் தமிழக வீதிகளில் வலம் வர வேண்டிய நிலை ஏற்படும்" என்று கூறியுள்ளார். இதனையடுத்து மணிவரன் கைது செய்யப்பட்டார். தியாகராயநகர் பொலிஸ் நிலையத்திலும் மாம்பலம் பொலிஸ் நிலையத்திலும் வைகோவுக்கு எதிராகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவர் கைது செய்யப்படலாமென்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டாலும், இதுவரை அவர் கைது செய்யப்படவில்லை.

திருமங்கலத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய வைகோ, "நேற்றும் நான் எல்.ரி.ரி.ஈ.யை ஆதரித்தேன். இன்றும் ஆதரிக்கிறேன். நாளையும் ஆதரிப்பேன். பொடா சட்டம் (பயங்கரவாதத் தடைச் சட்டம்) குறித்து நான் பயப்படவில்லை. பொடாவை விட மிக மோசமான சட்டங்களைச் சந்தித்திருக்கிறேன்" என்று கூறியுள்ளார். இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ள புலி இயக்கம் உட்பட எந்தவொரு பயங்கரவாத இயக்கத்துக்கும் ஆதரவு தரும் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாதென்று பொடா சட்டம் தடை செய்கிறது. பயங்கரவாத இயக்கமொன்றில் அங்கம் வகித்தால் அல்லது ஆதரவு தெரிவித்தால் பத்து வருடங்கள் சிறைத் தண்டனை வழங்க முடியும்". "பயங்கரவாத இயக்கங்களுக்கு நிதி சேகரித்தால் ஆகக் கூடியது 14 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்க முடியும்" என்று பொடா சட்டத்தின் 21ஆவது பிரிவு கூறுகிறது. பயங்கரவாத இயக்கமொன்றுக்கு ஆதரவை ஊக்குவிப்பதற்கோ அல்லது அதன் நடவடிக்கைகளை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்காகவோ நபரொருவர் கூட்டமொன்றில் உரையாற்றினால், அவர் குற்றச் செயலொன்றினை இழைக்கிறார் என்று 'பொடா' சட்டத்தின் 21 (3) ஆவது பிரிவு கூறுகிறது.

1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி தமிழகத்திலுள்ள ஸ்ரீ பெரம்புதூர் என்ற இடத்தில் தேர்தல் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த ராஜீவ் காந்தி, தனு (தேன்மொழி இராஜரட்னம்) என்ற புலிகளின் பெண் தற்கொலைக் குண்டுதாரியால் கொலை செய்யப்பட்டார். இதனையடுத்து 1992ஆம் ஆண்டு புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமென இந்தியாவில் தடைசெய்யப்பட்டது. இன்று வரை அந்தத் தடை உத்தரவு நீடிக்கப்பட்டு வருகிறது. இக் கொலை வழக்கில் புலி இயக்கத் தலைவர் பிரபாகரன் முதலாவது எதிரியாகவும் புலிகளின் உளவுத்துறைத் தலைவர் பொட்டம்மான் இரண்டாவது எதிரியாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். இவர்கள் இருவரும் தேடப்படும் சந்தேக நபர்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருப்பதோடு இது குறித்து சர்வதேச பொலிஸ் பிரிவான இன்டர்போலுக்கும் இலங்கைக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. முருகன் - நளினி தம்பதியர் உட்படப் பலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதோடு, வேறு பலருக்கு சிறைத்தண்டனைகளும் விதிக்கப்பட்டன. நளினியின் மரண தண்டனை பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

வைகோவின் உரையைத் தமிழக சட்ட சபையில் வன்மையாகக் கண்டித்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பீட்டர் அல்போன்சஸ், இந்தியாவின் இறையாண்மைக்கும் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் கூட சவாலாக இருப்பதாகக் கண்டனம் தெரிவித்தார். இந்திய மத்திய அரசின் இலங்கை தொடர்பான கொள்கையையே தற்போது பின்பற்றிவரும் தமிழக முதல்வர் கருணாநிதி, இந்த விவகாரத்தைச் சட்ட சபையில் கையாண்டபோது பெரும் சங்கடத்திற்குள்ளானார்.

"இந்திய நிலைப்பாட்டின்படி இலங்கைத் தமிழர்களின் விவகாரத்தை இரு கட்டங்களாகப் பிரிக்க முடியும். ராஜீவ் காந்தி கொலைக்கு முன்பான காலம், ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்பான காலம் என்று இரண்டாகப் பிரிக்க முடியும். ராஜீவ் காந்திக்குப் பின்பான காலம் உருவாக்கப்பட்டிருக்காவிட்டால், தமிழ் ஈழத்தின் நிலைமை இன்று முற்றுமுழுதாக வேறுபட்டிருக்கும்" என்று குறிப்பிட்டார். அதாவது தமிழகத்தில் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டமை, புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைத் தமிழகத்தில் மட்டுமல்ல, முழு இந்தியாவிலுமே தோற்றுவித்திருக்கிறது என்பதே கலைஞர் கருணாநிதியின் வார்த்தை வெளிப்பாடாகும். 1983ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான இன ஒடுக்குமுறை இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்குச் சார்பாகவே பெரும் அனுதாப அலைகளை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மிதவாதத் தலைவர்களான அமிர்தலிங்கம் போன்றோர் சிங்களப் பேரினவாத அரசுகளின் ஒடுக்குமுறைக்கும் அடக்குமுறைக்கும் எதிராக முன்னெடுத்துச் சென்ற பிரசார யுத்தம், தமிழீழ ஆயுதப் போராட்டக் குழுக்களுக்கு பெரும் உத்வேகத்தையும் உதவியையும் பெற்றுத் தந்தது. இந்திய மத்திய அரசும் தமிழக மாநில அரசும் தமிழீழக் குழுக்களின் போராட்டத்திற்கு ஆயுதம், பணம், பயிற்சி ஆகியவற்றை வழங்கியிருக்கின்றன. 1983 ஜூலை இனசங்காரத்துக்குப் பின்னர், புதுடில்லி செங்கோட்டையில் நடைபெற்ற இந்திய சுதந்திர தினவிழாவில் தலைவர் அமிர்தலிங்கத்தைப் பிரமுகர் வரிசையில் இருத்தி அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி கௌரவித்தமை, அன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு எரிச்சலூட்டியது. இந்தியத் தலையீட்டுடன் தான் 1985 ஜூலை - ஆகஸ்டில் திம்புப் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றன. கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.இராமச்சந்திரன், ஜெயலலிதா உட்பட முக்கிய தமிழகத் தலைவர்களின் அபரிமிதமான ஆதரவு ஈழத் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்துக்குக் கிடைத்து வந்தது.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்காக ராஜீவ் காந்தியின் முன்முயற்சியின் பேரில் முன்வைக்கப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம், புலிகளினதும் ஜனாதிபதி பிரேமதாசாவினதும் கூட்டு முயற்சியினால் முறியடிக்கப்பட்ட பின்னர், இலங்கையில் நிலைமை மாற்றம் பெற்றது. இன்னொரு வார்த்தையில் சொல்வதானால், இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சியை இரு கட்டங்களாகப் பிரிக்கலாம். இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு முந்திய காலம், பிந்திய காலம் என்று இரு கட்டங்களாகப் பிரிக்கலாம். இலங்கையிலிருந்து இந்திய அமைதிப் படை 1990 மார்ச்சில் வெளியேறியது. ஒரு வருடம் கழிந்த பின்னர் 1991ஆம் ஆண்டு மே மாதம் ராஜீவ் காந்தி புலிகளால் கொல்லப்பட்டார்.

எனவே, காலவோட்டத்தில் தமிழீழப் போராட்டம் கானல் நீராகிப் போய்விட்டதென்பதை ஏற்றுக் கொண்டுதானாக வேண்டும். இனியும் தமிழீழத்துக்காகப் போராடுபவர்கள் அடிமுட்டாள்களென்றுதான் கூறவேண்டும். இந்த முட்டாள்களுக்குச் சாமரம் வீசும், வைகோ போன்ற தமிழக உதிரிகளை யாரும் முட்டாள்களென்று கூற முடியாது. புலி இயக்கப் பிரசாரத்தையும் போராட்டத்தையும் தமிழகத்தில் முன்னெடுத்துச் செல்வதற்காக, 82 கோடி ரூபா இந்தியப் பணத்தைக் கையேற்றுக் கொண்ட வைகோவும் அவரது கூட்டாளிகளும் மாரித் தவளைகள் போல் கத்தித் தானாக வேண்டும். அதற்காக ஐம்பது பேரைக் காசு கொடுத்து விலைக்கு வாங்கி, சென்னையிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்துக்கு முன்னால் இந்து முன்னணி என்ற பெயரில் ஆர்ப்பாட்டம் நடத்தாவிட்டால் நன்றிக் கடனை, அடைக்க முடியாதவர்களாகி விடுவார்கள். புரட்சிகர முன்னணியென்ற பெயரில் போராட்டம் நடத்தியவர்களும் கைக் கூலிகளே.

1989ஆம் ஆண்டு ராஜீவ் காந்தியின் அறிவுறுத்தலின் பேரில் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தானெடுத்த முயற்சி, வைகோ கள்ளத்தனமாகத் தனக்கு அறிவிக்காமலேயே படகு மூலம் வன்னிக்குச் சென்று பிரபாகரனைச் சந்தித்துப் பேசியதால் முறியடிக்கப்பட்டதென்று கருணாநிதி கூறியுள்ளார். தி.மு.க.வில் அப்பொழுது அங்கம் வகித்த வைகோ, 1989 பெப்ரவரியில் முல்லைத்தீவுக்குச் சென்றார். பதின்மூன்று வருட இடைவெளிக்குப் பின்னர் அப்போதுதான் தமிழக ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றிருந்த கலைஞர் கருணாநிதிக்கு அது பெரும் தலையிடியாக அமைந்திருந்தது. தமிழக சட்டசபையில் 181 ஆசனங்களை அப்போது கொண்டிருந்த தி.மு.க., ராஜீவ் கொலைக்குப் பின்னர் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் இரண்டே இரண்டு ஆசனங்களை மட்டுமே கைப்பற்றியது. அந்தளவுக்கு எழுந்த புலி எதிர்ப்பு அலையை, வைகோ அல்ல, வைகோவின் அப்பனுக்கு அப்பன்கள் வந்தாலும் அடக்கி விட முடியாது.

புலிகள் நடத்தும் யுத்தம், அதிகளவு பாதிப்புகளைத் தருவது தமிழ் மக்களுக்குத்தான். யுத்த நிறுத்தத்தின் பின்னர் பெருமளவுக்கு அமைதியாகவிருந்த வடக்கு - கிழக்கில், கடந்த டிசம்பரில் படையினர் மீதான தாக்குதல்களைப் புலிகளே ஆரம்பித்தனர். பொங்கியெழும் தமிழ் மக்கள் தாக்குதல் நடத்துவதாகக் கூறிக்கொண்டு, மக்களுக்குள் புலிகள் பதுங்கிக் கொண்டார்கள். இராணுவத் தளபதி, மூன்றாம் நிலைத் தளபதி, இராணுவ அதிரடிப் படைப் பயிற்சிப் பிரிவுத் தலைவர் மீதெல்லாம் புலிகளே தாக்குதல் நடத்தினர். கெப்பிட்டிகொல்லாவையில் அறுபதுக்கு மேற்பட்ட அப்பாவிச் சிங்கள மக்களைக் குண்டு வைத்துக் கொன்று ஆயிரத்துக்கு மேற்பட்டோரை அகதிகளாக்கினார்கள். மாவிலாறு அணைக் கட்டை மூடி, பதினைந்தாயிரம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை தண்ணீரின்றி வாட வைத்தனர். இராணுவத் தளபதி மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலின் பின்னரே விமானக் குண்டு வீச்சுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆரம்பித்தன. புலிகள் கடந்த பதினோராம் திகதி யுத்தத்தைத் தொடங்கிய பின்னர், விமானப்படை பதிலடி கொடுத்து வருகிறது. போதாக்குறைக்கு மூதூருக்குள் புகுந்து, மோதலை ஆரம்பித்து 35,000 இற்கு மேற்பட்ட தமிழ் பேசும் முஸ்லிம் மக்களை அகதிகளாக ஓட வைத்தனர். விளைவு. இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் அகதிகளாகியுள்ளனர். பல்லாயிரக் கணக்கானவர்கள் ஆயுதங்களுக்கு இரையாகி விட்டார்கள். உணவின்றி, இயல்பு வாழ்க்கையின்றி, வாழ்வோடும் மரணத்தோடும் போராட வேண்டிய நிலைக்கு வடக்கு - கிழக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஈழத் தமிழர்களின் இந்தக் கஷ்டங்கள் வைகோவுக்கு தெரியாமலிருக்கலாம். படையினர், அத்துமீறல்களில் ஈடுபடாத காந்தியவாதிகளென்று நாம் சொல்ல வரவில்லை. புலிகளின் அத்துமீறல்களைப் போல், படையினரின் அத்துமீறல்களும் தமிழ் மக்களைத்தான் பாதிக்கின்றன. இந்தக் கஷ்டங்கள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டுமென்றால், யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமென்றால், யுத்தத்தை ஆரம்பித்த புலிகள் சமாதான மேசைக்குத் திரும்ப வேண்டும். வைகோ, வேண்டுமானால் இந்திய அரசியலைப் பற்றி மட்டும் பேசு. தயவு செய்து வைக்காதே ஈழத் தமிழர்களுக்குத் தீ.

## ஊரிலிருந்து....



**போ**ராட்டம் போராட்டம் எண்டு காட்டிக் கொண்டு எல்லா தஞ்சம் புகக்கூடிய நாடுகளிலையும் போராட்டம் நடத்தி, படங்களையும் விலாசமாய் பிரசுரிச்சுப் போட்டினம். ஆனா காலுக்குள்ள நடந்த முக்கியமான விஷயத்தை மட்டும் தெரிஞ்சுக் கொண்டே மறந்து போட்டினம்.

வேற என்ன?

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்குப் போன வெளிநாட்டு பிரஜா உரிமை பெற்ற ஆக்களிண்ட ஒருத்தரிண்ட பேட்டியைத் தன்னும் எவரும் பிரசுரிக்கவில்லை. ஏன் தெரியுமோ? அவ்வளவு பேரும் கரிச்சுக் கொட்டினது அரசாங்கத்தையோ அல்லது படைத்தரப்பையோ இல்லை. யாரை எண்டு தெரியும் தானே?

## விடுதலைப் போராட்டமா? அல்லது...?

**இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளென்று தமக்குத் தாமே மகுடம் சூட்டிக் கொண்டிருக்கும் புலிகள் இயக்கம், இன்று நடத்திக் கொண்டிருப்பது தமிழ் மக்களின் விடிவுக்கான போராட்டமல்ல. தமிழ் மக்களின் முடிவுக்கான முஸ்தீபு என்றே கூறலாம். 1972ஆம் ஆண்டு இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ்த் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, நாடு பிரிவினைக்கான, அதாவது தமிழீழத்துக்கான பிரகடனத்தை முன்வைத்தனர். சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிராக அஹிம்சை ரீதியில் நடத்திய போராட்டங்கள் தோல்வியுற்ற நிலையில், தமிழீழக் கோஷம் முன்வைக்கப்பட்டது. அதனை அடைவதற்கான எந்தவித வேலைத் திட்டங்களும் இல்லாமல் வெறுமனே தேர்தல் மூலம் அதற்கான தமிழ் மக்களின் ஆணையைப் பெறுவதற்காக மட்டும் தமிழீழக் கோஷத்தை, முன்வைத்தனர். இலங்கை அரசுகளின் தொடர்ச்சியான ஒடுக்குமுறைகளால் வீரக்தியுற்ற தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்ட வழிமுறைகளை நாடினார்கள்.**

**அதற்கு 1983ஆம் ஆண்டின் இனசங்காரம் உந்து சக்தியாகத் திகழ்ந்தது. அப்போது 36 தமிழ் ஆயுதக் குழுக்கள் தோற்றம் பெற்றதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்திய ஈடுபாட்டுடன் மேற்கொள்ளப்பட்ட திம்புப் பேச்சுவார்த்தையில் ஐந்து பிரதான தமிழ் ஆயுதக் குழுக்களும் மிதவாதக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியும் பங்குபற்றின. திம்புப் பேச்சு தோல்வியில் முடிந்தது. தமிழ் மக்களின் தனிக்காட்டு ராஜாவாகத் தானே திகழ வேண்டுமென்று நினைத்த புலிகள் இயக்கம், தனக்கு 'ஆமாம் சாமி, போட்ட ஈரோஸ் இயக்கத்தைத் தவிர ஏனைய அனைத்து தமிழீழக் குழுக்களையும் வேட்டையாடியது. தடை செய்தது. சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்ப் போராளிகளையும் அவர்களின் ஆதரவாளர்களையும் 1996 டிசம்பருக்கு முன்னரேயே கொன்றொழித்தது. 1987இல் ராஜீவ் காந்தியின் முயற்சியால் கொண்டுவரப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நசுக்கியதோடு, 1400 இந்தியப் படையினரையும் இலங்கை மண்ணில் கொன்றொழித்தது. மிதவாதக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தடை விதித்ததோடு அமிர்தலிங்கம் உள்ளிட்ட தமிழ்த் தலைவர்களையும் கொன்றொழித்தது. பத்மநாபா, ஸ்ரீசபாரத்தினம், அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், சாம் தம்பிமுத்து, சரோஜினி யோகேஸ்வரன் உள்ளிட்ட ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ்த் தலைவர்களையும் புலிகள் இயக்கமே கொன்றது. இந்திய அமைதிப் படைக்கு எதிரானப் போராட்டத்தின் மூலமும் ராஜீவ் காந்தியைக் கொன்றதன் மூலமும் ஏந்திய எதிர்ப்பையும் புலிகள் இயக்கம் சம்பாதித்துக் கொண்டது. தமிழ் இளைஞர்கள் ஏந்திய ஆயுதங்கள் அரசியல் தீர்வொன்றினை முன்வைக்கும் கடப்பாட்டுக்கு இலங்கை அரசுகளைத் தள்ளிய அதேவேளை, புலிகளின் ஆயுதங்கள் தமிழர்களைப் பல்லாயிரக்கணக்கில் கொன்றொழித்தது. தமிழர்களின் போராட்ட மார்க்கமும் திசை மாறியது. சிங்களப் படைகள் கொன்ற தமிழர்களை விடப் புலிகள் கொன்ற தமிழர்களின் தொகை அதிகம். இலட்சக்கணக்கான தமிழ் பேசும் முஸ்லிம்களும் புலிகளின் அடாவடித்தனங்களுக்கு இலக்கானார்கள். வடக்கிலிருந்து விரட்டப்பட்டார்கள். கிழக்கில் வகைதொகையின்றிக் கொல்லப்பட்டார்கள். ஒன்றுமறியாத அப்பாவிச் சிங்கள மக்களையும் கொன்றார்கள். பிரபாகரனுக்கு தேவை தமிழீழத் தனிநாடு. சர்வதேச சமூகமோ, இந்தியாவோ ஏன் இலங்கை மக்களோ ஆதரவளிக்காத, புலிகளின் போராட்டம் பயங்கரவாத யுத்தமேயொழிய, விடுதலைப் போராட்டமல்ல. தமிழ் மக்கள் கோருவது கௌரவமான நீடித்து நின்று நிலைக்கக்கூடிய அரசியல் தீர்வு மட்டுமே. அதற்கு முன்னோடியாகத் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை, வாழ்வுரிமை மனித உரிமை, பன்முகத்தன்மைக்குப் புலிகள் இடமளிக்க வேண்டும்.**

# இடம் பெயர்ந்தவர்களின் தீர்க்கப்படாத இடர்ப்பாடுகள்



அலசுவது
**- மதியூகி -**

**வடக்கு** - கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவி வரும் அசாதாரண நிலைமை காரணமாக சுமார் 204602 பேர் தங்கள் இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. இந்த மக்களுக்கான நிவாரண வழங்கலும் ஏனைய பிற உதவிகளும் வழங்கும் பணியானது பெரும் சவாலானதாக எதிர்கொள்ளப்பட்டு வருகிறது. அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து இந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

இருந்தாலும் மக்கள் நாளாந்தம் தமது இடங்களிலிருந்து இடம் பெயர்வதும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. ஆகையால் இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வாரமும் அரச அதிபர் தலைமையிலான கூட்டங்களும், கலந்தாய்வுகளும் கச்சேரிகளில் நடைபெற்று வருகின்றன. பகுதி பிரதேச செயலாளர்களும், அரசு உத்தியோகத்தர்களும் இப்பணியில் முடுக்கி விடப்பட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு அகதி முகாமின் பராமரிப்புக்கும் அந்தந்தப் பகுதி கிராம சேவகர்களுடன் ஒவ்வொரு அரச சார்பற்ற நிறுவனம் இணைக்கப்பட்டு நிவாரண மற்றும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கிடையே வீடுமுறைக்காலம் முடிந்து பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான காலமும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பாடசாலைகளில் அகதிகளாகத் தங்கியிருக்கும் மக்களைப் பராமரிப்பதில் ஒரு நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

சில பாடசாலைகளில் ஒரு பகுதியை அகதிகளுக்கு வழங்கி விட்டு, இரண்டு நேர அமர்வுகளாக மாணவர்களுக்குக் கற்பிக்க முடியும் என்ற ஆலோசனைகளும் முன்மொழியப்பட்டுள்ளன. சில பாடசாலைகளுக்கு இந்த யோசனை பொருந்துகின்ற போதும் நகர்ப்புறங்களை அண்டிய பகுதிகளில் இருக்கும் பிரபலமான பாடசாலைகள், பாடசாலைகளை மீளத்தரும்படியான கோரிக்கைகளை முன் வைத்திருக்கின்றன.

இது தவிரவும் தற்காலிகக் கொட்டில்களை அமைக்கும் பரிந்துரைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான அவசர நடவடிக்கைகளை அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

மூதூரில் நடந்த மோதல்களைத் தொடர்ந்து முஸ்லிம்கள் இடம் பெயர்ந்து கந்தளாய், கிண்ணியா, திருமலை நகரம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். இதுபோலவே அப்பகுதி தமிழ் மக்களும் கணிசமான அளவில் இடம் பெயர்ந்துள்ளனர்.

மொத்தமாக முஸ்லிம்கள் 52520 பேர் மூதூரையும் அதனை அண்டிய பகுதிகளையும் விட்டு வெளியேறியுள்ளனர் என அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு அண்மையில் தெரிவித்தது. இவர்களில் இதுவரை மீண்டும் மூதூருக்குச் சென்று சுமார் 150 குடும்பங்கள் அங்கு தற்காலிகக் குடிசைகளை அமைத்து நிவாரணத்தை நம்பி வாழ்பவர்களாக உள்ளனர். குறிப்பாக மூதூர் பெரும்பகுதியும், தோப்பூர், கிளிவெட்டி, இருதயபுரம், தங்கநகர், லிங்கபுரம், மேன்காமம், கங்குவெளி, குமாரபுரம், இறால்குழி, ஈச்சந்தீவு, நாவலடி, பாரதிபுரம், கட்டைப்பறிச்சான், பெரியவெளி, மணல்சேனை, மல்லிகைத்தீவு, சகாயபுரம், முட்டித்திடல், முன்பொடிவெட்டை, நாராயணபுரம், சேனையூர், பாலத்தோப்பூர், பாலத்தடிச்சேனை ஆகிய பகுதிகளிலிருந்து மக்கள் முற்றாக இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களில் கந்தளாய், கிண்ணியா போன்ற பகுதிகளில் உள்ள முகாம்களினதும் அகதிகளினதும் விபரங்களைப் பெறுவதில் உரிய அதிகாரிகளைத் தொடர்புகொள்ள முடியவில்லை. திருமலை பட்டினமும் சூழலும் பகுதியில், 1237 குடும்பங்களைச் சேர்ந்த 3877 பேர் அகதிகளாக உள்ளனர். இவர்களில், சென்.ஜோசப் கல்லூரியில் 184 குடும்பங்களைச் சேர்ந்த 562 பேர் உள்ளனர். இங்கு மேலும் அகதிகள் வந்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அதேபோல் புனித வளநார் தமிழ்ப் பாடசாலையில் 116 குடும்பங்களைச் சேர்ந்த 353 பேரும், சென்.மேரீஸ் கல்லூரியில் 92 குடும்பங்களைச் சேர்ந்த 353 பேரும், கோணலிங்கம் மகா வித்தியாலயத்தில் 81 குடும்பங்களைச் சேர்ந்த 211 பேரும், தமிழ் அகதிகளும், அல் மதினா மகா வித்தியாலயத்தில் 123 குடும்பங்களைச் சேர்ந்த 479 பேரும், சாகிரா மகா வித்தியாலயத்தில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேரும், ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 37 குடும்பங்களைச் சேர்ந்த 124 பேரும், மொகமதியா பெரிய பள்ளிவாசலில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 130 பேரும், முஸ்லிம் அகதிகளும், வீவேகானந்தா கல்லூரியில் 106 குடும்பங்களைச் சேர்ந்த 296 பேரும், சென். சேவியர் மகா வித்தியாலயத்தில் 105 குடும்பங்களைச் சேர்ந்த 313 பேரும், சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் 82 குடும்பங்களைச் சேர்ந்த 256 பேரும், இந்துக் கலாசார மண்டபத்தில் 111 குடும்பங்களைச் சேர்ந்த 324 பேரும், ஆர்.கே.எம்.இந்துக் கல்லூரியில் 88 குடும்பங்களைச் சேர்ந்த 248 பேரும், லூர்த்து மாதா தேவாலயத்தில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேரும், சென் மெதடிஸ்த மகளிர் கல்லூரியில் 53 குடும்பங்களைச் சேர்ந்த 146 பேருமாக மொத்தம் 1237 குடும்பங்களை சேர்ந்த 4879 பேர் தஞ்சம் புகுந்துள்ளனர். குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையில் நாளுக்கு நாள் அதிகரிப்பு ஏற்படுவதாகவும் தெரிய வருகிறது. இது தவிர, இதேயளவானவர்கள் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளிலும் இருக்கலாமென்றும் கூறப்படுகிறது. இங்கு இடம் பெயர்ந்துள்ள மக்களின் தேவைகளை, கவனித்துக் கொள்ளும் பணியில் திருமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளரும் நேர்த்தியாக ஈடுபட்டுள்ளதை அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் மூலமாக அறியமுடிகிறது.

இதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்புக்குள்ளிருந்து இடம் பெயர்ந்தவர்கள் ஒரு பகுதியாகவும், மூதூர் மோதல்களைத் தொடர்ந்து இடம் பெயர்ந்தவர்கள் ஒரு பகுதியாகவும் இருக்கின்றனர்.

இவர்களில் மூதூரிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் 8499 குடும்பங்களைச் சேர்ந்த 31049 பேர் அகதிகளாக உள்ளனர். இவர்களில் வாகரை, கதிரவெளிப் பகுதிகளில் மாத்திரம் 6400 குடும்பங்களைச் சேர்ந்த 24380 பேர் அகதிகளாகவுள்ளனர். இது தவிரவும், அங்கு இருந்து இடம் பெயர்ந்த மக்கள் பிரதேச வாரியாகக் கிடைத்த தகவல்களின்படி களுவாஞ்சிக்குடியில் 182 குடும்பங்களைச் சேர்ந்த 625 பேரும், போரைதீவுப்பற்று - வெள்ளாவெளியில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 78 பேரும், ஏறாவூர்பற்று - செங்கலடியில் 97 குடும்பங்களைச் சேர்ந்த 316 பேரும், மண்முனைப்பற்று ஆரையம்பதியில் 83 குடும்பங்களைச் சேர்ந்த 301 பேரும், கோரளைப்பற்று வாழைச்சேனையில் 1165 குடும்பங்களைச் சேர்ந்த 3614 பேரும், மண்முனை வடக்கு மட்டக்களப்பில் 459 குடும்பங்களைச் சேர்ந்த 1460பேரும், தமிழ் அகதிகளும், கோரளைப்பற்று மத்தி - ஓட்டமாவடியில் 31 குடும்பங்களைச் சேர்ந்த 145 பேரும், ஏறாவூர் மத்தியில் - 5 குடும்பங்களைச் சேர்ந்த 17 பேரும், காத்தான்குடியில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 55 பேரும், ஓட்டமாவடியில் 28 குடும்பங்களைச் சேர்ந்த 84 பேருமாக முஸ்லிம்களும் உள்ளனர். இது தவிரவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்...)

## அதிரடி அய்யாத்துரை



**முடிவுகளை** எடுக்கேக்க லேட்டா எடுத்தாலும் லேட்டஸ்ட்டா எடுக்கிறது சரி, ஆனால் மலையகத்தைச் சேர்ந்த தலைமைகள் லேட்டாவும் இல்லாமல் லேட்டஸ்ட்டாகவும் இல்லாமல் எல்லோ எடுத்திருக்கினம். ஏழுமுகத்தார் சொல்லுறார், "ஆரம்பத்தில இருந்து சப்போர்ட் குடுத்தனாங்கள். இப்ப வெளிப்படையா குடுக்கிறம்" எண்டு. அவர் சந்திரமான சேகரத்தார் சொல்லிறார், "இன்னும் ஆறு வருஷத்துக்கு இவர்தான் அதிகாரத்தில இருக்கப்போறார். ஆகையாலை இணைஞ்சு கொண்டு தான் எங்கட மக்களுக்கு சேவை செய்ய வேணு"மெண்டு.

தலைக்கொரு அமைச்சு, வாலுக்கொரு அமைச்சு எண்டு பதவிகளுக்காகத்தான் இவை சப்போர்ட் பண்ணினம். இவையிட்ட கொள்கையுமில்லை. கோட்பாடும் இல்லை. எண்டு நான் சொல்லயில்லை ஊர் சொல்லுது.

உதே முடிவை அண்டைக்கு அருளான சாமியாரும், சுரேஷான வடிவேலர் போன்றவை எடுக்கேக்க, அவை துரோகிகள், காட்டிக் கொடுக்கினம், சுயநலவாதிகள் எண்டெல்லாம் குய்யோ முறையோ எண்டு கத்திச்சினம். இப்ப இவையும் அவற்றையே செய்திருக்கினம்! அரசியல் தூரதிருஷ்டி எண்டது கொஞ்சம் குறைவுதான் எண்டு சில பேர் பதிலடி கொடுக்கினம்.

யார் என்னமும் சொல்லட்டும். அதிகாரம் இருந்தால் தான் நாம் சார்ந்த சமூகத்துக்கு நன்மையை - உதவியைச் செய்யலாமெண்ட யதார்த்தத்தை புரிஞ்சு கொள்ளாமல் மக்களை தவிக்க விட்டுப் போட்டு எதிராக நிண்டு கோவணத்தைக் கட்டவோ, அவிழ்க்கவோ எண்டு கத்திறதில அர்த்தமில்லையுங்கோ. என்ன உது தான் முடி வெண்டால் உதை எடுக்கிறதுக்கு இடையில கதைச்ச கதைகளும் காட்டின குத்துக்கரணங்களும்தான் கொஞ்சம் ஓவராப்போயிட்டுதுங்கோ...

**அதிகாரமானவரை** எங்கட கூத்தமைப்புக்காரர் போனவாரம் அவரின்ர மாளிகையில சந்திச்சு ஒரு பேச்சு நடத்திச்சினம். அதில படைத்தரப்பு அப்பிடி செய்யுது இப்பிடிச் செய்யுது எண்டும், மக்கள் அகதிகளாகி இருக்கினம் எண்டும் ஏதோ ஒரு பக்கமாக தலை வீங்கினவை மாதிரி கதைச்சினமாம். உவையின்ர உந்த ஜில்மாலுக்கு மசிவாரே அதிகாரமானவர். அவரும் சூடாகிப் போயிட்டாராம். அவர் அதிகாரத்துக்கு வந்ததுக்குப் பிறகு கோபப்பட்ட சந்தர்ப்பம் அதுதானாம் எண்டு சொல்லிச்சினமுங்கோ. ஏதோ படைகளுக்கு புது வியாதி ஏதும் வந்து அவை சும்மா சண்டைபிடிச்சினம் எண்ட கணக்காகவும், மக்கள் சும்மா விஷர் பிடிச்சு இடங்களை விட்டு இடம் பெயர்ந்து திரியிறதாகவும் கூத்தமைப்புக்காரர் கதைக்கினமே எண்டதுதானுங்கோ அதிகாரமானவரின்ர கோபத்துக்குக் காரணமாம். புலிகள் தாக்கிச்சினமே, தண்ணியைத் தடுத்துச்சினமே, குண்டு வக்கினமே, மக்கள் பாதிக்கப்படுகினமே, சண்டை நிறுத்தம் எண்டது இருதரப்புக்கும் வலியுறுத்தப்பட வேண்டிய விஷயமே எண்டதையெல்லாம் விழுங்கிப்போட்டு கூத்தமைப்புக்காரர் கதைச்சவையாம். இடையில அதிகாரமானவர் உந்தக் கதையை ரெண்டெழுத்தாருக்கும் சொல்லி, அவையையும் தாக்குதல்களை, படுகொலைகளை நிறுத்தச் சொல்லுவியளோ எண்டு கேட்டதுக்கு முன்வரிசையில இருந்த கூத்தமைப்புக்காரருக்கு தொண்டை அடைச்சு முழி பிதுங்கிச்சுதாம். உதில கதையை மாத்தி ஏ-9 வீதியைத் திறக்க ரெண்டெழுத்தாருக்கு விருப்பமாம் எண்டிச்சினமாம். அதுக்கு அதிகாரமானவர் "அவைக்கு விருப்பம் எண்டால் நேரடியாக எனக்குச் சொல்லச் சொல்லுங்கோ. நீங்கள் சொல்லாதேங்கோ" எண்டாராம். உப்பிடி அண்டைக்கு நடந்த சந்திப்பில கூத்தமைப்பார் அசடும், அழுக்கும் வழிய வழியத்தான் வந்தவையாம்.

உதுக்கிடையில சுரேஷானவர் ஏதோ மனசு உடைஞ்சவர் மாதிரி கடைசி ஆசனத்தில் போய் 'கம்' என்று இருந்திட்டாராம். அவருக்கும் கூத்தமைப்புக்கும் இடையில அவ்வளவாகச் சரியில்லையாம் எண்டும் சொல்லினமுங்கோவ்...

**யாழ்ப்பாணத்து** சர்வகலாசாலையில பிள்ளையளை படிக்க விட்டுப் போட்டு பெத்ததுகள் நிம்மதியில்லாம இருக்கிற நிலைமையாகிட்டுதுங்கோ. ஒரு சிலர் செய்யிற குழப்படி அந்த சமூகத்தையும், மற்ற மாணவர்களையும் பாதிச்சுப் போடுமோ எண்ட கவலை தானுங்கோ எனக்கு லேட்டஸ்ட் கவலை.

கலாசாலைக்குள்ள இருந்து கொண்டு உவர் குதிரைக் கஜேந்திரன்தான் குடா நாட்டில நடந்த அத்தனை வன்முறைகளையும், கொலைகளையும் செய்தவர் எண்டது பழைய கதை. அப்புடி அவர் செய்யிறதுக்கு வலது இடது கையாக இருந்தவை ஒண்டிரண்டு பேர். அதில முக்கியமானவர் தான் பகிரதன் எண்டினம். அங்கு படைத்தரப்பு சோதனை நடத்தேக்க, வெளியாலை பூட்டின அறைக்குள்ள ஒளிஞ்சு கொண்டு இருந்தவர். அவரைப் பிடிச்சு ரெண்டு மாசத்துக்கு வெளியில வர முடியாத தடுப்பும் செய்திருக்கினம். இப்ப என்னடாவெண்டால் அவரை விடுவிக்க வேணுமெண்டு வொயிஸ் குடுங்கோ எண்டு அழுத்தத்துக்கு மேல அழுத்தம் குடுபடுகுதாம், அதாலை சில புரபோஸர் மார் தொடர்ந்து யாழில இருக்கிறதோ, இல்லாட்டில் கொழும்புக்கு ஓடிறதோ எண்டு திங் பண்ணினமாம்.

மாணவர்களின்ர கல்வியைக் குழப்பின கஜேந்திரனார், நமக்கு மட்டுமில்லையுங்கோ எதிர்கால சந்ததிகளின்ர வாழ்க்கைக்கும் ஆப்பு வச்சுப் போட்டாருங்கோ. இனியும் மாணவர்கள் விழிச்சுக் கொள்ளாட்டில் நாம் என்ன செய்ய முடியும் சொல்லுங்கோ...

**தலை** நகரின்ர பாதுகாப்பு விசேடமாக இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கெண்டு செய்தி வெளியாகி இருபத்தி நாலு மணித்தியாலத்துக்குள்ளேயே தலைநகர் ஒண்டு தொடக்கம் பதினைஞ்சு வரையான பகுதிகளிலையும் திடீர் சுற்றிவளைப்புகள் நடந்துது. உதில மூவாயிரத்துக்கும் அதிகமானவை விசாரிக்கப்பட்டிச்சினம்.

முன்னம் மாதிரி இல்லையுங்கோ. பிடிபட்டவையை விடுகிறதெண்டது கடுமையான சட்ட திட்டங்களுக்கு உட்பட்டிருக்குது. முன்னம் ஒரு காலத்தில இருந்ததைப் போல பிடிபட்டவையின்ர, உறவினர்கள் ஒவ்வொரு காவல்துறை அலுவலகத்துக்கு முன்னாலையும் காத்துக் கொண்டிருக்கினம். மறந்தும் அடையாள அட்டையையோ உங்களை அடையாளப்படுத்தும் ஆவணத்தையோ கொண்டுவராமல் வீதியால இறங்காதீங்கோ...எண்டு சொல்லினம்.

உந்தத் திடீர் தேடுதல்களும் சுற்றி வளைப்புகளும் இனி அடிக்கடி தலைநகரில நடக்க வாய்ப்புகள் அதிகமாக இருக்குதாம். புதியவர்களை வீட்டுக்கு எடுக்கிறவை கவனமாக இருக்க வேணுமாம். இல்லாட்டில் தேவையில்லாத சங்கடங்களுக்கு ஆளாக வேண்டி வருமாம். ம்...பாதுகாப்புப் பிரச்சினை எண்டு வந்திட்டுது. ஒத்துழைச்சுப் போறதுதான் நல்லது எண்டு தலைநகரில வாழிற சனங்கள் சொல்லினமுங்கோ...

**ஏ-9** வீதியைத் திறக்க தங்களுக்கு விருப்பம் எண்டு அறிக்கைக்கு மேல அறிக்கையாக ரெண்டெழுத்தார் விட்டுக் கொண்டிருக்கினம். சண்டையும் முடியல்லை, சமாதானப் பேச்சுக்கும் தயாரில்லை எண்டு சொல்லுறவை, பாதையைத் திறக்க மட்டும் உப்பிடி அவசரப்படுகினமே, ஏன் எண்டு ஆளும் தரப்புக்கு ஒரே சந்தேகமாம். ஒருவேளை பாதை திறந்தால் சனம் அங்காலை இங்காலை வெளிக்கிடுவினம். அந்த நேரத்தில வரி, கப்பம் எண்டு பெறக்கூடிய பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் எண்டதாலதான் அவசரப்படுகினம் எண்ட சந்தேகம் சரிதான். அதை விடவும் முக்கியமான விஷயம் இருக்குங்கோ. அதாகப்பட்டது, வன்னிக்குள்ள இருந்து அரசியல் பணி எண்ட சாக்கில நாட்டின்ர ஏனைய பகுதிகளுக்கு, தாக்குதல்களுக்கும், புலனாய்வுக்கும், பிற வேலைகளுக்காகவும் அனுப்பி வைக்கப்பட்டவையும், பாதை மூடப்பட்டதாலை வன்னிக்குள்ள வரமுடியாமல் இருக்கினம். அவை தொடர்ந்தும் பதுங்கி இருக்கமுடியாது எண்டதாலை அவையை உள்வாங்கிக் கொள்ளத்தான் ரெண்டெழுத்தார் பாதை திறப்புக்கு உந்தப்பாடு படுகினமாமுங்கோ...

# பணம்

**நல்ல** நண்பர்களாக இருந்தவர்களின் சுயரூபத்தை எனக்கு அடையாளம் காட்டியது பணம் தான். பணம் மனிதர்களை அளக்கும் சிறந்த சாதனம். இயல்பாகவே எனக்கு கடன் வாங்குவதும், அதைத் திருப்பிக் கொடுப்பதும் முள்ளின் மேல் நடப்பதுபோல் இருக்கும். அதனால் தானோ என்னவோ என் நண்பர்கள் என்னிடம் கடன் வாங்கிவிட்டு என்னுடனான நட்பை இழந்து போய்விட்டார்கள். கடன் கொடுக்க நான் தயங்குவதில்லை. கடனைக் கொடுத்துவிட்டு கேட்டுத் திரிவதற்கு வெட்கமாக இருக்கும். வாங்கியவர்களுக்கு எப்படியோ தெரியாது. ஆகவே யாரும் கடன் கேட்டால் நூறு ரூபாய்க்குள் கொடுப்பேன். ஏன் என்றால் அந்தப் பணத்தை நான் அறவிடமுடியாத கடனாகவே நினைத்துக் கொள்வேன். பணம் கொடுத்து ஏமாந்த நான் இன்னும் அப்படியே இருக்கிறேன். என்னிடம் பணம் வாங்கி ஏமாற்றிய நண்பர்கள் இன்னும் பணம் பணம் என்று நிம்மதியைத் தொலைத்து விட்டு பரதேசிகளாகத் திரிகிறார்கள். அவர்களுக்காக நான் வருந்துகிறேன். நான் பணப்பறிமாறல் செய்யாமல் இருந்திருந்தால் ஒருவேளை அவர்கள் என் நண்பர்களாகவே இருந்திருப்பார்களோ என்னவோ.

என்னிடம் இதுவரை கைமாறாக சிலர் வாங்கிய நான்கு இலட்சம் ரூபாய் திருப்பிக் கிடைக்காமலே போய்விட்டது. பாவம் என் கடனாளிகள், ஏமாறக்கூடிய இன்னொரு கூட்டத்துக்குள் கௌரவமானவர்களாக போலி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பணம் பத்தும் செய்யும் என்பார்கள்; என் வாழ்க்கையில் பதினொன்றும் செய்தது. என் பால்ய வயதில் வறுமை எங்கள் குடும்பத்தைப் புரட்டி எடுத்த ஒரு காலத்தில், ஒருநாள் சாப்பாட்டுக்கே வழியில்லாத நாளில் நான் ஒரு சதம், இருபது சதம் - ஐந்து சதமாகச் சேமித்த எனது உண்டியலை உடைத்து அதில் சேமிக்கப்பட்ட பதினொரு ரூபாயை எடுத்து சாப்பாடு வேண்டிச் சாப்பிட்ட காலமுண்டு. அந்த வறுமையான நாட்களை என் வாழ்நாளில் மறக்கமுடியாது.

அதே போல் நான் ஆறாம் வகுப்பு தொடக்கம் ஒன்பதாம் வகுப்பு வரை




மாலை நேர பிரத்தியேக வகுப்புகளுக்குப் போகின்ற காலத்தில், இரண்டு மாதம் மூன்று மாதத்துக்கு மேல் ஒரு வகுப்பில் தொடர்ந்து படித்ததில்லை. காரணம் அப்பாவுக்குக் காசு கட்ட முடிவதில்லை. இப்படி பணம் வரைந்த வடுக்



தருவது : தேசன்

கோடுகள் என் வாழ்வில் ஓராயிரம்.

என் அப்பாவுக்கு ஒரு தாழ்வுமனப்பான்மை இருப்பதாகவே நான் உணர்கிறேன். அதாவது அவருக்குக் கஷ்டமான வேளையில் கடன் கேட்டுக் கொடுத்த ஒருவருக்காக, என்ன உதவி வேண்டுமானாலும் செய்வார். எனக்கு அது பிடிக்காது. ஏன் என்றால் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கத்தான் போகிறோம்; அதற்காக அவருக்கு சேவகம் செய்ய வேண்டிய அவசியம் இல்லையே என்பது என் வாதம். ஆனால் அப்பாவோ கடன் வாங்கியதற்காக அல்ல, நமக்கு உதவிய அவரது நல்ல மனசுக்காக செய்யும் ஒரு கைமாறு தான் என்பார். எனக்கென்னவோ அவர்கள் அப்பாவைத் தன் கூலி ஆள் போல் நடத்துவதுபோலவே இருக்கும்.

பணம் பற்றிய கவிஞர்களின் பார்வை எப்படி என்று சிந்திக்கும்போது சிரிப்புத்தான் வரும். கண்ணதாசன் அர்த்தமுள்ள இந்து மதத்தில் சொல்கிறார். பணத்துக்கு இன்னொரு பெயர் 'செல்வம்'. ஏன் செல்வம் என்றால் அது நம் கையை விட்டுச் சென்று விடுவதாலேயே அதைச் செல்வம் என்று கூறுகிறார். அதேபோல்,

"பணம் என்னடா பணம் பணம்
குணம் தானடா நிரந்தரம்" என்று பாடிய அவரே "பணம் பந்தியிலே குணம் குப்பையிலே" என்றும் பாடுகிறார். இதைப்போல் வைரமுத்து கையில் கொஞ்சம் காசு இருந்தால் 'நீ தான் அதற்கு எஜமானி, கழுத்து வரைக்கும் காசு இருந்தால் அதுதான் உனக்கு ஏஜமான்" என்று பாடுகிறார். இதிலிருந்து இன்றும் உச்சம் தொட்டு திருவள்ளுவர் சொல்கிறார்:-

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லாது இல்லை பொருள்"

என்கிறார். அதாவது ஒருவன் திறமை மிகுந்தவனோ இல்லையோ, படித்தவனோ இல்லையோ, ஏழை எளியவனோ இல்லையோ, பணம் படைத்தவனாக இருந்தால் அதுவே அவனை உயர்த்திக்காட்டும் என்கிறார். இதேபோல் இன்னொரு குறளில்,

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை. பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

என்கிறார். அதாவது பணம் இல்லாதவனுக்கு இவ்வுலகில் ஒன்றுமே இல்லை என்கிறார். மேற்குறிப்பிட்ட இரண்டு குறளிலும் பொருள் என்று அவர் குறிப்பிடுவது பணம் என்று பொருள்படுகிறது. இப்படித்தான் உலகம் பணத்தைக் கொண்டு ஒருவனை அளவிடுகிறது.

எனக்குப் பதிமூன்று வயதிருக்கும் அப்போது நானும் எனது மச்சானும் அரிசி வாங்குவதற்காக கடைக்குப் போனோம். இடையில் 20 ரூபா பணத்தை என் மச்சான் தொலைத்துவிட்டான். வீட்டுக்கு வந்து மாமாவிடம் சொன்னோம். மாமா நாங்கள் போன வீதியெங்கும் தேடினார். பணம் கிடைக்கவில்லை. பணம் தொலைந்த இடத்துக்கும் எங்களது வீட்டுக்கும் இடையில் சுமார் 350 மீற்றர் தூரம் இருக்கும். அங்கிருந்து முட்டுக்காலிலேயே மச்சானை வீட்டுக்கு வரச் சொன்னார். என்னை அவர் முட்டுக்காலில் தான் வருகிறானா என்று கவனித்துக் கொண்டு வரச்சொன்னார். முழங்காலிலே இரத்தம் வடிய வடிய மச்சான் அழுது அழுது வந்தான். அவனுக்கும், அப்போது 13 வயதுதான். வீட்டுக்கு வந்த பின்னர், அவனையும் என்னையும் அடுப்புக்கு மேல் ஏறி நிற்கச் சொல்லிவிட்டு மாமா அடித்தார். 20 ரூபாவைத் தொலைத்ததற்கு மாமா தந்த தண்டனை அது. இன்று லட்சக்கணக்கான பணத்தை நண்பர்கள் என்றிருந்த நயவஞ்சகர்களிடம் கொடுத்து விட்டு ஏமாற்றப்பட்டேனே. நல்ல காலம் மாமா உயிரோடு இல்லை. இருந்திருந்தால் இந்த வயதிலும் ஒருவேளை அடுப்படிக்கு மேல் ஏற்றியிருப்பார்.

பணம் தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது. வேலைக்குப் போய் பணம் தரும் பிள்ளைகளைப் பெற்றோருக்குப் பிடிக்கும். சம்பளப் பணத்தை எடுத்து அப்படியே மனைவியிடம் கொடுத்துவிட்டு, தன் செலவுக்காக பணம் கேட்கும் கணவன்மாரை மனைவிமாருக்குப் பிடிக்கும். மாதத்தில் இவ்வளவு என்று பிள்ளைகளின் செலவுக்குப் பணம் கொடுக்கும் பெற்றோரைப் பிள்ளைகளுக்குப் பிடிக்கும்.

அதிகம் லாபம் காட்டும் தொழிலாளியை முதலாளிக்குப் பிடிக்கும். வருடத்தில் இரண்டு போனஸ் தரும் முதலாளியைத் தொழிலாளிக்குப் பிடிக்கும். இப்படிப் பிடிக்கும் பிடிக்கும் என்று எல்லாவற்றிற்கும் பணம் தான் காரணம். பணம் இருந்தால் எல்லாமும் எல்லாருக்கும் பிடிக்கும்.

பணம் ஒருவரிடம் சேருகின்ற போது அவரது குணமும், மனமும் தானாகவே மாறிவிடுகிறது. இதற்கு விதி விலக்கானவர்களை நான் சந்தித்தது குறைவு. பணம் என்னை கைமாற்றுக்காரனாகத்தான் வைத்திருக்கிறது. கை நிறையக் கிடைக்கும் அது கிடைத்த வேகத்தில் செலவு போகும். அநேகமான பொழுதுகளில் பணம் வருவதற்கு முன்னரே அதற்கு ஈடாக செலவும் வந்து விடும்.

இப்படி பணம் என்னைப் பந்தாடிய போது, இல்லை என்று நான் சொல்வது குறைவு. ஏன் என்றால் நான் பலரைப் பார்த்திருக்கிறேன். இருந்தாலும் இல்லாவிட்டாலும் இல்லை என்றே சொல்வார்கள். அதே போல் அவர்களிடம் இல்லை என்றே வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கும். ஆகவே இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு கிடைத்ததை வைத்துத் திருப்தி கொள்வது மனதுக்கு நிம்மதி - ஏன் என்றால் போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து. பணத்தைப் பற்றி எழுதி முடிப்பது முடியாத காரியம். இப்போதைக்கு நான் ஏற்படுத்திக் கொள்வது சிறிய இடைவேளைதான்.

ஆதிகாலத்தில் பொருள் கொடுத்து பொருள் வாங்குகின்ற பண்டமாற்று நடந்த காலத்துக்குப் பிறகு பணம் புழக்கத்துக்கு வந்த பிறகுதான் வாழ்க்கையின் வடிவங்களே மாறிப் போனது. இந்த நவீன யுகத்தில், இலாபம், பொருளாதாரம், மூலதனம் என்பதெல்லாம் பணத்தைத்தான் குறிக்கிறது. "பணம் இல்லாதவன் பிணம்" என்று கூறுவார்கள். சமூகம் அப்படித்தான் பார்க்கிறது. பணம் இல்லாதவன் நடைபிணமாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

நடைபிணமாக வாழுகின்றபோது காண்பது எல்லாமே வெறும் கனவாகவே இருக்கும். ஆசைப்பட மட்டுமே அதிகாரம் இருக்கும். அனுபவிக்க அருகதையற்றவர்களாக வாழ்க்கை நம் கழுத்தை நெரிக்கும். "பணம் பாதாளம் வரைக்கும் பாயும்" என்பார்கள். என்னைக் கேட்டால் அதையும் தாண்டிப் பாயும் என்பேன்.




இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

## முதல்வன்... சூரியன் எப்.எம்...?

**இலங்கையில் எட்டுத் திக்கும் வெற்றிநடைபோட்டு முன்னணியில் திகழும் சூரியன் எப்.எம்.தனது எட்டாவது அகவையில் காலடி பதித்துள்ளான். சூரியனில் ஒலிபரப்பாகும் அனைத்து நிகழ்ச்சிகளும் சூப்பரோ சூப்பர். ஆக்கபூர்வமானதும், அறிவுபூர்வமானதுமான சிறந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதில் சூரியனுக்கு நிகர் சூரியனே...! தெற்காசியாவிலேயே முதலாவதாக 24 மணித்தியால தமிழ் வானொலி சேவையை நிகழ்த்திய பெருமை சூரியனையே சாரும். சூரியனில் காலை வேளையில் ஒலிபரப்பாகும் 'சூரியராகம்' எனும் நிகழ்ச்சி சூரியனுக்கு மகுடம் சூட்டுவதுபோல் உள்ளது. நிகழ்ச்சியை சுவாரசியமாகவும், சுவையாகவும் தொகுத்து வழங்கும் முன்னணி அறிவிப்பாளர் ஏ.ஆர்.வி.லோஷன் அண்ணாவுக்கு பாராட்டுக்கள். உள்ளூர் கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக சூரியன் காட்டும் ஆர்வம் தனித்துவமானது. உள்நாட்டிலோ சரி, வெளிநாட்டிலும் சரி, எந்த மூலையில் விளையாட்டோ அல்லது வன்செயலோ இடம்பெற்றாலும் அதனைச் சுடச்சுட தருவது சூரியன் எப்.எம். மே ஆகும். உலகத்திற்கே ஒரு சூரியன். அதுபோல் உலகத் தமிழர்களுக்கும் ஒரே எப்.எம். அதுதான் - சூரியன் எப்.எம்...!**

*- அ. ரவி, மட்டக்களப்பு*


## விளம்பரப் பகுதி

**மலையாள மாந்திரீகம்**



தெய்வீக காந்த சக்தி மாந்திரீகம் மூலம் நீண்டகால திருமணத்தடை நீங்க, கால சர்ப்ப தோஷம், குழந்தையின்மை, காதல் கைகூட, கணவன் மனைவி ஒற்றுமையாயிருக்க தெய்வீக காந்த சக்தி பரிகாரங்கள் மூலம் முன் கருமவினைகளை என்னால் அகற்ற முடியும்.

தேவைகளுக்கு -

உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர்
**P.K.சாமி (J.P.) ஐயா**

**அருள் சித்த எண்ணெய்**



மன தடுமாற்றங்கள், படபடப்பு, கோபம், தலைவலி, தூக்கமின்மை, கூந்தல் வளர்ச்சிபெற, முடி கருமையாக இருக்க, இளம்நரை போக்க, பொடுகு தொல்லை நீங்க, பெண்களுக்கென தெய்வீக மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தத் தைலத்தைப் பாவிப்பதனால் ஏதோரு பக்கவிளைவுகளும் இல்லை. இருபாலாரும் பாவிக்கலாம்.

அருள்ஞான சித்தர் பேராசிரியர் டாக்டர்
**P.K.சாமி (J.P.) ஐயா**

**ஜாதகம்**



காண்ட அடிப்படையில் ஜாதகமாக எழுதி எடுக்க, வெளிநாட்டு நேரப்படி ஜாதகங்கள் கணித்து வெளிநாட்டுக்கு அனுப்ப.

ஜோதிட தத்துவ ஞானி
**P.K.சாமி (J.P.) ஐயா**

விஷேசமாக வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி வசதிகளும் நேரடி பொதி கையளிப்பு சேவையும் எம்மிடம் உண்டு

ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரீக உச்சாடப் பீடம்
162, KOTAHENA ST, COLOMBO - 13.
TEL : 2470615, 2342463, 2342464, FAX : 2344831.
Web : www.drpksamy.com
E-mail : drpksamy@sltnet.lk

ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்
No. 33, தின சந்தை கட்டிடம், நுவரெலியா.
NUWARA-ELIYA TEL : 052-4490031.

**ABI Beauty Parlour**



Abi Beauty Parlour
No. 60 6/4, Mayfield Road,
Kotahena, Colombo - 13.
Tel : 2387737, Hotline : 077-9539263
after 6'Clock - 2431137
(Ladies Only)

## இன்னொருவர் பார்வையில்

# அமெரிக்காவில் அம்பலமான புலிகளின் ஆயுதக் கொள்வனவு

**யாழ்ப்பாணப்** படைகளைச் செயலிழக்கச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது முக்கிய முயற்சியே, அண்மையத் தாக்குதலாகும். ரஷ்யத் தயாரிப்பான SA -18 விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் ஏனைய ஆயுதங்கள், ரவைகள் மற்றும் உபகரணங்களுடன் 500 ஏகே - 47 ரக ரைபிள்களையும் பெறும் முயற்சியில் ஈடுபட்டிருந்த புலி இயக்கத்தவர்கள், அமெரிக்காவிலும் கனடாவிலும் கைது செய்யப்பட்டமை, யாழ்.குடா நாட்டை முடக்குவதில் புலிகள் இயக்கம் மிக அக்கறையோடு செயற்பட்டிருக்கிறது என்பதற்கு ஆதாரமாக விளங்குகிறது. மீண்டும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளைப் பெற்றுக் கொள்வதில் புலிகள் இயக்கம் வெற்றி பெற்றிருந்தால், யாழ்ப்பாணத்திலுள்ள படையினர் மிகப் பயங்கரமான அச்சுறுத்தலை எதிர் கொண்டிருப்பர். தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதிகளென்று தம்மைத் தாமே அழைத்துக் கொள்ளும் புலிகள், விமான எதிர்ப்பு ஏவுகணைகளைப் பெற்றுக்கொள்ளும் தமது பிந்திய முயற்சியில் வெற்றிபெற்றிருந்தால், புலிகளின் கூட்டாளிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், யுத்த நிறுத்தம் வேண்டுமென்று வற்புறுத்தியிருக்க மாட்டார்கள்.

லெபனானின் சியா முஸ்லிம் குழுவான ஹிஸ்புல்லா உட்பட பல பயங்கரவாதக் குழுக்களிடம் தோளில் வைத்து ஏவக்கூடிய நவீனரக SA-18 விமான எதிர்ப்பு ஏவுகணைகள் உண்டென்று நம்பப்படுகிறது. SA -7 ஏவுகணைகளின் மிகவும் முன்னேற்றகரமான சக்தி வாய்ந்தவையே SA-18 ரக ஏவுகணைகளாகும். இந்த ரஷ்ய உற்பத்தியான SA -18. ரக ஏவுகணைகளைப் புலிகள் இயக்கம் பெற்றிருந்தால், புலிகளின் தாக்குதல் திறன்களை அது மேலும் அதிகரித்திருக்கும்.

**இஸ்ரேலிய கிபீர் விமானங்களுக்கு எதிராக ரஷ்யாவின் SA—18 ஏவுகணைகளைப் பயன்படுத்த புலிகள் மேற்கொண்ட திட்டம் பற்றி ஷமிந்திரா பேர்டினாண்டோ என்ற இராணுவ ஆய்வாளர் எழுதிய கட்டுரை கடந்த 26ஆம் திகதிய 'த ஐலண்ட்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. பத்து வருடங்களாக கிபீர் யுத்த விமானங்களைத் தாக்குவதற்கு புலிகள் இயக்கம் மேற்கொண்டு வந்த முயற்சிகள் பற்றி இக் கட்டுரையில் அவர் விளக்குகிறார். அதன் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.**

SA -7 ஏவுகணைகளிலும் பார்க்கப் பெருமளவு சிறந்தவை SA -18 ஏவுகணைகள். அதன் இரண்டு கிலோ கிராம் எடையுள்ள இரசாயனச் சக்தி கொண்ட முனைகள் SA -7 ஏவுகணைகளின் முனைகளைப் பார்க்கிலும் பெரியவையும் கூடிய சேதத்தை ஏற்படுத்தக் கூடியவையுமாகும். அத்துடன் SA-18 ஏவுகணைகள் கூடிய தூரத்துக்கும் உயரத்துக்கும் சென்று தாக்கக் கூடியவை. 5200 மீற்றர்கள் தூரத்துக்கும் 3500 மீற்றர்கள் உயரத்துக்கும் சென்று தாக்கக் கூடியவை அவை. இதன் கூடிய வேகம், அதி விரைவாகச் செல்லும் விமான இலக்குகளையும் சென்று தாக்கக் கூடிய சக்தி வாய்ந்தவை. SA-18 ஏவுகணையின் தேடித் தாக்கும் திறன் அதிகமானதால், SA-7 இலும் பார்க்கப் பரந்த கோணங்களிலிருந்து தாக்கக் கூடிய சக்தியைக் கொண்டுள்ளது. அத்துடன் வெப்பக் கதிர்கள் மற்றும் இலத்திரனியல் தடுப்புகள் ஆகியவற்றின் பாதிப்புகளைப் பெருமளவில் குறைக்கக் கூடிய சக்தியும் கொண்டது.

SA -18 ஏவுகணையின் வழி நடத்தும் பொறிமுறை, என்ஜின் மற்றும் வெப்பத்தை வெளியேற்றும் பைப்புகள் போன்ற தனித்திருக்கும் வெப்ப நிலைகளைத் தேடித் தாக்குவதிலும் பார்க்க, விமான வரையறைக் கதிர் வீச்சு வலயத்துக்குள் சென்று தாக்கக்கூடிய சக்தி கொண்டதாகவும் உள்ளது. இதனால் SA-7 இலும் பார்க்க வானப் பரப்பிலுள்ள இலக்குகளை நேரே சென்று தாக்கக் கூடிய சக்தி SA-18 ஏவுகணைகளுக்கு உண்டு. பத்து SA-18 ஏவுகணைகளை வாங்குவதற்குப் புலிகள் இயக்கம் முயன்றதாகக் கூறப்படுகிறது. அவர்கள் SA-18 ஏவுகணைகளைப் பயன்படுத்தியிருந்தால், குறைந்தளவு உயரத்திலிருந்து குண்டு வீசுதல், உளவு பார்த்தல் போன்ற விமானப் படையின் பணிகளைக் கணிசமான ளவுக்குத் தடுத்திருக்க முடியும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர், இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட பல்வித செயற்பாடுகள் கொண்ட யுத்த விமானங்களைக் கொள்வனவு செய்தமைக்காக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



கனடாவில் [illegible] துசெய்யப்பட்ட சுரேஷ் ஸ்ரீஸ்கந்தரா[illegible] டுகிறார்.

அவருக்கு நன்றி பாராட்ட வேண்டும். அமெரிக்காவின் அங்கீகாரத்துடனேயே இந்த யுத்த விமானங்களை இஸ்ரேல் விற்பனை செய்தது. இவையின்றி, யாழ்ப்பாணத்திலுள்ள படைகளால், புலிகளின் அண்மைய தாக்குதலுக்கு நின்று பிடித்திருக்க முடியாது. குண்டுகளைச் சரியாகக் குறிபார்த்து வீசக்கூடிய, கணனி மயப்படுத்தப்பட்ட குண்டுகளை வீசும் நிகழ்ச்சித் திட்ட அமைப்பைக் கொண்ட இந்தக் கிபீர் விமானங்கள், 1996ஆம் ஆண்டு முதல் இலங்கை விமானப் படையிடம் இருந்து வருகின்றன.

ஆட்டிலறி நிலைகள் உட்பட முக்கிய நிலைகள் மீது கிபீர் யுத்த விமானங்கள் தொடர்ச்சியாக நடத்திய தாக்குதல்கள், புலிகளின் அண்மைய தாக்குதல்களை முறியடிப்பதற்குத் தரைப்படைகளுக்கு உதவின. 2000ஆம் ஆண்டு ஆனையிறவு தோல்விக்குப் பின்னர் பெறப்பட்ட கிபீர்களும் ஆட்டிலறிகளும், குறிப்பாகப் பல்குழல் ரொக்கட் ஏவுகணைகளும், புலிகள் தாக்குதல்களை நிறுத்துவதற்கு நிர்ப்பந்தித்தன.

இராணுவ உயர் மட்டத்தினரைக் கூட கிபீர்களின் வெற்றி ஆச்சரியத்தில் மூழ்கடித்தது. இலங்கை விமானப்படையின் முக்கியத்துவமிக்க ஜெட் அணிக்கு 1996ஆம் ஆண்டு எட்டு கிபீர் விமானங்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டதில் இது இருநூறு சதவீத அதிகரிப்பாகும். புலிகளின் நடவடிக்கைகளால் சில கிபீர் விமானங்கள் இழக்கப்பட்டன. ஒன்று விபத்தில் சிக்கியதால் இல்லாமல் போனது. எனினும் குறிப்பிட்ட விமான அணியினால் எதிரியின் நிலைகளைக் குறி வைத்துத் தாக்க முடிந்தது. 1999இல் மிக்-27 ரக விமானங்கள் கிடைத்திருந்தால், விமானப்படை சிறப்பாகச் செயற்பட்டிருக்கும். துரதிர்ஷ்டவசமாக திருத்த வேலைகள் காரணமாக மிக் விமானங்கள் தரையிலேயே வைக்கப்பட்டிருந்தன.

தற்போதைய யுத்த நடவடிக்கையின்போது அதிகாரிகள் உட்பட 160 பேரை இராணுவம் இழந்தது. ஆகஸ்ட் மாதம் பதினோராம் திகதி புலிகள் ஆரம்பித்த தாக்குதல், அதிகாரிகள் உட்பட 500 பேரைக் காயங்களுக்குள்ளாக்கியது. புலிகள் இயக்கம் 2002ஆம் ஆண்டு பெப்ரவரிக்குப் பின்னர் இத் தடவையே மிக மோசமான இழப்புகளைச் சந்தித்தது. புலிகள் இயக்கம் முகமாலை முன்னரங்கப் பகுதியைத் தகர்த்துக் கொண்டு, பல இராணுவ நிலைகளைக் கைப்பற்றுவதில் வெற்றி கண்டது. அவர்களின் ஆட்டிலறித் தாக்குதல்கள், பல விமானப் பயணங்களை இடைநிறுத்த விமானப் படையை நிர்ப்பந்தித்தது. மூதூரைப் புலிகளால் கைப்பற்றியிருக்க முடியுமென்றால், திருகோணமலைப் படைத் தளத்தின் மீது அவர்களால் தலையீடு செய்திருக்க முடியும். அப்போது நிலைமை இன்னும் மோசமடைந்திருக்கும். 1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி, வெற்றி கண்ட அதே தந்திரோபாயத்துக்கு ஒத்ததாகவே இம்முறை நடவடிக்கையும் அமைந்திருந்தது. புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இல்லாதபோதிலும், புலிகள் இயக்கம் இயன்றவரை ஆட்டிலறிகளைப் பயன்படுத்தி, கேந்திர முக்கியத்துவமிக்க பலாலி விமானத் தளத்தை மூட வைத்தனர். உத்தியோகபூர்வ அறிக்கை சரியான நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கவில்லை. தொடர்ச்சியான பல விமான மற்றும் ஆட்டிலறித் தாக்குதல்களை நடத்தி கணிசமான இழப்புகளைப் புலிகளுக்கு ஏற்படுத்தி, எதிரியின் மனோபலத்தை இழக்கச் செய்த பின்னரே, அதாவது சண்டை தொடங்கி நான்காவது நாளே படையினர் மீண்டும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இலங்கையில் இந்திய அமைதிப்படை நிலை கொண்டிருந்த காலத்தில் (1987 ஜூலை முதல் 1990 மார்ச் வரை) இந்திய விமானப் படைக்கு எதிராகப் புலிகள் ஏவுகணைகளை பயன்படுத்தவில்லை என்ற போதிலும் இந்தியத் துருப்புகள் மேற்கொண்ட நடவடிக்கையொன்றின்போது வெப்பத்தைத் தேடித் தாக்கும் விமான எதிர்ப்பு ஏவுகணையொன்றினைக் கண்டெடுத்தனர். நல்லூரிலிருந்த புலிகளின் மறைவிடமொன்றிலிருந்து 1988ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி ரஷ்யாவில் உற்பத்தி செய்யப்பட்ட SA -7 என்ற தரையிலிருந்து வானப் பரப்புக்கு ஏவக்கூடிய ஏவுகணையொன்றினைக் கண்டு பிடித்ததைச் சிலர், அதுவொரு இந்தியர்களின் நாடகமென்று ஊகம் தெரிவித்தனர். அப்போது கொழும்பில் பணியாற்றிய பிரதி இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென், அந்த ஏவுகணை மீட்கப்பட்டதை உறுதிப்படுத்தினார். "இந்த ஏவுகணை எங்கு உற்பத்தி செய்யப்பட்டது என்பது பிரச்சினைக்குரிய விடயமல்ல. புலிகள் இயக்கத்துக்கு இந்த SA -7 ஏவுகணையை வழங்கிய முகவர் நிறுவனம் அல்லது அமைப்பு எதுவென்பதைக் கண்டு பிடிப்பதே பிரச்சினைக்குரிய விடயம்" என்று இந்த ஏவுகணை கண்டுபிடிக்கப்பட்டு இரு நாட்களின் பின்னர் கூறினார் நிருபம் சென். சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் நிருபம் சென், இந்திய உயர்ஸ்தானிகராகத் திரும்பவும் கொழும்புக்கு வந்தார்.

பலாலி மற்றும் காங்கேசன்துறைப் படைத்தளங்களுக்கு அச்சுறுத்தல் அதிகரித்து வந்ததால், முழு யாழ். குடா நாட்டினையுமே படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்காக முன்னெப்பொழுதுமே மேற்கொள்ளப்படாத மிகப் பெரிய கூட்டுப்படைகளின் தாக்குதலுக்கு ஜனாதிபதி குமாரதுங்கா அங்கீகாரமளித்தார். 1996ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த ரிவிரச தாக்குதலின் மூலம், 1996 டிசம்பர் முதல் வாரத்தில் யாழ்ப்பாண நகரம் படையினரின் கட்டுப்பாட்டில் வந்தது. பின்னர் வடமராட்சியும் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

யாழ். குடாநாட்டுக்கான யுத்தத்தின்போது தாக்குதல் படையணியினரை ஏற்றிக் கொண்டு சென்ற உக்ரேனியத் தயாரிப்பான AN-32 விமானம் பலாலி தளத்துக்கு இறங்கிக் கொண்டிருந்தபோது, பலாலிக்கு வடமேற்கே சுட்டு வீழ்த்தப்பட்டது. ஏவுகணை அச்சுறுத்தல் நிலவும் பகுதியில் பறப்பதற்குத் தேவையான சாதனங்களைக் கொண்டிருக்காத அந்த விமானம், யாழ் நகரைக் கைப்பற்றுவதற்கான தாக்குதலில் ஈடுபட்டிருந்த துருப்புகளுடன் இணைந்து கொள்வதற்கு படையணியினரை ஏற்றிச் சென்று கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நடவடிக்கையின் போது அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் உட்பட சுமார் 510 பேர் மரணமானார்கள். மேலும் 1300 பேர் காயமுற்றனர். 1996ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் திகதி AN-32 விமானம் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டபோது இறந்த அதிகாரிகள் உட்பட சிப்பாய்களும் கொல்லப்பட்ட சுமார் 510 படையினரில் அடங்குவர்.

2000ஆம் ஆண்டு ஆரம்பத்தில் யாழ்ப்பாணத் துருப்புகளைத் துடைத்தொழிப்பதில் புலிகள் இயக்கம் அநேகமாக வெற்றி காணும் நிலைக்கு வந்தது. 2000ஆம் ஆண்டு ஏப்ரலில் ஆனையிறவின் வீழ்ச்சி, அவர்களின் பணியை இலகுவாக்கியது. இராணுவம், பல்குழல் ரொக்கட் ஏவுகணைகளைப் பயன்படுத்தியதன் மூலம் புலிகளின் தாக்குதலை முறியடிக்க முடிந்தது. புலிகளின் ஏவுகணை அச்சுறுத்தலைப் படையினர் அப்போது எதிர்கொள்ளவில்லை என்பதால், ஒப்பீட்டளவில் அது படையினரின் பணியை இலகுவாக்கியது.

1995 ஏப்ரலில் இருந்த நிலையைச் சுருக்கமாக ஆராய்வது நல்லது. 108 நாள் யுத்த நிறுத்தத்தின் பின்னர் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி தாக்குதல்களை ஆரம்பித்தனர். சீனாவில் தயாரிக்கப்பட்ட சுரயா, ரணவீர ஆகிய இரு யுத்தக் கப்பல்களை திருமலைத் துறைமுகத்தில் வைத்து தாக்கித் தகர்த்தனர். ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி அவ்ரோ விமானம் பலாலிக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்தபோது சுட்டு வீழ்த்தப்பட்டது. பலாலியிலிருந்து இந்த விமானம் புறப்பட்டபோது அதன் இயந்திரமொன்று தீப்பற்றியதாக ஆரம்பத்தில் விமானப்படை தெரிவித்திருந்தது. பலாலிக்கு விமானத்தைத் திருப்புவதற்கு விமானி முயற்சி மேற்கொண்டபோது, விமானம் வீழ்ந்து நொறுங்கியதாக விமானப்படை தெரிவித்தது. அநேகமாக ஐம்பது அதிகாரிகளும் படையினரும் மரணமடைந்தனர்.

மறுநாள் இரண்டாவது அவ்ரோ விமானத்தை விமானப் படை இழந்தது. இந்த விமானம் வீழ்வதற்கு முன்னர் விங் கொமாண்டர் எஸ்.பத்திரன, ஏவுகணைத் தாக்குதலொன்று குறித்துக் கட்டுப்பாட்டு நிலையத்துக்கு எச்சரிக்கை செய்தார். கொல்லப்பட்டவர்களில் விங் கொமாண்டர் சிராந்த குணதிலகவும் ஒருவராவார். இவர் முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலகவின் மகனும் தற்போதைய விமானப்படைத் தளபதி ரொஷான் குணதிலகவின் சகோதரருமாவார். பலாலியில் இறங்கிக் கொண்டிருக்கும்போதே புலிகள் இந்த விமானத்தைத் தாக்கினர். முதல் நாள் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானம் பற்றி விசாரணை செய்வதற்காகச் சென்ற விமானப்படை அதிகாரிகளும் கொல்லப்பட்டவர்களில் அடங்குவர். இரண்டாவது அவ்ரோ விமானம் வீழ்த்தப்பட்டுச் சில மணித்தியாலங்களின் பின்னர், இரண்டு விமானங்களுமே ஏவுகணைத் தாக்குதல்களால் வீழ்த்தப்பட்டனவென்று விமானப் படை ஒத்துக் கொண்டது. யாழ்.குடாநாட்டுக்கான சகல விமான சேவைகளையும் விமானப்படை இடை நிறுத்தியது. மே மாதம் பத்தாம் திகதி மீண்டும் விமானச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஏவுகணைகளின் வெளிப்பாடு, இத்தாலிய தயாரிப்புகளான சியாய் மார்செற்றி விமானங்களையும் இத்தாலிய புக்காரா மென்ரக விமானத்தையும் பாவனையில் இல்லாமல் செய்தது. இந்தச் சூழ்நிலையில் யாழ். குடாநாட்டுத் தளங்கள் மீது புலிகள் இயக்கம் தாக்குதல் அழுத்தங்களை மேற்கொண்டது. படையினர் மிக நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொண்டனர். ஏவுகணைகள் பாவனைக்கு வந்ததோடு, யுத்தம் புதிய கட்டத்தை எட்டியது. இதன் விளைவுகள் பெரும் சேதத்தை ஏற்படுத்தின.

*நன்றி : 'த ஐலண்ட்'*

## அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவின் பொறிக்குள் புலிகள் சிக்கியது எவ்வாறு?

**அமெரிக்காவின் மத்திய சமஷ்டிப் புலனாய்வினரின் (FBI) நம்பத்தகுந்த தகவல் வழங்குபவர் என இனங்காணப்பட்ட ஒருவருக்குக் கடந்த மாதப் பிற்பகுதியில் நியூயோர்க்கிலுள்ள ஸ்டேட்டன் ஐலண்டிலுள்ள அவரது மாடிக் குடியிருப்புக்கு நடராசா யோகராசா என்பவரிடமிருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்தது. சம்பந்தப்பட்ட நபர் ஒரு தமிழர் என்பதும், அவர் அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவுக்காக வேலை செய்பவரென்பதும் யோகராசாவுக்குத் தெரியாது. அவர் அமெரிக்காவிலுள்ள கறுப்புச் சந்தை ஆயுத வியாபாரியுடன் தொடர்பு கொண்டுள்ளாரென்று யோகா நம்பினார். உண்மையில் உளவாளியாகச் செயற்பட்ட அந்த நபர் 1994ஆம் ஆண்டு போதைவஸ்துக் கடத்தலுக்காகத் தண்டனை பெற்றவர். 1999ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவில் தங்குவதற்கு பரோலில் வெளிவர அவர் ஆவணங்கள் பெற்றுக் கொண்டமைக்கு உதவியாக, அமெரிக்க அரசாங்கத்திற்காக வேலை செய்து வந்தார். அவருக்குப் பணவுதவியும் வழங்கப்பட்டு வந்தது. இந்த இருவரும் நடத்திய சம்பாஷணை ஒலிப்பதிவு செய்யப்பட்டது. ஆயுதங்கள் விற்கும் ஆயுத வியாபாரி ஒருவரோடு தொடர்பு ஏற்படுத்தித் தருமாறு யோகா உளவாளியைக் கேட்டுக் கொண்டார். நியூயோர்க்கிலுள்ள குயீன்ஸ் பகுதியிலுள்ள ஓரிடத்தில் இருவரும் மறுநாள் சந்தித்தனர். ஆயுத பேரம் பற்றி கலந்துரையாடுவதற்கு யோகாவும் சதா என்றழைக்கப்படும் கனடாவிலிருந்து வருகை தந்த சரத்சந்திரன் என்பவரும் உளவாளியை சந்தித்தனர். புலிகள் இயக்கத்திற்காக வெளியுலகில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் விடயங்களைக் கையாளும் பொட்டு அம்மானின் அறிவுறுத்தலின் பேரில் தாம் செயற்படுவதாக சதா தெரிவித்தார்.**

**சண்முகநாதன் சிவசங்கரன் என்ற பெயர் கொண்ட பொட்டு அம்மான் தான், புலிகளின் புலனாய்வு மற்றும் செயற்பாட்டுப் பிரிவின் தலைவராவார்.**

**கிபீர் போன்றவை தமக்குத் தேவையென்று சதா அமெரிக்க உளவாளியிடம் தெரிவித்தார். அதாவது (IAI) இஸ்ரேலிய விமானத் தொழிற்றுறை தயாரிப்புகளான கிபீர்களையே (ஹீப்ரு மொழியில் சிங்கக் குட்டி என்பது இதன் அர்த்தம்) அதாவது நிலத்தில் பயன்படுத்தப்படும் தொலைபேசியை இது குறிக்கிறது.**

**சதா இலங்கையைத் தாய் நாடாகக் கொண்ட கனடியப் பிரஜையாவார். கனடாவிலுள்ள 'பெரிய பயல்' ஒருவர் பொட்டு அம்மானுடன் நேரடித் தொடர்புடையவரென்றும் அவர் 'அங்கு' ( இலங்கையிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி) சென்று அவர்களுக்குத் தேவையான ஆயுத விபரப்பட்டியல் ஒன்றினைப் பெறவுள்ளாரென்றும் சதா உளவாளியிடம் தெரிவித்தார். எப்போதாவது சதா தலைவரை சந்தித்துள்ளாரா்வென்று அமெரிக்க உளவாளி கேட்டார். தலைவரென்பது பிரபாகரனைக் குறிக்கும் சொல்லாகும். மூன்று வருடங்களுக்குப் முன்னர் தலைவரைத் தான் சந்தித்துள்ளதாக சதா பதிலளித்தார். அதன் பூரண விபரங்கள் அடுத்த வாரம்.**


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**மூத்த** கவிஞர்களின் பாதிப்பு என்னுள் முகிழ்க்காமலில்லை. இருப்பினும் அடிவருடிப் பாடுதல் வேறு; அடிதிருடிப் பாடுதல் வேறு.

மரபுக் கவிதைகளுக்கும் புதுக்கவிதைகளுக்கும் வித்தியாசம் என்னவென்று ஒரு கல்லூரிப் பேராசிரியர் என்னை வினவினார்.

"இன்னொருவர் மரபுக் கவிதையைத் தன்னுடையது என்று மற்றொருவர் சொல்லிக்



கொள்ள முடியாது. ஆனால் ஒருவர் எழுதிய புதுக்கவிதையை, மற்றவர் தன்னுடையதாகச் சொல்லிக்கொள்வது எளிதாக இருக்கிறது. இதுதான் வித்தியாசம்" என்றேன் நான்.

'மனிதர்களை எங்களால்
மந்திரிகளாக்க முடிகிறது;
மந்திரிகளைத்தான் மீண்டும் -
மனிதர்களாக்க
முடிவதில்லை.'

- இது, நான் எழுதி, என் கவிதைத் தொகுப்பில் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அச்சான கவிதை.

இந்தக் கவிதையைத் தன் சொந்தக் கற்பனையாக, மேடையில் சொல்லி - ஒரு புகழ் வாய்ந்த பேச்சாளர் இன்னமும் கைத்தட்டல்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறார். இது குறித்து நான் விசனிப்பதில்லை.

'ரத்தக் கண்ணீர்' படத்தில் திரு. எம்.ஆர்.ராதா ஒரு பாடலைப் பாடிக்கொண்டு செல்வார். பாடல் வரிகள் இவைதான்:

'மன்னவ னானாலும் -
மாடோட்டும்
சின்னவ னானாலும்
மண்ணில் பிறந்தாரே -
முடிவில்
மண்ணுக் கிரைதானே'

இந்தப் பாடல், திரு. கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் பல்லாண்டுகளுக்கு முன்பாக எழுதியது. ஆனால் 'ரத்தக் கண்ணீர்' படத்தில் திரு. சுப்புவின் பெயர் குறிப்பிடப்படாமல் இந்தப் பாடல் வருகிறது.

கொத்தமங்கலம் சுப்பு அவர்களிடம் நான் சொன்னேன்:

"அண்ணா! ரத்தக் கண்ணீர் படத்துல உங்க பாட்டு வரிகள் வருது; ஆனா, பாடலாசிரியர்கள் பெயரிலே உங்க பெயரில்லை... பெருமை வேறு யாருக்கோ போகிறதே?"

- இப்படி நான் கேட்டவுடன் சுப்பு அண்ணா சொன்னார்:

"டேய்! நாம எழுதின ஒரு பாட்டே, இன்னொருவன் தன் பாட்டுன்னு சொல்லியிருக்கிறான்னா- நீ சந்தோஷப்படணும். ஏன்னா, அடுத்தவன் தன்னுது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிற மாதிரி - நீ ஒரு அற்புதமான பாட்டை எழுதியிருக்கேன்னு அர்த்தம். நீ மோசமான பாட்டா எழுதியிருந்தா, மத்தவன் அதத் தன்னுடையதுன்னு சொல்லியிருக்க மாட்டானே!"

என்னுடைய பல வரிகள் - என் நூல்களிலிருந்து பிறரால் கையாளப்படும் பொழுது, சுப்பு அவர்கள் சொன்னது என் நினைவிற்கு வரும். நாம் சிறந்த படைப்பு ஒன்றை சமைத்திருக்கிறோம் என்றெண்ணிச் சந்தோஷப்படுவேன்.

அருள்மிகு கருமாரியம்மனைப் பற்றி, ஆழ்ந்த பக்தி உணர்வோடு நான் ஒரு விருத்தம் எழுதியிருந்தேன். இந்தப் பனுவலைப் பாராட்டி வாகீச கலாநிதி திரு.கி.வா.ஜ. அவர்கள் சிறப்பித்து எழுதியிருந்ததும், அச்சு வாகனத்தில் ஏறியிருக்கிறது.

என்னுடைய இந்தப் பாடல், இன்னொருவர் எழுதியதாக வேறொரு நூலில் குறிப்பிடப்பெற்றுள்ளதை சமீபத்தில் நான் பார்க்க நேர்ந்தது.

ஒரு சினிமாக்காரன் என்கிற வகையில் இதை நான் சகஜமாக எடுத்துக் கொண்டேன். ஏனெனில், சினிமாவில் எழுத்தாளர்களை விட 'எழுத்தாளர்கள்' நிறைய உண்டு என்பதை நான் நன்கு அறிவேன்.

பெரிய வெற்றிகளைப் பெற்ற பல படங்களின் கதைகள், உரையாடல்கள் - பிறரால் எடுத்தாளப் பெற்று, அவர்கள் உச்சநிலையைப் புகழிலும், பொருளிலும் எட்டியிருக்கிறார்கள்.

(தொடரும்.......)

# தொடர் கதை!



Bay watch தொடரில் நடித்துப் புகழ் பெற்றவர் பெமெலா என்டர்சன். அண்மையில் இவர் மூன்றாவது முறையாக திருமணம் செய்து கொண்டுள்ளார்.

39 வயதுடைய பெமெலா இம்முறை திருமணம் செய்து கொண்டது 35 வயதுடைய பாடகர் கிட் ரொக் என்பவரை.

இதற்கு முன்பதாக டொமிலி என்பவரைத் திருமணம் முடித்து இரு குழந்தைகளுக்குத் தாயானவர் இவர். 2002ஆம் வருடம் இரண்டாவது முறையாக கிட் ரொக்கைத் திருமணம் செய்து 2003ஆம் வருடம் பிரிந்து, மீண்டும் இந்த வருடம் அவரையே திருமணம் செய்து கொண்டுள்ளார்.

2005ஆம் வருடம் உலகில் உள்ள கவர்ச்சியான பெண்கள் வரிசையில் 8ஆம் இடத்தை இவர் பிடித்துக் கொண்டார்.

எல்லாவற்றையும் விட இவர் சைவப் பிரியர் (உணவில்) என்பது குறிப்பிடத்தக்கது!


# மொடலிங்

**மொ**டலிங் என்பது இன்று ஒவ்வொரு நாடுகளிலும் பல்வேறு வித்தியாசங்களுடன் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு கலையாக விளங்கி வருகின்றது.

இங்கு இந்த வாரம் நீங்கள் காண்பது தாய்லாந்து நாட்டின் மொடலிங் கண்காட்சியின் ஒரு காட்சியாகும்.



# இசையும் சிலுவையும்



**பி**ரபலப் பாடகி மெடோனா அண்மையில் ரோம் நகரில் ஒரு இசைக் கச்சேரியை நடத்தினார்.

இந்த இசை நிகழ்ச்சியில் 70 ஆயிரத்துக்கும் அதிகமான ரகசிகர்கள் வருகை தந்திருந்த போதும், கிறிஸ்தவ மதத் தலைவர்களது வொறுப்பை இந்த நிகழ்ச்சி பெரிதும் சம்பாதித்துக் கொண்டுள்ளது.

Contession எனும் இந்த நிகழ்ச்சியில் மெடோனா சிலுவையில் அறையப்பட்டுள்ளவாறு ஒரு காட்சி இடம் பெற்றிருந்தமையே இந்த வெறுப்புக்குக் காரணமாகும்.

பிறப்பில் கிறிஸ்தவரான மெடோனா இந்த இசை நிகழ்ச்சியைக் கண்டுகளிக்க பாப்பரசருக்கும் தனிப்பட்ட முறையில் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிலையில் மெடோனா சிலுவையில் அறையப்பட்ட காட்சியானது கத்தோலிக்க மத விசுவாசிகளை அவமரியாதைக்குட்படுத்தும் விடயமாகும் என வத்திக்கானில் உள்ள கர்தினால் மர்சிலோடேர்பினோ கூறியுள்ளார். பாவம் சிலுவை சுமக்கும் பாடகி!

## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....




**இப்படிச்** சொல்கின்ற போது ரஷ்யர்களுக்கும், மற்ற நாட்டினருக்கும் நம்முடைய ரகசியங்களைத் தெரிந்து கொள்வதில் அக்கறை இல்லை என்று அர்த்தமில்லை.

மஜூம்தார் என்றொரு இந்திய இஞ்சினீயர். அவருடைய மனைவி ஐரினா என்கிற ரஷ்யப் பெண். உளவாளியாக இருந்து தங்களுக்குத் தகவல் கொடுக்க வேண்டுமென ஐரினாவை KGBயினர் வற்புறுத்தத் தொடங்கினார்கள். இதனால் மஜூம்தாரும் ஐரினாவும் மேற்கத்திய நாடுகளில் புகலிடம் தேட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இந்தியாவில் அந்நிய உளவாளிகள் செயல்படுவது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது என்பதில் சந்தேகமில்லை. பாகிஸ்தான் ஒற்றர்கள் சுலபமாக எல்லையைத் தாண்டி இந்தியாவுக்குள் நுழைந்துவிட முடிகிறது. பாகிஸ்தான் ஒற்றர்கள் செயல்படுவதற்கு ஏற்ற களமாக காஷ்மீர் விளங்குகிறது.

இந்திய உளவுத் துறையின் பலஹீனம் 1962இல் சீன ஆக்கிரமிப்பின்போது வெளிப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் சீனா பற்றி உளவுத்துறை கொடுத்த தகவல்களுக்கு இந்திய அரசு போதுமான முக்கியத்துவம் தராததே காரணம் என்று ஒரு கருத்து நிலவுகிறது.

இந்தியாவை உளவு பார்க்கும் அந்நிய நாடுகளில் பாகிஸ்தான் செய்கின்ற உளவு வேலைதான் பரவலானதாகக் கருதப்படுகிறது. முக்கிய அமைச்சகங்களில் உள்ள அதிகாரிகளையும் ராணுவத்தினரையும் தங்கள் ஒற்றர்களாக ஆக்கிக் கொள்ளும் முயற்சிகளில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. சம்பா சம்பவம் இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக பேசப்படுகிறது.

1965இல் பாகிஸ்தானோடு போர் மூண்டபோது இந்திய காலாட்படையின் இருபத்தி மூன்றாவது டிவிஷன் கிழக்கு அரங்கத்திலிருந்து மேற்கு அரங்கமான பஞ்சாபிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது தொடங்கி இருபத்தி நான்கு மணி நேரத்துக்குள்ளாக இந்தத் தகவலை பாகிஸ்தான் ரேடியோ வெளியிட்டது. பாகிஸ்தான் ஒற்றர்கள் இங்கு ஆழமாக ஊடுருவி இருக்காவிட்டால் போர்க்காலத்தில் இப்படியானதொரு ராணுவ தகவலை அவ்வளவு சீக்கிரம் அவர்கள் அனுப்பி வைத்திருக்க முடியாது. அதுபோலவே 1991இல் பாகிஸ்தான் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக (Preemptive ) நம் மீது தாக்குதல் தொடுத்தது. உண்மையில் இந்திய அரசு அப்படி ஒரு தாக்குதலை பாகிஸ்தான் மீது தொடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்த போதுதான் அதை முன்கூட்டியே தெரிந்துகொண்டு பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியதாகச் சொல்லப்படுகிறது.

நம்முடைய கடற்படைத் தலைமை நிலையத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த எஸ்.டி.சௌபே என்கிற குமாஸ்தா கைது செய்யப்பட்டார். இரண்டாண்டுகளாக நம்முடைய கடற்படை பற்றிய ரகசியத் தகவல்களைப் பாகிஸ்தானுக்குக் கொடுத்து வந்தவர் இவர். இவரோடு சேர்ந்து அதே குற்றத்திற்காக வழக்கறிஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

1982இல் நம்முடைய உளவுத்துறையை (IB) சேர்ந்த இரண்டு கீழ்நிலை அதிகாரிகள் அந்நிய நாட்டுக்குத் தகவல் கொடுத்ததாகக் கைது செய்யப்பட்டார்கள். அதே ஆண்டு நம்முடைய பாதுகாப்பு அமைச்சகத்தில் ஆராய்ச்சிப் பிரிவில் வேலை பார்த்த இரண்டு குமாஸ்தர்கள் பாகிஸ்தான் ஒற்றருக்கு ரகசியத் தகவல்களைக் கொடுத்தபோது கையுங்களவுமாக பிடிபட்டார்கள்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# முறிந்த கதை!

**ஜெ**ஸீக்கா சிம்ப்சனின் திருமணம் அண்மையில் விவாகரத்தில் முடிந்துவிட்டது. நிக் லென்சியை இவர் திருமணம் முடிந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

கருத்து முரண்பாடுகள் காரணமாக இவர்களது திருமணம் முறிந்ததாகக் கூறப்பட்டாலும் உடல் நிலை வேறுபாடுகளும் காரணம் என்று ஒரு செய்தி பரவியுள்ளது.

அதாவது ஜெஸீக்கா அடிக்கடி 'வேறு' சுகங்களையும் நாடுபவர் என அவரது நெருங்கிய வட்டாரங்கள் கூறினாலும் எப்படியோ திருமணம் முறிந்த விட்ட நிலையில் இவர்.

ஐம்பது இலட்சம் டொலர் செலவு செய்து வீடொன்றைக் கட்டி முடித்து தனிமையில் வாழ்ந்து வருகின்றார். இந்த நிலையில் முப்பது இலட்சம் டொலர் தருகிறேன் என்று கூறி ஒரு பிரபலம் இவரைத் தனது வீட்டுக்கு அழைத்துள்ளாராம்! பணம் படும்பாடு!




# ஆசி வழங்கச் சென்றபோது போப் ஜோன்போல் சுடப்பட்டார்!

**போப்** ஆண்டவரை, துருக்கி இளைஞன் ஒருவன் துப்பாக்கியால் சுட்ட சம்பவம் உலகம் முழுவதையும் அதிர்ச்சி அடையச் செய்தது.

உலகக் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் தலைவரான போப் ஆண்டவரின் ஆட்சியின் கீழ் இருக்கும் வத்திக்கான் நகரில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில், முக்கிய பண்டிகைகளின்போது விசேஷ பூஜை - பிரார்த்தனைக் கூட்டம் போன்றவை நடைபெறுவது வழக்கம். இதில் பங்கேற்க உலகம் முழுவதிலும் இருந்து கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் செல்வார்கள்.

இந்த விசேஷ பிரார்த்தனையில் போப் ஆண்டவர் கலந்து கொண்டு. பொதுமக்களுக்கு ஆசி வழங்குவார்.


போப் ஆண்டவர் ஜோன் போல்

## சுடப்பட்டார்

அதுபோல, போப் ஆண்டவர் இரண்டாம் ஜோன் போல் 1981ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்துக்கு காரில் சென்றார். அங்கு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கூடியிருந்தார்கள்.

கூட்டத்தில் இருந்த ஒரு மர்ம மனிதன் போப் ஆண்டவரை நோக்கி துப்பாக்கியால் சுட்டான். போப் ஆண்டவரின் வயிற்றில் 2 குண்டுகள் பாய்ந்தன. இன்னொரு குண்டு கழுத்து அருகே பாய்ந்தது.

குண்டு பாய்ந்த இடங்களில் இருந்து இரத்தம் சொட்ட, போப் ஆண்டவர் மயங்கி விழுந்தார். அருகில் இருந்த உதவியாளர்கள் அவரைத் தாங்கிப் பிடித்துக்கொண்டார்கள்.

உடனே காரில் ஏற்றி, ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்கள். அங்கு போப் ஆண்டவரின் வயிற்றிலும், குண்டு பாய்ந்த மற்ற இடங்களிலும் 2 மணி நேரம் அவசர ஒபரேஷன் நடந்தது.

## பிரார்த்தனை

போப் ஆண்டவர் சுடப்பட்டதும் வத்திக்கான் நகர் டெலிவிஷனிலும், ரேடியோவிலும் நிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்பட்டன.

"போப் ஆண்டவர் சுடப்பட்டார். அவர் உயிர் பிழைக்க பிரார்த்தனை செய்யுங்கள்" என்று டெலிவிஷனிலும், ரேடியோவிலும் வேண்டுகோள் விடப்பட்டது. போப் ஆண்டவரை தரிசிக்கக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் அவர் சுடப்பட்டதை அறிந்து கதறி அழுதனர். மண்டியிட்டு அமர்ந்து, பிரார்த்தனை செய்தனர்.

போப் ஆண்டவரை நோக்கிச் சுட்டதில் 2 குண்டுகள் குறி தவறி கூட்டத்தில் இருந்த 2 பெண்கள் மீது பாய்ந்தன. அதில் அமெரிக்காவைச் சேர்ந்த ஆன் ஓடர் (வயது 60), ஜமைக்காவைச் சேர்ந்த ரோஸ் ஹால் (21) ஆகியோர் காயம் அடைந்தனர். அவர்களும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள்.

## முதல் தடவை

போப் ஆண்டவர் சுடப்பட்டது வரலாற்றிலேயே இதுதான் முதல் தடவை.

இதற்கு முன் 1970ஆம் ஆண்டில் அப்போதைய போப் ஆண்டவர் (6ஆவது போப் போல்) பிலிப்பைன்ஸ் நாட்டுக்குச் சென்றபோது அவரைக் கத்தியால் குத்த முயற்சி நடந்தது. ஆனால் அவர் மயிரிழையில் தப்பிவிட்டார்.

போப் ஆண்டவர் சுடப்பட்ட சம்பவத்தைக் கேள்விப்பட்டு, பிரதமர் இந்திரா காந்தி அதிர்ச்சி அடைந்தார். இந்த வன்முறைச் சம்பவத்துக்கு அவர் கண்டனம் தெரிவித்தார். இதேபோல உலகத் தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

அமெரிக்கா, பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகளில் இருந்தும் மருத்துவ நிபுணர்கள் சென்று போப் ஆண்டவருக்கு சிகிச்சை அளித்தார்கள். தொடக்கத்தில் மிகவும் அபாய கட்டத்தில் இருந்த போப் ஆண்டவர், மெல்ல மெல்ல உடல் நலம் தேறி பூரண குணம் அடைந்தார்.


ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருந்த போது அவர் தனது 61ஆவது பிறந்த நாளையும் கொண்டாடினார். போப் ஆண்டவரை சுட்டவன், சம்பவ இடத்திலேயே பிடிபட்டான். அவனைப் பொலிஸார் கைது செய்தனர்.

அவனுடைய பெயர் முகமது அலி அகா. துருக்கி நாட்டைச் சேர்ந்தவன். 23 வயது இளைஞனான அவன், பயங்கரவாதக் கூட்டத்தைச் சேர்ந்தவன். துருக்கியில் ஒரு கொலை வழக்கில் சம்பந்தப்பட்டு சிறையில் இருந்தான். போப் ஆண்டவரை கொலை செய்ய, அவன் ஜெயிலில் இருந்தபோதே திட்டமிட்டு இருக்கிறான். "போப் ஆண்டவரை கொலை செய்வேன்" என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு சிறையில் இருந்து தப்பினான். பல மாதங்கள் தலைமறைவாகத் திரிந்து பிறகு வத்திக்கான் நகரில் போப் ஆண்டவரை சுட்டான்.

முகமது அலியிடம் ரோம் நகர பொலிஸார் விசாரணை நடத்தினார்கள். "யாருடைய தூண்டுதலின் பேரிலும் நான் போப் ஆண்டவரை சுடவில்லை. நானாகவேதான் அதைச் செய்தேன்" என்று அவன் பொலிஸாரிடம் தெரிவித்தான்.

## மன்னிப்பு

தன்னைச் சுட்டவனை மன்னித்து விட்டதாக போப் ஆண்டவர் அறிவித்தார். அவர் மக்களுக்கு ஒரு செய்தி விடுத்தார். அவருடைய பேச்சு பதிவு செய்யப்பட்டு


இரண்டாவது ஜோன் போப் துப்பாக்கியால் சுடப்பட்டபோது...

வாத்திக்கான் ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டது.


அதில், "என்னுடன் இருப்பவர்களுக்கும், எனக்காகப் பிரார்த்தனை செய்பவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன். என்னுடன் காயம் அடைந்த 2 பேருக்கும் நான் பிரார்த்தனை செய்கிறேன். என்னைத் தாக்கிய சகோதரனை நான் முழுமையாக மன்னித்து விட்டேன். அவனுக்கும் பிரார்த்தனை செய்கிறேன்" என்று போப் ஆண்டவர் கூறியிருந்தார்.

போப் ஆண்டவர் ஜோன் போல் குணம் அடைந்து திரும்பியதும் முகமது அலி அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைக்குச் சென்று அவனைச் சந்தித்துப் பேசினார். அவனுக்காகப் பிரார்த்தனை நடத்தினார்.


---




**நிலமை** இவ்வாறு இருக்க, தென் வியட்நாமில் ஜனாதிபதி ஜோன்சனுக்கு எதிரான கருத்துக்கள் எழுப்பப்பட்டுக் கொண்டிருந்தன. ஜனாதிபதி ஜோன்சன் பதவிக்கு தகுதியற்றவர் என்றும் அவரை உடனடியாக விலக்கிவிடும் படியும் தென் வியட்நாமிய சுதேச மக்கள் கருத்துக்களை கூற ஆரம்பித்தனர். அவர்களின் கருத்துக்களின் நியாயம் இருக்கத்தான் செய்தது. அவர்கள் இக்கருத்துக்களை சும்மா கூறவில்லை. வியட்நாமில் கிட்டத்தட்ட 70? மக்கள் புத்த சமயத்தைச் சார்ந்தவர்கள். 10? குறைவான எண்ணிக்கையில் கிறிஸ்தவ மதத்தினை பின்பற்றுவோர்கள் இருந்தனர். இவர்கள் பெரும் பணக்காரர்களாகவே இருந்தனர். இவர்கள்




மற்றவர்களுடன் பெரிதாக கதைக்கவோ, எந்த வித சம்பந்தமும் வைத்துக் கொள்வதில்லை. தங்களை கடவுளின் பிள்ளைகள் என்று கூறிக் கொள்வது இவர்களின் வழமை. இவர்கள் தங்களுக்கென்று எல்லாம் தனியாகவே வைத்திருந்தார்கள். அமெரிக்காவின் ஆட்சியின் கீழ் தென் வியட்நாம் வந்தவுடன் இவர்களின் பாடு பெரும் கொண்டாட்டமாகி விட்டிருந்தது. ஜனாதிபதி ஜோன்சனும் கூட இவர்களுக்குத் தான் எல்லாவகையிலும் முன்னுரிமை வழங்கினார். இவ்வாறிருக்கையில், எல்லா புத்த மதத்தைச் சார்ந்தவர்களையும் கிறிஸ்தவ மதத்தில் இணைந்து கொள்ளச் சொன்னால் என்ன என்ற எண்ணம் இவர்களுக்கு உதித்தது. இதனை ஜனாதிபதி ஜோன்சன் மூலம் அமுல்படுத்தினர். எந்த ஒரு குடிமகனும் புத்த மதத்தைப் பின்பற்ற வேண்டாம் என்றும் அவர்கள் அனைவரும் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினால் தான் அவர்களுக்கு எல்லா விதமான சலுகைகளும் கிடைக்கும் என்றும் அவர் அறிவித்தார். இதற்கு மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு இருந்தாலும் தங்கள் வயிற்றைக் காப்பாற்றிக் கொள்ள என்ன செய்ய என்று வெளியில் கிறிஸ்தவர்கள் போலும் உள்ளூர புத்தமதத்தையும் பின்பற்றினார்கள். இதற்கிடையில் புத்தரின் 2527ஆவது பிறந்த தின விழாவைக் கொண்டாட புத்த மதத் துறவிகள் அழைப்பு விடுத்திருந்தார்கள். புத்த மதத்தவர்களின் மிகப்பெரிய பண்டிகையைக் கொண்டாட மக்கள் எல்லோரும் அணி திரண்டு வரவேண்டும் என்று அழைத்ததின் பேரில் எல்லா புத்த மதத்தைச் சார்ந்தவர்களும் ஒன்று கூடினார்கள். இவர்கள் எல்லாம் ஒரு ஊர்வலமானகப் போய்க் கொண்டிருக்கும்போது இவர்களை இடைமறித்த பொலிஸார் அனைவரையும் அடித்து விரட்டினார்கள் இனிமேல், யாரும் புத்த மதத்தைப் பின்பற்றக் கூடாது. அப்படி யாரும் மீறி பின்பற்றினால் அவர்களுக்குத் தகுந்த தண்டனை தரப்படும் அதே வேளை புத்த மதத்தைப் போதிக்க முற்பட்டால் அவர்கள் பொது மக்கள் முன்னிலையில் தூக்கில் போடப்படுவார்கள் என பகிரங்கமாக எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதனால் பயந்த சிலர் உடனடியாக கிறிஸ்தவ மதத்திற்கு மாறினார்கள். இவர்களின் இந்த மாற்றம் புத்த துறவிகளுக்கு பிடிக்கவில்லை. அவர்கள் அரசாங்கத்துடன் அதாவது ஜனாதிபதி ஜோன்சனுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்த போதெல்லாம் அவை நிராகரிக்கப்பட்டு வந்தது. இதனால் கோபமடைந்த அவர்கள் மிகப் பெரிய போராட்டம் ஒன்றை நடத்தத் துணிந்தனர். இதில் மிக அதிக தொகையானவர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவரும் தங்கள் உரிமைக்காக குரல் கொடுப்பதற்காகவே வந்திருந்தனர். இப் போராட்டமானது நேச நாட்டுப் படைகளால் குழப்பப்பட்டது. இதில் பங்கு பற்றிய பல்கலைக்கழக மாணவர்கள் மிகவும் கொடூரமாக தாக்கப்பட்டனர். மாணவிகள் பலரைப் பிடித்து அடைத்து சித்திரவதை செய்து கொண்டிருந்தனர். இதில் பாலியல் சேட்டைகளும் அடங்கும். எவ்வாறாயினும் அந்தப் பேரணி குழப்பப்பட்டுவிட்டது. இதனால் கடும் கோபமடைந்த புத்த துறவிகள் பொதுமக்கள் எவரையும் துணைக்கு வரவேண்டாம் என்று கூறிவிட்டு, தாங்கள் மட்டும் போராட்டத்தில் குதித்தனர். இவர்களின் கூற்று நீங்கள் மதத்தைப் பரப்புங்கள். ஆனால் புத்த மதத்தை யாரும் பின்பற்ற வேண்டாம் என்று தடை போட வேண்டாம் என்றிருந்தது. இக்கருத்தினை வலியுறுத்தி 66 வயதுடைய வயது முதிர்ந்த புத்த துறவியொருவர் சனநெருக்கடி மிகுந்த ஒரு பாதையில் நின்று கொண்டிருந்தார். அவரைச் சுற்றி சில புத்த பிக்குகள் நின்றனர். அமெரிக்க இராணுவத்தினர் ரோந்து வந்து கொண்டிருக்கும் போது அவர்களின் முன்னிலையில் பெற்றோலை தன் மீது ஊற்றி தன்னை எரியூட்டிக் கொண்டார். இவரின் இந்தச் செய்கையை எதிர்பார்க்காத அமெரிக்க இராணுவத்தினர் என்ன செய்வது என்று தெரியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். புத்த துறவி எரியும் போது



நேராக கண்ட ஒருவர் கூறும் போது, புத்த துறவி பற்றி எரியும் போது அவரின் உடலில் எந்த வித நடுக்கமோ எந்த அசைவோ இல்லை அதேபோல் எந்த வித அவலக்குரலும் இவர் கொடுக்கவில்லை. அதேவேளை இவர் அங்கிங்கு ஓடித்திரியவும் இல்லை, நின்ற இடத்தில் கல் போல் நின்று கொண்டே எரிந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டார். அவர் எரிந்து கொண்டிருக்கையில் மற்றைய புத்த துறவிகள் மக்களிடம் அவர் எரிவதன் காரணத்தை துண்டு பிரசுரங்களாகப் பிரசுரித்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.


இச்செய்கையால் மிக ஆயிரக்கண்க்கான புத்த துறவிகள் கைதானார்கள். இவர்களை விடுவிக்க கூறி அதே இடத்தில் 5 புத்த துறவிகள் தங்களை எரியூட்டிக் கொண்டு மாண்டனர். இச்செய்தி பத்திரிகைகளில் எல்லாம் பற்றி எரிந்து கொண்டிருந்தது. பத்திரிகைச் செய்தியினை படித்த ஜனாதிபதி அவர்கள் எல்லோரும் வியட்கொங் இராணுவத்தினருக்கு ஆதரவானார்கள் அதனால் தான் தங்களை எரித்து என்னை பயங்காட்டுகிறார்கள். அப்படி அவர்கள் வியட்கொங்கிங்கு ஆதரவில்லை என்றாலும் கூட எனக்கு கவலையில்லை எந்தளவு பெற்றோலை வீணாக்க முடியுமோ. அவ்வளவிற்கு புத்த மதத்தவர்கள் வீணாக்கி பார்க்கட்டும் நான் இதற்கெல்லாம் மசியப் போவதில்லை என்று பெரும் சவலாக அறிக்கை விட்டார். இவரின் இந்த கருத்தினை அமெரிக்காவில் ஜனாதிபதி கென்னடியும் பார்த்தார். பெரும் கோபமடைந்த அவர் ஜோன்சனின் நடவடிக்கைகளை ஆராய்ந்து உடனடியாக தனக்கு அறிக்கை தருமாறு இரகசியப் பொலிஸாருக்குக் கட்டளையிட்டார்.

(தொடரும்)




எண்ணு மெண்ணங்கள் யாவினும் வெற்றி,
எங்கும் வெற்றி, எதனினும் வெற்றி,
கண்ணு மாருயி ரும்மென் நின்றள்
காளித் தாயிங் கெனக்கருள் செய்தாள்;

- சுப்பிரமணிய பாரதியார்



# புதுச் சட்டை!



**புது** டிரெஸ் போடுவது என்றால் எல்லாருக்கும் மிகவும் பிடித்தமான விஷயம் இல்லையா குழந்தைகளே...எத்தனை வயதானாலும் புது டிரெஸ் போடப் போறோம் என்றால் ஒரு ஜாலிதானே. சிலருக்கு பொங்கல், தீபாவளி வரும்போது முதல் நாள் இரவு தூக்கமே வராது. எப்படா விடியும், புது டிரெஸ் போடலாம் என்று இருக்கும் இல்லையா? பால்சாக் என்பவர் பிரபல பிரெஞ்சு கதாசிரியர் அந்தக் காலத்தில் கதாசிரியர்கள் எல்லாம் எவ்வளவு சம்பாதித்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? மிகவும் குறைந்த வருமானம்தான். அதில் நல்ல சட்டைகள் போடுவது என்றால் எங்கே

பாப்பா முரசு சிறுகதை

போவது?

பால்சாக் எப்போதும் மட்டரகமான சட்டைகளையே அணிந்து வந்தார். பார்ப்பவர்களெல்லாம் அந்த சட்டையினைப் பார்த்து கேலியும் கிண்டலும் செய்து வந்தனர். தம்மைக் கேலி செய்பவர்களுக்கு ஒரு நாளாவது பாடம் புகட்ட வேண்டும் என்று தீர்மானித்தார்.


ஒருநாள்....

பாரீஸ் நகரத்துக்குச் சென்றார். விலை உயர்ந்த வெல்வெட் கோட் ஒன்றினை வாங்கி அணிந்து கொண்டார். பாரீஸ் நகரிலிருந்து கிராமத்திற்குத் திரும்ப வெகு நேரமாகிவிட்டது. அப்படியிருந்தும் தாம் அணிந்திருந்த சட்டையினை அனைவருக்கும் காட்டியே ஆக வேண்டும் என்ற ஆத்திரம் அவருக்கு இருந்தது.

அதற்காக மெழுகுவர்த்தி ஒன்றினை ஏற்றி எடுத்துக் கொண்டு நண்பர்கள் ஒவ்வொருவரின் வீட்டுக்கும் சென்று கதவைத் தட்டி எழுப்பி, தான் அணிந்துள்ள புதிய உடையைக் காண்பித்த பின்பு, தமது வீட்டிற்கு வந்து கதவைத் தட்டினார். வேலைக்காரன் முணுமுணுத்தவாறே கதவைத் திறந்தான். உற்சாகத்தின் மிகுதியால் "புதிய கோட் போட்டிருக்கிறேன்...பார்த்தாயா? எப்படியிருக்கு?" என்று கேட்டார்.

"இந்தக் கோட்டை காட்டத்தான் என் தூக்கத்தைக் கெடுத்தீர்களா?" என்று கூறி கொட்டாவி விட்டவாறே படுக்கைக்குப் போனான் வேலைக்காரன். பால்சாக் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே!

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 05.09.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 659**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 656

**பரிசுக்குரியவர்:**
**ஏ. ரொஸ்னியா ஜெனட்,**
**தரம் - 8பி, புனித கப்ரியல் மகளீர் கல்லூரி, ஹட்டன்.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எஸ். விரோஸ்சன், தரம் - 2, புளியாவத்த தமிழ் மகா வித்தியாலயம், புளியாவத்த. | பி. தர்சினி, கோணாவல வீதி, ராஜவல, கண்டி |
| ஜெ. துஷானி, விதனையார் வீதி, சண்டிக்குழி, யாழ்ப்பாணம். | அ. சைலஜா, மூர்வீதி, மன்னார். |
| அ. பிருந்தா, பிரதான வீதி, மன்னார். | ச. ஜோன்சன், பிரதான வீதி, கல்முனை |
| என். விருதிகா, குருமன் காடு, வவுனியா | ம. கோகிலா, மல்வத்த வீதி, தெஹிவளை |
| ர. மியுஸிகா, பிரதான வீதி, புத்தளம். | க. பாத்திமா றினோஸா, காலி வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு - 04 |

# ஆத்திசூடி

## வஞ்சகம் பேசேல்!

**நீ உள்ளத்தில் ஒன்றை மறைத்து வாயளவில் கபடமாகப் பேசாதே.**

எஸ். நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

# மரங்கொத்தி


கொண்டையை
கொண்டையை
ஆட்டிவரும் மரங்கொத்தியே!
உன் கொண்டைக்கு நான்
பூ தருவேன்
அருகில் பறந்து வா!
தலையில் உள்ள
தொப்பி
உனக்கு யார்
கொடுத்தது?
பல நிறத்தில் சிறகுகள்
எங்கே கிடைத்தன?
பறந்து பறந்து மரத்தைக்
கொத்தி
பூச்சி பிடிக்கிறாய்



உன் பசிக்கு இரையாக
வேறு ஏதும்
கிடைக்கலையா?
உளியைப் போல
நீளமான
அலகிருக்குதே!
கொட்டைகளை
உடைத்துத் தின்றால்
பசி அடங்காதா?
பட்டைக்குள்ளே
ஒளிந்திருக்கும்
பூச்சி புழுக்களை
பயங்கரமாத் தின்னுகிறாயே
பாவமில்லையா?

# அதிசய உலகம்


## வயதான பண்டா



**வ**யதான பண்டா கரடி ஒன்றின் பெயர் ஷிஷி. கண் புரை நோயால் இந்தக் கரடி அவதிப்பட்டு வந்தது. சீனாவில் தென் பகுதியில் உள்ள குவான்கோசு மிருகக் காட்சிச் சாலையைச் சேர்ந்த இந்தக் கரடிக்கு அறுவைச் சிகிச்சை செய்ய முடியாமல் டாக்டர்கள் தவித்தனர். காரணம், அதன் வயது 26. பொதுவாக இந்தக் கரடிகள் கூண்டுகளுக்குள் அடைபட்டு இருந்தால் 20 ஆண்டுகள் வரை தான் உயிர் வாழும்.

## ஆள் உயரத் தேள்!

**ஸ்**கொட்லாந்தில், 33 கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஆள் உயரமுள்ள தேள்கள் உயிர் வாழ்ந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது. வண்டல் மண் பாறைகளில், 33 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய விலங்குகளின் கால் தடயங்களை ஆராய்ந்து வரும் பிரிட்டன் ஷெப்பீல்டு பல்கலைக்கழகப் புவியியல் பேராசிரியர் மார்ட்டின் ஒயிட் இதைக் கண்டுபிடித்துள்ளார்.




அந்தத் தேள் 1.6 மீட்டர் உயரமும் ஒரு மீட்டர் அகலமும் உடையதாக இருந்திருக்க வேண்டும். அது சென்ற தடம் வண்டல் மண் பாறையில் 6 மீட்டர் நீளத்துக்குக் காணப்படுகிறது. தேளின் பிறை வடிவ கால் தடங்களும், அதன் வால் ஏற்படுத்திய வளைவுக் கீறல் தடங்களும் அதில் உள்ளன.

# சில விடுகதைகள்

1. அடித்து உடைத்தால் ஆனந்தமாய் தாகம் தீர்ப்பான் - அவன் யார்?
2. நாலு கால் இருந்தும் நகராதவன் - அவன் யார்?
3. பல்லிருந்தும் கடிக்காதவன் அழகுபடுத்துவதில் கெட்டிக்காரன் - அவன் யார்?
4. கயிற்றை சுற்றி வீசினால் கலகலவென்று ஆடுவான் - அவன் யார்?
5. அறைகள் அறுநூறு அத்தனையும் ஒரே அளவு - அது என்ன?
6. சட்டையைக் கழற்றியவன் சத்தமில்லாமல் போகிறான் - அவன் யார்?
7. என்னை அவனில் காணலாம் - நான் யார்?
8. பூத்தது ஒரே பூ - அதையும் தலையில் வைக்கமுடியாது - அது என்ன?
9. செக்கச் சிவப்பி நெருப்பில் தினம் வெந்த நாங்கள் ஒரு சின்னக் கல்லுக்கு சிதறிப்போவோம் - நாங்கள் யார்?
10. பிஞ்சானான், காயானான்; பழமாகாமல் பஞ்சானான் - அவன் யார்?

**விடைகள்**
1. தேங்காய்
2. நாற்காலி
3. சீப்பு
4. பம்பரம்
5. தேன்கூடு
6. பாம்பு
7. கண்ணாடி
8. வாழைப்பூ
9. மண் பானை
10. பருத்தி.


# தகவல் பெட்டி



உலகிலேயே அதிக வயதுடைய கழுதையென்று உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடிக்கப்போகும் 'லடி' என்ற பெயர் கொண்ட கழுதைக்கு இப்போது அறுபது வயதுதான் ஆகிறது. பிரிட்டனில் வாழும் லடியின் அம்மாக் கழுதை, வெட்டப்படுவதற்காக ரயிலில் கொண்டு செல்லப்பட்ட பொழுது ரயில் விபத்துக்குள்ளானதால் உயிர்தப்பியது. கழுதைச் சவாரிக்குப் பயன்படுத்தப்பட்ட லடி இன்னமும் தேகாரோக்கியத்துடன் உள்ளது. லடிக்கு அடுத்தபடியாக வயதைப் பொறுத்தளவில் இரண்டாவது இடத்திலுள்ள கழுதை மெக்ஸிகோவில் வாழ்ந்து வருகிறது.

## வைர விழாக் காணும் கழுதை


## கடல் 'ஜெற்'





மேலெழக் கூடிய உந்தும் இறக்கை கொண்ட குதிரைச் சக்தி வாய்ந்த படகோட்டத்தில் சாதனை படைக்கும் முயற்சியில் நியூயோர்க்கிலுள்ள பெர்முடாவில் கிறிகர் ரார்ஜான் என்பவர் ஈடுபடவுள்ளார். இந்த முயற்சி எதிர்வரும் வசந்த காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. ஏரோ யார்ட் என்ற படகோட்டும் சங்கத்தின் தலைவரான இவரது சாதனை முயற்சிக்கு 45 கட்டுமரங்கள் பக்கபலமாகச் செல்லுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## அஞ்சாத சிங்கம்


மனிதர்களைக் கொட்டி ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய தேனீக்களிடமிருந்து தப்பிப் பிழைப்பதில் கூட பயங்கரச் சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. கொலம்பியாவைச் சேர்ந்த புகாராமங்கா என்ற இடத்தில், தேனீ வளர்ப்பாளரொருவர் சுமார் ஐந்து இலட்சம் தேனீக்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துச் சாதனை படைத்தார். முன்னைய சாதனை 1998இல் நிகழ்த்தப்பட்டதாக உலக சாதனைகளைப் பதிவு செய்யும் புத்தகமான 'கின்னஸ்' தெரிவித்தது. மூன்றரை இலட்சம் தேனீக்களிலிருந்து அவர் தன்னைக் காப்பாற்றிக் கொண்டாராம். அடே எங்கப்பா இவ்வளவு தேனீக்களை எப்படித்தான் எண்ணினார்களோ?



## எதிரான சறுக்கல்



பனிச் சறுக்குதல், நீரில் சறுக்குதல் போன்று காற்றின் வேகத்துக்கெதிராக நீரில் சறுக்குகின்ற ஒரு விளையாட்டும் உண்டு. நமீபியாவின் வால்விஸ் குடாவில் இவ்வாறான வேகப் போட்டி வாரம் 2004ஆம் ஆண்டு அக்டோபர் 18 - 24ஆம் திகதிகளுக்கிடையில் நடைபெற்றது. பஜொர்ன் டங்கர்பெக் இதில் சாதனை படைத்துள்ளார்..



## விஷப் பரீட்சை

லாஸ் வெகாஸிலுள்ள வரலாற்று முக்கியத்துவமிக்க சீசர் அரண்மனையிலுள்ள நீரூற்றுக்கு அருகே, உயர்ந்த கட்டடத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் பாய்ந்து வீரதீரச் செயலுக்கான சாதனையைப் படைத்தார் மைக் மெற்ஸ்கர் என்பவர். நீண்டதூர மோட்டார் சைக்கிள் பாய்ச்சலில் சாதனை படைத்தவரென்ற பெயர் கின்னஸ் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. 125 அடி உயரத்திலிருந்து இவர் பாய்ந்த சந்தோஷத்தில், மோட்டார் சைக்கிளிலிருந்து எகிறிக் குதித்து, பார்த்துக் கொண்டிருந்த தனது மனைவி, பிள்ளைகளை ஆரத் தழுவினாராம்.



விஷால் - மம்தா மோகன்தாஸ்
சிவப்பதிகாரம்

# ‘திமிரு’ இன்னொரு திருப்பம்.

செல்லமே படம் மூலம் 3 வருடங்களுக்கு முன்பு தமிழில் அறிமுகமானவர் விஷால். அப்படம் வெற்றி பெற்றது. கடந்த வருடம் சண்டைக்கோழியில் நடித்தார். அதுவும் 150 நாட்களை தாண்டி ஓடியது. தற்போது அவர் நடித்து 3ஆவதாக வெளியாகியுள்ள திமிரு படம் கடந்த வெற்றிகளை முறியடிக்கும் என்ற பரபரப்பாக எதிர்பார்ப்பை கிளப்பியுள்ளது.

விஜய் நடித்து பட்டையை கிளப்பிய கில்லி படம் போன்று விறுவிறுப்பான காட்சிகளை கொண்ட படமாக திமிரு அமைந்துள்ளது.

இந்த படத்துக்குப்பின் விஷால் முன்னணி கதாநாயகர்கள் வரிசைக்கு நிமிர்ந்துள்ளார். சம்பளம் 50 லட்சத்தில் இருந்து ரூ.1 கோடியாக உயர்ந்துள்ளது.

திமிரு, படம் தூள் கிளப்புவதை பார்த்து சந்தோஷமாக இருக்கிறேன் என்றார் விஷால். இந்த வெற்றி மூலம் அடுத்த படங்களை இன்னும் சிறப்பாக செய்ய வேண்டுமென்ற பொறுப்புணர்வு அதிகமாகி உள்ளது என்றும் அவர் சொன்னார். கரு.பழனியப்பன் இயக்கும் சிவப்பதிகாரம் படத்திலும் ஹரி இயக்கும் தாமிரபரணி படத்திலும் விஷால் தற்போது நடித்து வருகிறார்.

சிவப்பதிகாரத்தின் கதை எனக்கு ரொம்ப பிடித்துள்ளதாக விஷால் தெரிவித்தார். தாமிர பரணி தனது செல்வாக்கை இன்னும் ஒருபடி உயர்த்தும் என்று கூறினார். விஷால் சினிமா குடும்பத்தில் இருந்து வந்தவர். இவர் தந்தை ஜி.கே.ரெட்டி சினிமா தயாரிப்பாளர். அண்ணன் அஜய் கிருஷ்ணா ஒன்றிரண்டு படங்களில் கதாநாயகனாக நடித்துள்ளார்.

சினிமாவில் நடிக்க அண்ணன்தான் தூண்டுகோலாக இருந்தாரா? என்று கேட்டபோது விஷால் மறுத்தார். 12ஆவது வகுப்பு படிக்கும்போது நாகார்ஜுனாவின் தெலுங்கு படமான சிவாவை பார்த்தேன். அப்போது நடிப்பு ஆசை துளிர் விட்டது என்று கூறினார்.

விஷால் டான் பாஸ்போ பள்ளியில் படித்தவர். லயோலா கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தார். இந்தி டைரக்டர் ராம்கோபால் வர்மாவிடம் ஒரு சில படங்களுக்கு உதவி இயக்குனராக பணியாற்றினார்.

பின்னர் அர்ஜுன் நடித்த வேதம், ஏழுமலை படங்களிலும் உதவி டைரக்டராக இருந்தார். ஷங்கரிடம் இணை இயக்குனராக இருந்த காந்தி கிருஷ்ணா செல்லமே படத்துக்கு ஹீரோ தேடியபோது விஷாலின் வளர்த்தியான கறுப்பு தோற்றம் பிடித்து கதாநாயக னாக்கினார்.



சத்தியராஜ் - ராதா
அடாவடி



## நடிகை சுமாவுக்கு 25ஆம் திகதி திருமணம்

மகேஷ்

பிரபல இந்தி நடிகை சுமாரங்கநாத். இவர் தமிழில் புதுப்பாட்டு, மாநகர காவல் ஆகிய படங்களில் நடித்துள்ளார்.

இந்தியில் கவர்ச்சியாக பல படங்களில் நடித்துள்ளார். அவை தமிழில் மொழி மாற்றம் செய்து வெளியிடப்பட்டன.

சுமாரங்கநாத் பிரபல இந்தி தயாரிப்பாளர் பண்டிவாலியாவை காதலித்தார். பொதுநிகழ்ச்சிகளில் இருவரும் சேர்ந்து பங்கேற்றனர். இவர்கள் காதல் பற்றி மும்பை பத்திரிகைகள் கிசுகிசுத்தன. இருவரும் பதில் சொல்லாமல் மௌனம் காத்தார்கள். தயாரிப்பாளர் பண்டி வாலியா ஏற்கனவே திருமணமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் சுமாரங்கநாத் - பண்டிவாலியா திருமணம் வருகிற 25ஆம் திகதி நடக்கிறது. திருமண வேலைகளில் சுமாரங்கநாத் தீவிரமாக உள்ளார்.

திருமணம் பற்றி கேட்டபோது விரிவாக சொல்ல மறுத்தார். என் சொந்த விஷயம் பற்றி பேச தயாராக இல்லை. இது என் மனசோடு சம்பந்தப்பட்ட விஷயம். என் நெருங்கிய நண்பர்களுக்கு விருந்து கொடுத்தேன். இது தவிர வேறெதுவும் சொல்வதற்கில்லை என்று கூறினார்.



## ஜெயம் பட வில்லன் கதாநாயகன்

வி.ஆர்.டி.டி. ஆர்ட் பிலிம்ஸ் இப்படிக்கு காதலுடன் சீனு என்ற படத்தை தயாரிக்கிறது. சீனு கோர்.ஆப் அனு என்ற பெயரில் தெலுங்கில் வெளிவந்த படத்தை தமிழில் ரீமேக் செய்கின்றனர். இதில் ஜெயம் படத்தில் வில்லனாக நடித்த திலீப் கதாநாயகனாக நடிக்கிறார். மத்திய பிரதேசத்தை சேர்ந்த ஸ்வப்னா கதாநாயகியாக நடிக்கிறார். இன்னொரு காதல் ஜோடியாக விஜய்கணேஷ் - சாமியாராய் நடிக்கிறார்கள். இவர்களுடன் டி.பி.கஜேந்திரன், கோட்டாச்சீனிவாசராவ், முத்துகாளை, சுகுமார், பெஞ்சமின், கே.ஆர்.வச்சலா, ஆர்த்தி, செம்புலி ஜெகன், சுவாமிநாதன், பி.ஆர்.வரலட்சுமி ஆகியோர் நடிக்கிறார்கள்.

ஒரு காலனியில் எந்தவித பொறுப்பும், கவலையும் இல்லாமல் ஊர் சுற்றிக்கொண்டிருக்கும் சீனு, அதே காலனியில் குடிவரும் அனுவைப் பார்த்த நாள் முதல் அவள் மீது காதல் கொண்டு தனது நடவடிக்கைகளை முற்றிலும் மாற்றிக்கொள்கிறான். காலனியில் குடியிருப்போருக்கு ஆச்சரியம் ஏற்பட்டு, இவர்களின் காதல் தெரியவர, பின்பு ஏற்படும் பிரச்சினைகளை கலகலப்பாக ஜனரஞ்சகத்துடன் கொண்டு செல்வது தான் கதை. இதில் இளம் வயது காதல், அந்த வயதுக்குரிய சண்டைச்சச்சரவுகள் நகைச்சுவை என காட்சிகள் அமைத்துள்ளனர்.

## 50 யானைகள்

கமலஹாசன் பத்து வேடங்களில் நடிக்கும் தசாவதாரம் பலத்த எதிர்பார்ப்பை கிளப்பியுள்ளது. வெளிநாட்டுக்கு போய் இதற்காக மேக்கப் டெஸ்ட் செய்து வந்துள்ளார்.

இதன் படப்பிடிப்புக்காக சமீபத்தில் 50 யானைகள் 50 குதிரைகளை கொண்டு வந்தனர். அவைகளை பாதுகாக்க 50 டாக்டர்களும் வரவழைக்கப்பட்டிருந்தனர். இவ்வளவுக்கும் படப்பிடிப்பு மூன்று நிமிடம்தான் நடந்ததாம்.

# இன்னொரு திரை ஜோடி சேர்கிறது!


சூர்யா

காதல் கொண்டேன் படம் மூலம் தமிழுக்கு அறிமுகமானவர் சோனியா அகர்வால். கோவில், ஒருநாள் ஒரு கனவு, ஒரு கல்லூரியின் கதை, மதுர, 7ஜி ரெயின்போ காலனி, திருட்டுப்பயலே, புதுப்பேட்டை உட்பட 10க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். சோனியா அகர்வாலுக்கும், செல்வராகவனுக்கும் நட்பு ஏற்பட்டு காதலானது. பொது விழாக்களில் இருவரும் சேர்ந்து பங்கேற்றனர். இருவரும் திருமணம் செய்து கொள்ளப்போவதாக நீண்ட நாட்களாக கிசு கிசுக்கப்பட்டது. இந்த நிலையில் இவர்கள் திருமணத்தை இருவீட்டு பெற்றோரும் முடிவு செய்துள்ளனர். செல்வராகவன் குடும்பத்தினர் சோனியா அகர்வாலின் சொந்த ஊரான சண்டிகர் சென்று திருமண நிச்சயதார்த்தத்தை முடித்து வந்துள்ளனர்.

சோனியா அகர்வால் - செல்வராகவன் திருமணத்தை செல்வராகவனின் தந்தை கஸ்தூரிராஜா அதிகாரப்பூர்வமாக அறிவித்தூள்ளார். நிருபர்களிடம் அவர் கூறியதாவது :-

செல்வராகவன் - சோனியா அகர்வால் திருமணம் டிசம்பர் மாதத்துக்குள் நடைபெறும். சண்டிகர் சென்று சோனியா அகர்வால் குடும்பத்தினருடன் பேசி திருமணத்தை முடிவு செய்து வந்துள்ளோம். திருமணத் தேதியை இன்னும் முடிவு செய்யவில்லை. இருவீட்டாரும் கலந்து அதை முடிவு செய்வோம். இவ்வாறு கஸ்தூரிராஜா கூறினார்.

திருமணம் சென்னையில் நடக்கிறது. சோனியா அகர்வால் ஏற்கனவே கைவசம் இருந்த படங்களில் நடித்து கொடுத்து விட்டார். புதுப்படங்கள் எதிலும் அவர் ஒப்பந்தம் ஆகவில்லை. திருமணத்துக்கு பிறகு நடிப்புக்கு முழுக்கு போடுவார் என்று தெரிகிறது.

## பாங்கொக் வர மறுத்த பாவனா

கிழக்கு கடற்கரைசாலை படத்திற்காக ஒரு பாடல் காட்சியை படம் பிடிக்க தாய்லாந்து தலைநகர் பாங்கொக் செல்ல திட்டமிட்டிருந்தனர்.

ஸ்ரீகாந்த், பாவனா, இயக்குநர் எஸ்.எஸ்.ஸ்டேன்லி உட்பட ஒட்டுமொத்த யூனிட்டும் கிளம்ப ஆயத்தமான நேரத்தில் பாவனா அவ்வளவு தூரமெல்லாம் வரமுடியாது சாரி இங்கே எங்காவது அந்த பாடல் காட்சியை எடுத்துக்கொள்ளுங்கள் என்று மறுத்துக் கூறிவிட்டாராம்.

அமைதியான சுபாவம் கொண்ட தனக்கு அயல்நாட்டில் ஏதாவது ஆபத்து வந்துவிடுமென்ற பயம்தான் பாவனாவிற்கு. அதனால் பாங்கொக் புரோகிராம் பணால் ஆகிவிட்டது.

## கிரண், மும்தாஜ் நாயகிகள்


பிபாஷா பாசு

தமிழ் நடிகைகள் மும்தாஜ், கிரண் இருவரும் மலையாளப் படமொன்றில் கதாநாயகிகளாக நடிக்கிறார்கள்.

பிரமோத் பப்பன் இப்படத்தை இயக்குகிறார். கலாபவன் மணி கதாநாயகனாக நடிக்கிறார்.


விக்ராந்- ஹனி ரோஸ் முதல் கனவு

## வில்லி நடிகைகளால் வெற்றி பெறும் படங்கள் : சத்யராஜ்


சத்யராஜ் நடிக்கும் ரீல் நம்பர்-15 என்ற படம் தமிழில் அடாவடி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து சத்யராஜ் நிருபர்களிடம் கூறியதாவது :-

அடாவடி படத்தில் சினிமா டைரக்டராக நடிக்கிறேன். ஊரில் நடக்கும் தப்புகளை மறைமுகமாக படம் பிடித்து காட்டும் கேரக்டரில் வருகிறேன் எனக்கு ஜோடியாக ராதா திமிர் பிடித்த கேரக்டரில் நடிக்கிறார். அவர் திமிரை நான் எப்படி அடக்குகிறேன் என்பதுதான் படத்தின் கரு.

படங்களில் வில்லத்தனமாக வந்து இறுதியில் தியாகம் செய்யும் கேரக்டரில் கதாநாயகிகள் நடித்தால் அப்படங்கள் வெற்றி பெறும். டி.ஆர்.ராஜகுமாரி பல படங்களில் இது போல் நடித்ததால் பேசப்பட்டார். படையப்பாவில் ரம்யாகிருஷ்ணன் கேரக்டரும் அப்படித்தான் ஹிட் ஆனது. வால்டர் வெற்றிவேல் படம் சுகன்யாவால் வெற்றி பெற்றது. அதுபோல்தான் இப்படத்தில் ராதாவின் கேரக்டர் உள்ளது.

இயக்குனர் பரத்ஹண்ணா சிறப்பாக நடிப்பு சொல்லி கொடுத்தார். அவர் விரைவில் நடிகராவார்.


கமல்

## வெளிச்சத்துக்கு வந்த காதலர்


ஜோதிகா

திரைச்சாயல் நடிகை பொலிசுக்கு போய் மூடி மூடி வைத்த காதலரை வெளி உலகுக்கு காட்டி விட்டார். யாருக்கும் தெரியாமல் ரகசியமாய்த்தான் கூட்டிப் போனாராம். போட்டோ கிராபர்களின் கழுகு கண்கள் அவரை கொத்தி விளம்பரபடுத்தி விட்டதாம். அப்செட்டில் இருக்கிறார் நடிகை.



# தேன் கிண்ணம்

## கடைசி நிமிடங்களுக்காக...

நினைத்து நினைத்துப் பார்க்கிறேன்...
நிர்ப்பந்தமான எம் பிரிவையும்,
நிர்மூலமான நம் உறவையும்,
நிசப்தமான அந்த இரவுகளையும்
நிராசையாகிப்போன என் எதிர்காலத்தையும்...

பாசத்தில் உன் முன்
தோற்றுப்போன என்னால்,
பராமரிப்பவர்களின்
பாசங்கள் எல்லாம் வேஷங்களாய்...
பரிதவிக்கிறேன்...

அணைத்து அணைத்துப் பேசிய
அத்தனை இரவுகளையும் நினைத்தே!
அடிவயிற்றில் அக்கினியாய்
அழிந்து போகிறேன்...

திரண்ட இரவுகளில்
திருட்டுத்தனமாய் பார்த்துக் கொண்ட
திகிலான அனுபவம்!
தீர்ந்து போகாமல்
தீர்த்துக் கட்டுகிறது என்னை...

எத்தனையோ தடவைகள்
மறப்பதற்கு முயற்சித்து முடியாமல்,
இறப்பதற்கும் இயலாதவனாய்,
நடைப்பிணமாய் நடைபயில்கிறேன்
நடுவீதியில்...

—சமீம் கனா எ.மஜீட்,
குச்சவெளி.

## தோப்புக்கரணம்...

எனக்குப் பழக்கப்பட்ட
பயிற்சி இதுவொன்றுதான்.

பள்ளிக்கூடத்தில்
தினமும் பத்துத் தடவை
செவிகளைப் பிடித்து
குந்தியெழும்பியதால் தான்
எண்ணுவதற்கும்
கற்றுக்கொண்டேன்.

எண்ணும் போது
தவறிழைத்தால்
மீண்டும் முதலிலிருந்து
குந்தியெழும்ப
வேண்டும்.

அதனால்தான்
எண்களைக் கூட்டவும்
கற்றுக்கொண்டேன்.

பிரம்புகளும் என்
முதுகைப் பதம்
பார்க்கும்...

பள்ளிவாழ்வில்
அவர்கள் எனக்கு
சூட்டிய பட்டம்
எருமை மாடு...
மொக்கன்...
மூதேவி...

இன்றும் அவர்களைக்
காணுகையில்
எனக்கு ஞாபகமெழுவது
இந்தத் தோப்புக்கரணம்தான்.

—அநுராதபுரம்
ரஹ்மத்துல்லாஹ்.

## கைக்கிளை!

பல்லுக்குள் சிக்கிய
மாம்பழ நாராய்
உயிர் உள்ளுக்குள்
சிக்குண்டு
உசிர் வேர்களை
உருக்குழைக்கிறது
உன் அழகு!

வாசலில் போட்டிருக்கும்
கால் துடைப்பனாய்
உள்ளத்தை மிதித்து
உதைத்து, வதைக்கிறது
உன் ஞாபகங்கள்!

கரைகளில் தனிமையில்
ஒதுக்கப்பட்டிருக்கும்
நுரைகளாய்
ஆயிரம் உறவுகளிருந்தும்
தனிமைப்பட்டிருப்பவனாய்
உணர்கிறேன்.

ஆழ்ந்த அன்புக்குள்
உனை அடக்கிவைத்துள்ளேன்
வெளிவிடாமல்
வார்த்தைகளை மட்டும்
உடைத்து வைத்துள்ளேன்.

இமை உயர்த்தி
ஒரு ஓரமாய்
நீ பார்க்கும் போது
எனக்குள் ஓர்
தற்கொலைக்குண்டு
வெடித்துச் சிதறுகிறது.

இப்போதைக்கு
ஒரு பாதி உயிர்
விரயம்!
நீ! நல்ல சேதி தந்தால்
கொஞ்சம் வலி
குறையும்!

து.செல்வகுமார்,
தர்காநகர்.

## நீ வருவாய் என...

கறைபடிந்து போன - அந்த
காதல் அழுத்தங்களால்
என் கன்னத் தளங்களிலே
கண்ணீர்ப் பூக்களின் அணிவகுப்பு.

உன் நினைவுத் தொடுகைகளால்
என் இமைகளும் சுமைகளாகி
விழித்தபடி விடிந்து போகும்
வேதனையின் இரவுகள்.

இழந்து போன உன் காதலை
ஏற்கத் துணிவின்றி
மூச்சுத் திணறல்களோடு
உன் சுவாசத்தைத் தேடி
காத்துக் கிடக்கிறேன்
நீ வருவாய் என...

—எஸ்.சரோஜினி,
கோட்டைக்கல்லாறு.

## துப்பாக்கிப் பிரார்த்தனை

வழி நெடுகிலும்
வலிகளை நாம்
விழிகளில் சுமந்தபோதும்
எமக்கான குழிகளையும் தோண்டினீர்கள்
பழிகளை
சுமந்து, அமர்ந்து
பாவப்பட்டுப் போனோம்
பயங்கரமாய்...

பச்சையுதிரம் வடிய
பச்சை குத்தப்பட்டு
மிச்ச மீதியெல்லாம்
பிச்சை ஏந்த வைத்தீர்
எங்கள் லச்சை கரைய
வண்ணங்கொண்டயெங்கள்
வாழ்தலில்
சன்னமிட்டு
பிண்ணங் கொண்டு
பிணங்களாக்கி
பிரார்த்தனையும் செய்தீர்.

ஊரும் பாரும்
வேரும், வேரடி மண்ணும்
போருமாய் வெடித்த போது
மானுடம் கொலை செய்யப்பட்டது
மானம் மரணப் படுக்கையில்
எங்களிதயம் துடித்தது
வேதனைத் தகிப்பில்.

இரு தசாப்தமாய்
இருண்ட தேசம்
உறவுப் பாலங்களை உடைத்து
இரத்த ஆறு அணையுடைத்து
மனித ஓலங்களாய்
எத்தனை உயிர்கள்
துப்பாக்கி வேட்டைகளில்...?

நாகரிகம் செய்த
நாவுகளைக் கொய்து
'நாம்' என்று சொல்ல முடியாமல்
நறுக்கிப் போட்டீர் நரம்புகளை.
முட்களின் மேல்
எங்கள் சொற்களிருந்தும்
கோரப் பற்களால்
கொய்துண்ணப்பட்டது அமைதி.

குருதி வடித்தோம்
சிறகொடிந்த பறவைகளாய்
திக்குத் தெரியா திசைகளில்
சிந்தித்தோமென்று
சீறினீர்கள் சிறுத்தை மனங்கொண்டு
இனச்சங்காரம்
என்பதுங்கள் அகராதியில்
மாவீரமான
கதையும் எமக்குத் தெரியும்.

வெறியும்
உரிமையும் விளையாடுகையில்
பொரியாய் கரியாகிப்போன
காலமும் புரியும்.

—ஓட்டமாவடி
நளீம்.

## நினைவுகள்

எதிர்வீட்டு அத்தையின் அல்பத்தில்
உன்னைப் பார்த்ததும்
அயல் வீட்டுத் திருடனானேன்.

உன் ஒற்றைப் புகைப்படத்துடனும்
என் வீட்டுக் கண்ணாடியுடனும்
ஜோடிப் பொருத்தம் பார்ப்பேன்.

தினம் என்னை உதைக்கும்
உன் நினைவுகளால்
நான் இறந்து கொண்டே
உயிர் வாழ்கிறேன்.

—வி.முகிலன்,
நெடுந்தீவு கிழக்கு.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

கவிதை உலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு. தம்முடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் வளர்ந்து வரும் கவிஞரான றகுமான் ஏ. ஜமீல் எழுதிய சில கவிதைகளை உங்களுக்காக சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம். இவர்களின் கவிதைகளில் இருக்கும் வித்தியாசத்தை நீங்கள் வாசிக்கும் போதே உணர்ந்து கொள்வீர்கள்.

### பறவைவெளி

வாழ்தலின் அழகும் புரிதல்களும்
இன்னும் எல்லாவிதமான
நடத்தைகளும்
எங்களின் சிறகடிப்பிலிருந்துதான்
உயிர்க்கிறது
அதியுச்ச இருப்புகளோடு
மிகுந்த நம்பிக்கையூட்டும்படியாக.

நாங்கள் எந்த சூட்சுமங்களுமின்றி
காதல்வயப்பட்டு வாழ்கிறோம்
மூங்கில் காடுகளின் இசையில்
சொக்கியபடியும்
முட்புதர்களில் துயின்றபடியுமாக.

எங்களுக்குள் அடிமைப்படுத்தி
ஒதுக்கும்படியாக
எந்தப் பேதங்களும் கிடையாது
அதோ அந்தப் பேடு
சாம்பல்நிறமாகியிருந்தும்
கலப்புநிறங்களிலான குஞ்சுகளை
இடுக்கித்திரிகிறது
கழுத்திலும்
கையிலுமாக
பாகுபாடுகளின்றி.



நிச்சயம்
உமது
கோத்திரம்
மீட்சிபெறும்

இந்தப் பாசாங்குத்தனமான
அல்லது கலப்படமான
வாழ்விலிருந்துமாக
எங்கள் வாழ்வின் செப்பத்தை
அதன் மர்மங்களை துருவித்துருவி
பயின்றால்!



ஆனால்
என்
அம்மாவிற்கு
கால்மாறும்
தறுவா
யிலேனும்
தெரியாமல்
போயிற்று
என்னை ஒரு நெருப்புக்
கிடங்கிற்குத்தான்
வழியனுப்பிவைத்த பயங்கரம் பற்றி.

### நினைத்தழுதல்

என் அம்மா பாட்டியிடம்
கூடிக்கூடி குசுகுசுத்து
குமுறியழும்படியான துயரினை
நான் பல தருணங்களில்
ஊர்ந்து கவனித்திருக்கிறேன்.


யார் காலையேனும் பிடித்தாவது
என்னைக் கரைசேர்க்கும்
வரையிலுமாக
மடியில் பாரிய நெருப்பை
கட்டிக் கொண்டு திரிவதாக.

பாவம் என் அம்மா
மிகவும் ஆழ்ந்து துயில்கிறாள்
தன் மடிநெருப்பு அணைந்த
ஆறுதலில்
படுக்கையில் கிடக்கும்போதே
பிணமானாலும்
ஏற்புடையதுதான் என்றபடியாக.

### ஆக்கிரமித்தல்

தோட்டக்காரன்
தயவினில்தான்
நானும் என் மகளுமாக
இந்த வாடியில் காலம்
தள்ளுகிறோம்
தோட்டம் துரவுகளைக்
கவனித்தபடியாக.

என் மகளினை
திருமணம்
கேட்பவர்களெல்லாமே
வீடுபற்றி பேசியபடியே
இடமாறிப்போகின்றனர்
எந்தப் பாரபட்சங்களும்



காட்டாதபடியாக.

என் மகள்
சொருகிவைத்த
பெட்டியில்
அடக்கலன்
குருவியொன்று
கூடும் நிர்மாணித்து
குடும்பம் நடத்துகிறது
குஞ்சுகளோடு
பிறிதொன்றின்
சிறுதடங்கலும்
இல்லாதபடியாக.


பாவம் என் மகள்
விட்டம் பார்த்து
பெருமூச்சு விட்டபடியாக
மூலையில் முடங்கிக்
கிடக்கிறாள்
படையினர் ஆக்கிரமித்து
முகாமிட்டிருக்கும்
தன் வீட்டை
நினைத்தபடியாக.

— றகுமான் ஏ.ஜமீல்


## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : மு. இ. பர்சாத்
வயது : 21
முகவரி : நெய்தல் நகர்
மூதூர் - 01
பொழுதுபோக்கு: கிரிகெட்



பெயர் : பி. வொலொ சொயின்கா
வயது : -
முகவரி : இல.46/47, சென் அன்ரனிஸ் வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு: வழமையானவை



பெயர் : T. பிரபாகரன்
வயது : 22
முகவரி : கெப்பரோல், தாபல் பெட்டி இல. 5536, டோகா, கட்டார்
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல் தொலைக்காட்சி பார்த்தல்




பெயர் : கு. வினோதாஸ்
வயது : 20
முகவரி : தபால் பெட்டி இல. 91230 டோஹா, கட்டார்
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி பார்த்தல், படம் வரைதல்.

# வெற்றி! சிந்தனைகள்!!

### காலத்தைக் கவனமாகக் கையாளுங்கள்!

காலத்தின் பெருமையையும், எதையும் உரிய காலத்தில் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் நீங்கள் உணர வேண்டும்.



"எனக்கு நேரமே சரியில்லை!" என்று புலம்புகின்ற மனிதர்கள் சிலர். "என்றைக்கு நல்ல காலம் பிறக்குமோ!" என்று பெருமூச்சுவிடுபவர் சிலர்.

"நேரமும் காலமும் வந்து ஒண்ணா சேர்ந்திடுச்சின்னா நடக்கிறதெல்லாம் நல்லபடியாக நடந்திடும்" என்று நல்ல நேரத்துக்காக சோதிடர்களிடம் நாள் நட்சத்திரம் பார்க்கச் செல்லுபவர்கள் சிலர். இப்படி நாம் அடிக்கடி பயன்படுத்தும் சொல்தான் நேரம் - காலம் - டைம்.

இவ்வாறு காலத்தின் பெருமை பற்றிப் பல கருத்துக்கள் கூறப்பட்டாலும் நம்மில் பலர் காலத்துக்கு உரிய மதிப்பளிக்காமைக்குக் காரணம், காலத்தின் மதிப்பு அவர்களுக்குத் தெரியாமைதான்.

"என்ன செய்வதென்றே தெரியவில்லை"


சே! ரொம்ப சலிப்பாக இருக்கிறது

இப்ப போனா போகட்டும்; பிறகு பார்த்துக்கலாம்!

என்றைக்காவது ஒருநாள் வராமலா போய்விடும்!

இப்படியெல்லாம் பேசி, காலத்தை வீணடிப்பவர்களும் உண்டு. நாமும் அவர்களைப் போல் இல்லாமல் காலம் பொன் போன்றது என்று நினைத்து காலத்தைக் கவனமாகக் கையாளுவோம். அவ்வாறு காலத்தைக் கவனமாகக் கையாள வேண்டுமானால் அதற்கான 10 கட்டளைகள்.

- வெட்டிப் பேச்சு பேசுவதை விட்டொழியுங்கள்.
- சோம்பேறிகள், சுகவாசிகள், வேறு வேலையில்லாதவர்களோடு பழகாதீர்கள்.
- வாழ்க்கைக்குப் பயன்தராத புத்தகங்களைப் படிக்காதீர்கள்.
- வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்களைப் பொறுத்தவரையில் மிகவும் சிறந்த நிகழ்ச்சிகளை மட்டும் கேளுங்கள் - பாருங்கள்.
- இன்றைய வேலையை இன்றே செய்யுங்கள் - நாளைய வேலையைக் கூட முடிந்தால் இன்றே செய்யுங்கள்; ஆனால் இன்று செய்ய வேண்டிய வேலையை, நாளைக்கு என்று ஒருபோதும் ஒத்திப்போடாதீர்கள்.
- செய்யக்கூடிய வேலையை முக்கியமானவை, அவசரமானவை, வழக்கமானவை, ஒன்றுக்கும் உதவாதவை எனத் தரம் பிரித்து, கிடைக்கும் நேரத்தில் வரிசைப்படி செய்து முடியுங்கள்.
- எந்த வேலையையும் இதற்குள் முடிப்பேன் என்று ஒரு காலக்கெடு வைத்து அதற்குள் முடிக்க முயற்சியுங்கள்.
- நாளைக்கு என்ன வேலை செய்ய வேண்டும்? யாரைச் சந்திக்க வேண்டும்? என்ன பேச வேண்டும்? என்பதை இன்றைக்கே குறித்து வையுங்கள்.
- உடற்பயிற்சி செய்து, உடலை ஆரோக்கியமாக, சுறுசுறுப்பாக வைத்திருங்கள்.
- நல்ல ஓய்வு எடுங்கள். போதிய உறக்கம் தேவை. தியானம் செய்யுங்கள்.




# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

37

பெயர் : ........................

முகவரி : ........................

BK

தே.அ. அட்டை இல : ........................

கையொப்பம் : ........................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி
முரசு பரிசுப் போட்டி -37
தினமுரசு வார மலர்
த.பெ.இல - 1772
கொழும்பு.

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:

05.09.2006

பரிசுப் போட்டி இல - 35
பரிசு பெறும்
அதிர்ஷ்டசாலி

எஸ். பவதாரனி,
2ஆம் வட்டாரம் திருவையாறு, கிளிநொச்சி.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


# லேடிஸ் ஸ்பெஷல்

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது -ஷோபா-*

### பாதாம் ரோல் கேக்

**தேவையான பொருட்கள் :-**

பாதாம் - 50 கிராம்

முந்திரி - 50 கிராம்

தோல் உரித்த வோர்க்கடலை - 50 கிராம்

(வறுக்காதது)

சீனி - 300 கிராம்

நெய் - 100 கிராம்


பால் - 50 கிராம்.

**செய்முறை :-**

பாதாம், முந்திரி, வேர்க்கடலை மூன்றையும் தனித் தனியாக ஊற விடுங்கள். பாதாமின் தோல் நீக்கி மூன்றையும் விழுதாக அரையுங்கள். பால் சேர்த்து, சீனியுடன் அரை த்த விழுதை சேர்த்து நெய்யு டன் அல்வாவாக சுருள கிண்டி எடுத்து துளி பாதாம் எஸன்ஸ் சேர்த்து ஆறியபின் ஒரு ஸ்பூன் எடுத்து பட்டர் பேப்பரில் ரோல் செய்யவும்.

## அழகான புருவங்களை பெற வேண்டுமா?

புருவங்கள் முகத்தின் சிறந்த அம்சங்களில் ஒன்று. புருவங்கள் அழகாக இருந்தால் கண்களில் அழகு கூடும். முகமே புதுப் பொலிவு பெறும். ஆனால் புருவங்களை சரியாக வடிவமைப்பதே பலருக்குப்



பெரும் பிரச்சினையாக உள்ளது.

### புருவங்களை வடிவமைக்க சில குறிப்புகள் :

**தேவையான பொருட்கள் :-**

டுவீஜர் (புருவத்தில் உள்ள தேவை இல்லாத முடிகளை அகற்ற)

புருவத்திற்கான பிரஷ் (பல் தேய்க்கும் பிரஷ் கூட உபயோகிக்கலாம்)


ஆஸ்ட்ரின்ஜென்ட் (சருமத்தை மிருதுவாக்கி, வலியை குறைக்க)

கண்ணாடி (அவசியம் தேவை)

சிறிய கத்தரிக்கோல் (புருவத்தின் முடியை சரி செய்ய)

ஐப்ரோ பென்சில்.

- முதலில் புருவத்தை மேல் நோக்கி பிரஷ் செய்து விடவும். புருவத்தின் வளைவை விட நீளமாக உள்ள முடிகளை கத்தரியால் வெட்டி விடவும்.
- புருவங்கள் கண்களின் ஒரு முனையில் ஆரம்பித்து மறு முனையில் முடிய வேண்டும் என்பதை மறக்காதீர்கள்.
- நீங்கள் எந்த வடிவத்தில் புருவத்தை வடிவமைக்க விரும்புகிறீர்கள் என்பதை முடிவு செய்து கொள்ளுங்கள். இதோ தற்போது ஃபேஷனில் உள்ள சில வடிவங்கள்.
- ஆஸ்ட்ரின்ஜென்ட்டை புருவத்தின் மேல் தடவவும்.
- புருவத்தின் மேல் பக்கத்திலிருந்து முடியை எடுப்பதை தவிர்க்க வேண்டும். புருவத்தின் கீழ் உள்ள முடிகளை ஒவ்வொன்றாக டுவீஜரால் எடுக்கவும்.
- ஒரு பக்கம் புருவத்தைச் சரி செய்த பிறகு, மறுபக்கமும் அதே வடிவத்தில் அமைய வேண்டும் என்பதை கவனத்தில் வைக்கவும்.
- அடிக்கடி கண்ணாடியில் சரி பார்க்கவும்.




- ஐபுரோ பென்சிலால் புருவத்தில் உள்ள காலியான இடங்களை நிரப்பவும்.

கவனம் : மிக மெல்லியதாக புருவத்தை அமைப்பதைத் தவிர்க்கவும்.




நல்லவேளை, தீவுகளுக்கு அனுப்பப்படவேண்டியவர் பட்டியலில் எங்கள் பெயர்கள் இல்லை.

தேகாவும், நானும், மற்றவர்களும் ஒரு மஞ்சள் கொட்டகைக்கு அனுப்பப்பட்டோம். சுமார் இருபது கெஜ நீளமுள்ள நீள் சதுரமான ஹாலுக்குள் சென்றோம். அதன் நடுவே இரண்டு கெஜ அகலத்துக்கு ஒரு பாதை சென்றது. இருபுறமும் இரும்புத் தண்டு போட்ட



அறை. இரும்புத் தண்டுக்கும் சுவருக்குமாகக் கான்வஸ் தூளிகள். ஒவ்வொருவனும் தனக்குப் பிடித்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். தேகா, பீரட், ஸன்ட்டோரி, கிராண்டே, நான் ஆகியோர் அருகருகாக இருந்து கொண்டோம். சின்னச் சின்னக் குழுக்கள் உடனேயே முளைத்துவிட்டன. கடைசி அறைவரை நான் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். வலப்பக்கம் குளியலறைகள், இடப்பக்கம் லட்ரீன்கள் குழாய்த் தண்ணீர் கிடையாது.

எங்களுக்குப் பிறகு கப்பலிலிருந்து இறங்கியவர்களும் வரத் தொடங்கினார்கள். ஜன்னல் கம்பிகளில் தொற்றிக் கொண்டு வேடிக்கை பார்த்தோம். தேகாவுக்கும் எனக்கும் மற்றவர்களுக்கும் ஒரே மகிழ்ச்சி - தனிச் சிறையில் எங்களை அடைக்கப் போவதில்லை என்பதால். இல்லாவிட்டால் எங்களை இந்தச் சாதாரணக் கொட்டகையில் வைத்திருக்க மாட்டார்களே! ஜூலட் சொன்னபடி முதலிலேயே சிறைக்குக் கொண்டு போயிருப்பார்களே!

ஒன்பது மணிக்குள் எல்லோரும் தூங்கிவிட்டார்கள். வந்து சேர்ந்த பரபரப்பு அடங்கி, புழுக்கம் ஆக்கிரமித்துக் கொண்டது. கடுகத்தனையும் காற்று இல்லை. ஒவ்வொருவரும் தங்கள் டிராயர்களைத் தவிர, மற்ற அனைத்தையும் களைந்துவிட்டார்கள். தேகாவுக்கும், பீரட்டுக்கும் நடுவே என் தூளி இருந்தது. சிறிது நேரம் நாங்கள், கிசுகிசுவென்று பேசிக் கொண்டிருந்தோம். பிறகு தூங்கிவிட்டோம்.

காலையில் 'சங்கு' ஊதியபோது, இன்னும் இருட்டாகவே இருந்தது. அனைவரும் எழுந்து முகம் கழுவி உடைமாற்றிக் கொண்டோம். காப்பியும், ஒரு ரொட்டித் துண்டும் எங்களுக்குக் கொடுத்தார்கள். ரொட்டி, குவளை, மற்றப் பொருட்களை வைத்துக் கொள்ளச் சுவரில் ஒரு பலகை மாட்டப்பட்டிருந்தது.

ஒன்பது மணிக்கு இரண்டு வார்டர்கள் உள்ளே வந்தார்கள். அவர்களுடன் ஓர் இள வயது கைதியும் வந்தான். கோடு போடாத வெள்ளைச் சட்டை அணிந்திருந்தான் அவன். வார்டர்கள் இருவரும் கார்ஸிகாக்காரர்கள். தங்கள் ஊரிலிருந்து வந்திருந்த கைதிகளிடம் அந்த மொழியில் உரையாடினார்கள்.

இதற்கிடையே, மருத்துவப் பிரிவுச் சேவகன் அறைக்குள் வந்தான். என்னை நெருங்கியவன்,. "என்ன பட்டு, என்னைத் தெரியவில்லையா?" என்றான்.

"இல்லையே?"

"என் பெயர் ஸீரா. பாரிஸில் டாண்ட்டே ஓட்டலில் உன்னைப் பார்த்திருக்கிறேன்."

"ஓ! ஆமாம். இப்போது உன்னைத் தெரிகிறது. 29- ஆம் வருஷமல்லவா உன்னைச் சிறைக்கு அனுப்பினார்கள்? இது 33- ஆம் வருடம். இன்னுமா இங்கே இருக்கிறாய்?" என்றேன்.

"ஆமாம். இங்கிருந்து அவ்வளவு அவசரமாகத் தப்பிப் போக முடியாதே.

நீ உடம்பு சரியில்லை என்று சொல்லப் போகிறாய், இல்லையா? இந்த ஆள் யார்?"

"இவன் தேகா, என் சிநேகிதன்."

"உன்னைப் பற்றியும் டாக்டரிடம்

எழுதியது: ஹென்ரி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

சொல்லி வைக்கிறேன், தேகா. பட்டு, உனக்கு சீதபேதி. தேகா உனக்குக் கடுமையான ஆஸ்துமா. மருத்துவமனையில் பதினொரு மணிக்கு உன்னைப் பார்க்கிறேன்," என்று சொல்லிவிட்டு, "யார் யாருக்கு உடம்பு சரியில்லை?" என்று கேட்டுக் கொண்டே சென்றான் அவன். கையைத் தூக்குகிறவர்களிடம் சென்று அவர்கள் பெயர்களை எழுதிக் கொண்டான்.

திரும்பி எங்களிடம் வந்த போது ஒரு வார்டர் அவனுடன் இருந்தான். "பட்டாம்பூச்சி, இவர் தான் என் எஜமானர், மெடிகல் வார்டர். சார், இவர்கள்தான் நான் சொன்னேனே அந்தச் சிநேகிதர்கள்."

"ஓகே ஸீரா, மருத்துவமனையில் இவர்கள் விஷயத்தைக் கவனிக்கலாம். கவலைப்படாதே."

பதினொரு மணிக்கு எங்களை அழைத்துப் போக ஆள் வந்தது.

மொத்தம் ஒன்பது பேர் உடம்பு சரியில்லை என்று சொல்லியிருந்தோம். முகாமில் குடிசை வீடுகளின் வழியே நாங்கள் நடந்தோம். மற்றவற்றைக் காட்டிலும் சற்றுப் புதிதாகத் தோன்றிய கட்டடத்தை அடைந்தோம்.

செஞ்சிலுவைக் குறியுடன் காணப்பட்ட வெள்ளை நிறக் கட்டடம் அது.

உள்ளே சென்றோம். டாக்டரின் அறை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அங்கிருந்தவர்களிடம் ஸ்பானிஷ் மொழியில் பேசினார் டாக்டர். அவர்களில் ஒரு ஸ்பெயின் நாட்டுப் பேர்வழியை எனக்குத் தெரியும். அவன் பெயர் பெர்னாண்டஸ். பாரிஸில் ஓர் ஓட்டலில் மூன்று அர்ஜண்டைன்காரர்களைக் கொலை செய்தவன்.

அவர்கள் தங்களுக்குள் பேசி முடித்ததும், ஸீரா, பெர்னாண்டஸைப் பக்கத்தில் இருந்த ஒரு சிறிய அறைக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டு விட்டுத் திரும்பி வந்தான். "பட்டு, எனக்கு உன்னைக் கட்டிக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது. உனக்கும் உன் நண்பனுக்கும் ஒத்தாசை செய்யச் சந்தர்ப்பம் கிடைத்ததில் எனக்கு அத்தனை மகிழ்ச்சி! சரி, ரொக்கம் வைத்திருக்கிறீர்களா?"

"வைத்திருக்கிறோம்."

"சரி, தலைக்கு ஐந்நூறு ஃபிராங்க் கொடுங்கள். நாளைக் காலை உங்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடுவார்கள். பட்டாம்பூச்சி, உனக்கு சீதபேதி. தேகா, ராத்திரி பூரா நீ கதவைப் போட்டு உடை. பக்கத்திலிருப்பவர்கள் காவலாட்களைக் கூப்பிட்டு 'இந்த ஆள் ஆஸ்துமா அவஸ்தையில் சாகிறானே?' என்று சொல்லும்படி செய்ய வேண்டும். மற்றதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். பட்டாம்பூச்சி, உன்னிடம் நான் ஒரு விஷயம் கேட்டுக் கொள்கிறேன். நீ தப்புவதற்கு ஏற்பாடு செய்ததும் எனக்கு முன் கூட்டியே சொல்லிவிட வேண்டும். நீ சொல்கிற டயத்துக்கு நான் வந்து சேர்ந்துவிடுவேன். தலைக்கு வாரம் நூறு ஃபிராங்க் வீதம் நீங்கள் கொடுத்து வந்தால், ஒரு மாதகாலம் உங்களை ஆஸ்பத்திரியில் வைத்துக் கொள்வார்கள். கிடுகிடுவென்று காரியத்தை முடிக்க வேண்டும்."

பெர்னாண்டஸ் அந்தச் சிறிய அறையிலிருந்து திரும்பி வந்தான். எங்கள் கண்ணெதிரிலேயே ஸீராவிடம் ஐந்நூறு ஃபிராங்குகளைக் கொடுத்தான்.

அடுத்து நான் அந்த அறைக்குச் சென்று திரும்பி வந்து எனக்கும், தேகாவுக்குமாகப் பணத்தைக் கொடுத்தேன். ஆயிரம் பிராங்கு அல்ல, ஆயிரத்தைந்நூறாகவே கொடுத்தேன். அவன் ஆயிரத்துக்கு மேல் வாங்க மறுத்துவிட்டான். "நீ கொடுக்கிற பணம் காவலாட்களுக்காகத்தான். எனக்கு ஒரு பைசா கூட வேண்டியதில்லை. நாமெல்லாம் சிநேகிதர்கள் இல்லையா?" என்றான் அவன். நானும் அவனை வற்புறுத்த விரும்பவில்லை.

மறுநாள் தேகா, பெர்னாண்டஸ், நான் ஆகிய மூன்று பேரும் ஆஸ்பத்திரியில் ஒரு பெரிய அறையில் இருந்தோம். அந்த வார்டுக்கு அட்டெண்டெண்டாக இருந்தவன் சாடல் என்பவன். முப்பந்தைந்து வயது. ஸீரா மூலம் எங்களைப் பற்றி முழுக்கத் தெரிந்து வைத்திருந்தான். டாக்டர் வரும்போது, என் மலம் என்று அவரிடம் காட்டுவானாம், அதைப் பார்த்தாலே போதுமாம் - சீதபேதியில் என் உயிர் போய்க் கொண்டேயிருக்கிறது என்று டாக்டர் நினைக்க! அதேபோல், பரிசோதனைக்காக டாக்டர் வருவதற்குப் பத்து நிமிடம் இருக்கும்போது தேகாவுக்குக் கொஞ்சம் கந்தகம் கொடுத்தான். அதைக் கொளுத்திவிட்டு, முகத்தை ஒரு துண்டினால் மூடிக்கொண்டு கந்தகப் புகையைச் சுவாசிக்க வேண்டும். பெர்னாண்டஸுக்கு முகம் பூரா வீங்கிக் கிடந்தது. கன்னத்தின் உட்பக்கத்தைக் கத்தியால் கிழித்துக் கொண்டுவிட்டு, ஒரு மணி நேரம் பலமாக ஊதிக்கொண்டே இருந்தானாம் அவன். கண்ணையே மறைக்கிற அளவுக்கு முகத்தில் வீக்கம் கண்டிருந்தது.


ஆஸ்பத்திரியின் முதல் மாடியில் அந்த அறை இருந்தது. சுமார் எழுபது நோயாளிகள் இருந்தனர். பெரும்பாலும் சீதபேதி கேஸ்கள்.

(பட்டாம்பூச்சி பறக்கும்)

# கூலிக்காக எழுதமாட்டேன்!


**- ஜெயகாந்தன்**

நம் சமகாலத்தில் கண்முன்னே பிரமாண்டமாக நிமிர்ந்து நிற்கும் இலக்கிய எழுத்தாளர்தான் ஜெயகாந்தன். இந்திய எழுத்துலகில் இலக்கியத்திற்காக ஞானபீட விருதினைப் பெற்றுவிட வேண்டுமென்பதே பல எழுத்தாளர்களின் பேரவா. இது சினிமா உலகில் சிறந்த நடிகர், நடிகை எனப் பல தேசிய விருதுகளை எப்படிப்பட்டேனும் பெற்றுவிட வேண்டும் எனக் கனவு காணும் கலைஞர்களின் கனவிலும் மிகப் பிரமாண்டமானது. தமிழ் எழுத்தாளர்களில் 1977ஆம்





ஆண்டு பிரபல எழுத்தாளர் அகிலனுக்கு இந்திய அரசினால் ஞானபீட விருது வழங்கப்பட்டது. ஆனால் மீண்டுமொரு தமிழர் அந்த விருதைப் பெற ஏறக்குறைய 2 1/2 தசாப்த காலம் காத்திருக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. அவர்தான் ஜெயகாந்தன். எவருக்கும் தன் கொள்கையை விட்டுக்கொடுக்காத குணம், தனக்குச் சரியெனப் பட்டதை பட்டவர்த்தனமாக எழுதும் குணம், இதன் காரணமாக எழுத்துலக மேதாவிகள் எனச் சொல்லப்பட்டோர் உட்பட பலரின் எரிச்சலுக்கும், விமர்சனத்திற்கும் ஆளாகினாலும் தான் கொண்ட கொள்கைப்பிடிப்பு காரணமாக அவர்கள் எவரினாலும் அடைய முடியாத உச்ச விருதினை இன்று அடைந்து நிற்கின்றார்.

ஆனால் அந்த வேளையில் கூட, தனக்கு விருது வழங்கப்பட்டதைப்பற்றிக் குறிப்பிடாமல் "தமிழுக்கு ஞானபீட விருது வழங்கப்பட்டது மகிழ்ச்சி அளிக்கின்றது" என திடகாத்திரமாகச் சொன்னார்.



பல வேளைகளில் ஜெயகாந்தன் எழுத்தில் காட்டிய தீர்க்கத்தினையும், வேகத்தினையும் தனது பேச்சினாலும் காட்டிக்கொள்ளத் தவறுவதில்லை. "நான் ஒரு போதும் கூலிக்காக எழுதமாட்டேன். ஓர் நல்ல எழுத்தாளனுக்குப் பணம் எப்போதும் இரண்டாவது, மூன்றாவது இடத்தில்தான் இருக்கவேண்டும். பணமே எல்லாத் தேவைகளையும் தீர்த்து வைத்துவிடும் என்று கருதுபவர்கள் சிந்திக்கும் திறன் இல்லாதவர்கள். அவர்கள் ஒருபோதும் படைப்பாளியாக இருக்க முடியாது. ஏனென்றால் எழுத்தாளன் ஒருவன் கறுப்புப் பண உலகில் புழக்கமுடையவனாக இருந்தால் அவனுடைய



எழுத்துக்கள் அவனது இதயத்தில் இருந்து சுரக்கும் போதே கறுப்பாகச் சுரக்க ஆரம்பித்து விடும். இவ்வாறு பணத்திற்காக எழுதுபவர்களைச் சாடிய ஜெயகாந்தன், எந்தத் துறையினரின் நடவடிக்கைகளையும் கண்டிக்கத் தவறவில்லை. முக்கியமாக அண்மையில் அரசியலையும், எழுத்துலகினையும் அவர் இணைத்துப் பேசிய விடயம் - "தமிழ் நாட்டில் அரசியல் உலகம் நாறிப்போய்க் கிடக்கின்றது. ஆனால் அங்கேயாவது அது திறந்த சாக்கடையாக இருக்கின்றது. ஆனால் கலை உலகில் ஒவ்வொருவர் மடியிலும், மனதிலும், தலையிலும் அந்த சாக்கடை மிக மறைவாகக் கிருமிகளை உற்பத்தி செய்துகொண்டே இருக்கின்றது. எனவே சமூக மாற்றித்திற்கு அர்ப்பணித்துக் கொள்ளாத அரசியலும், படைப்பும் சாக்கடையாகத்தான் போகும்" என்கின்றார்.

உண்மையில் ஜெயகாந்தன் எழுத்தாளன் ஆவதற்குரிய எந்தப் பின்னணியுமே அவருக்கு இருந்ததில்லை. பிரபல கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவானந்தம் அவர்கள் தமிழ் நாட்டில் இருந்த போது அவருடைய அச்சுப் பதிப்பகத்தில் ஓர் சிறுவனாக - ஓர் எடுபிடியாளனாக இருந்தவர்தான் அவர். பின் எப்படி இப்பேர்ப்பட்ட வளர்ச்சி ஏற்பட்டது? அவரே சொல்கின்றார்: "எழுத்தாளன் என்பவன் யார்? என்கின்ற கேள்வியை எனக்குள் தேடிப்பார்த்தால் கிடைக்கும் பதில் இதுதான் - ஒரு பத்திரிகை நிறுவனம் சம்பந்தப்பட்டவனாக, ஒரு நிறுவனம் சம்பந்தப்பட்டவனாக, ஒரு இயக்கம் சம்பந்தப்பட்டவனாக, ஒரு மொழி அல்லது நாடு சம்பந்தப்பட்டவனாக இருந்த போதிலும் இவற்றை எல்லாம் கடந்து - இவற்றுள் எல்லாம் ஊடாடி - இவற்றின் மூலம் தான் வாழும் காலத்திற்கு, தன் கடமையை தான்

**ஜெ. கே.**

என்ற சுயமுத்திரையுடன் ஸ்தாபித்து நிற்பவன். இந்தச் சூத்திரத்தை மனதிற்கொண்டு, 'நான் ஒரு எழுத்தாளனாகியதாகச் சொல்லமுடியாது.' நான் ஒரு எழுத்தாளனாக ஆன பிறகு என்னை இவ்வாறுதான் அடையாளம் கண்டு கொண்டேன்" என்கிறார்.


இவ்விடத்தில் ஓர் சுவாரசியமான சம்பவத்தினையும் குறிப்பிடவேண்டும். அப்பொழுது தமிழ் நாட்டின் முதலமைச்சராக விளங்கிய ஒருவர், ஜெயகாந்தன் எழுத்துலகின் உச்சத்தில் இருந்த போது தொலைபேசி அழைப்பு ஒன்றை எடுத்தார். தன்னை அறிமுகப்படுத்திய அவர், "ஜெயகாந்தன் உங்களைச் சந்திக்க வேண்டும்" என்றார். சிறிதும் தயக்கமின்றி ஜெயகாந்தன் "இதுதான் என்னுடைய முகவரி" என்று கூறியதோடு, எந்த நேரம் வந்தாலும் தன்னைச் சந்திக்கலாம்" என்று கூறி அதிர வைத்தார் - அதுதான் ஜெயகாந்தன்.

# "வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"



"**தி** இமிக்ரண்ட்" அமெரிக்காவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஒரு கப்பலில் தொடங்குகிறது. அதில் புது வாழ்வைத் தேடி அமெரிக்காவிற்குச் செல்பவர்கள் எல்லோருமே ஏழைகள். அதில் ஒருவர் சாப்ளின். 'பிறக்க ஒரு நாடு, பிழைக்க ஒரு நாடு' என்ற வழியில் வந்தவர் அவர்.

அது ஒரு சாதாரண கப்பல். சொகுசுகள் நிறைந்தவை அல்ல! கடலலைகள் தாக்கத்தினால் கப்பல் அப்படியும், இப்படியும் ஆடிக்கொண்டே இருக்கிறது. எல்லோருக்கும் சூப் பரிமாறப்படுகிறது. கப்பலின் ஆட்டத்தினால் அந்த சூப் பாத்திரங்கள் சாப்படுபவர்களை விட்டு அந்தப் பக்கம் சரிந்து ஓடி விடுகிறது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலைமை! அந்த வகையில் சாப்ளினும் அவதிப்படுகிறார். எதிரில் உட்கார்ந்து கொண்டிருப்பவர் சூப் பாத்திரம் தன்னை நோக்கிச் சரிந்து வரும்பொழுது, அதிலிருந்து எடுத்துக் குடிக்கிறார். இந்த ஒரு சிறிய காட்சியில்



சாப்ளின் சிரிப்பு அலைகளை எழுப்புகிறார். இதில் ஒரு வாழ்க்கைத் தத்துவமும் அடங்கி இருக்கிறது. ஒருவனுக்காகக் கொடுக்கப்பட்ட ஒரு பொருள் மற்றவனுக்குப் போய்ச் சேருகிறது. இந்த அருமையான தத்துவத்தை சாப்ளின் சில நிமிடங்களே ஓடும் அந்தக் காட்சி மூலம் புரிய வைக்கிறார்.

அமெரிக்காவிற்கு அந்நாளில் கப்பலில் வருபவர்கள் நியூயார்க் நகரத்தில் சற்றுத் தூரத்திலிருக்கும் ஒரு தீவில் இறங்க வேண்டும். அங்குதான் சட்டப்படி பல பரீட்சைகள் நடக்கும். கப்பல் கரை சேருவதற்கு முன்பே சில மைல்கள் தொலைவில் உலகப் புகழ்பெற்ற 'தி ஸ்டேச்யூ ஆ.'.ப் லிபர்டி' (The Statue of Liberty) என்ற சிலை கண்ணில் படும். உயரமான இந்தச் சிற்பம் இன்றைய அளவிலும் அதைப் பார்ப்பவர்களைப் பரவசப்படுத்திப் பிரமிக்கச் செய்யும். அது உயரமான ஒரு பெண்ணின் சிலை. அவள் கையில் ஒரு பெரிய தீவட்டி. அதில் நெருப்பைப் போன்ற விளக்கு எரிந்துகொண்டேயிருக்கும். சொந்த நாடுகளில் ஏழ்மை, மத சச்சரவுகள் போன்ற காரணங்களினால் புது வாழ்வைத் தேடி அமெரிக்காவிற்கு வரும் ஒடுங்கிப் போன மனிதர்களுக்கு அபயம் கொடுக்கும் சிலை அது! இன்றைய அளவிலும் அதைப் பார்ப்பவர்கள் கதறி அழுவதும் உண்டு. இந்தியாவிற்கு 'தாஜ்மஹாலை'ப் போல அமெரிக்காவிற்கு இது ஒரு எடுத்துக்காட்டான அடையாளச் சிலை.

படத்தில் 'தி ஸ்டேச்யூ ஆ.'.ப் லிபர்டி' சிலையை முதல் முறையாகப் பார்த்தவுடன் எல்லோருடைய கண்களிலும் ஒளி வீசத் தொடங்குகிறது. புதியதோர் உலகத்தைக் காணப் போகிறோம் என்ற எண்ணம், எல்லோர் முகத்தையும் பிரகாசிக்கச் செய்கிறது. அந்த நிலைமையில் கப்பல் கரையை அடைந்தவுடன் அமெரிக்காவிற்குள் நுழைவுச் சீட்டுக் கொடுக்கும் அதிகாரிகள் எல்லாப் பயணிகளையும் ஆட்டு மந்தைகளைப் போல ஒன்றாகச் சேர்த்துக் கயிறு கட்டி விடுகிறார்கள். ஒவ்வொருவராக அதிகாரிகளைச் சந்திக்க அனுப்புகிறார்கள். இந்த வித்தியாசமான செயலை எதிர்பாராத சாப்ளினும், மற்றவர்களும் திகைக்கிறார்கள்.

அந்தப் பயணிகளில் வயதான ஒரு தாய், உடல் நலம் சரியில்லாதவள். அவளுக்கு ஒரு மகள். (எட்னா பர்வையன்ஸ் நடித்தது.) இவர்களிடமிருந்து பணத்தை ஒருவன் திருடி விடுகிறான். சாப்ளின் அவனிடமிருந்து அதைத் திருடுகிறார். திருடிய அந்தப் பணத்தை அந்தப் பெண்ணின் பையில் போட்டு விடுகிறார். தனக்கென்று கொஞ்சமாவது அதில் வைத்துக் கொள்ளவில்லையே என்ற எண்ணத்தில் அவள் பையில் கையை விடுகிறார். அவளிடமிருந்து திருடியதாகப் பிடிபடுகிறார்! நல்லது செய்யும் பொழுது சில நேரங்களில் விபரீதமாக முடியும் என்பதற்கு அந்தக் காட்சி ஒரு எடுத்துக்காட்டு. அந்தப் பெண் உண்மையை விளக்கி சாப்ளினைக் காப்பாற்றுகிறாள்.

பயணிகளை ஆட்டு மந்தை போல தள்ளும் பொழுது சாப்ளின், லிபர்டி சிலையை அர்த்தத்துடன் பார்க்கிறார். அந்தப் பார்வையாலும் பல பாடங்களைக் கற்பிக்கிறார். கையில் ஒளியுடன் வரவேற்கும் புதியவர்களுக்கு இங்கு காட்டப்படும் வரவேற்பு வேறு தினுசாக இருக்கிறதே என்று குத்திக் காண்பிக்கிறார். ஊமைப் படமானதால் வசனங்கள் இல்லை. ஆனால் அவருடைய முகம் பல அர்த்தங்களை எடுத்துக் காட்டுகிறது. அதுதான் சார்லி சாப்ளின்!



நியூயார்க் நகரத்தில் கையில் காசில்லாமல் வழக்கம் போல உலாவிக் கொண்டிருக்கிறார். அப்பொழுது வீதியில் ஒரு காசு அவர் கண்ணில் படுகிறது. பணக்காரனாகி விட்டோம் என்ற சந்தோஷத்தில் ஒரு உணவு விடுதிக்குள் செல்கிறார். அங்கு, கப்பலில் கண்ட பெண் தனியாக உட்கார்ந்திருக்கிறாள். அவள் கையில் கறுப்பு பார்டர் போட்ட கைக்குட்டை.

அதிலிருந்து அவளுடைய தாய் இறந்து விட்டாள் என்பது தெரிகிறது. சாப்ளின் அவள் அருகில் உட்கார்ந்து கொண்டு தேற்றுகிறார். இருவருக்கும் சாப்பாடு கொண்டுவரச் சொல்கிறார். பரிமாறும் சர்வர் பயங்கரமாகக் காண்பவர் (எரிக் கேம்பெல்). அவனுக்கு அங்கு சாப்பிட வரும் யாரைப் பார்த்தாலும் வெறுப்பு. உலகத்தில் பலர், செய்யும் தொழிலில் ஆர்வமோ ஆற்றலோ இல்லாமல் வெறும் வயிற்றை நிரப்புவதற்காகப் பணி செய்பவர்கள். இந்த உண்மையை அழகாக எடுத்துக் காட்டுகிறார் சாப்ளின். அருகில் சாப்பிட்டவன் கையில் பணம் சற்றுக் குறைவாக இருக்கிறது. அதைக் கண்ட அந்த சர்வர் அவனை அடித்து நொறுக்குகிறான். உலகத்தின் மீது, தான் செய்யும் தொழிலின் மீது உள்ள எல்லா வெறுப்புக்களையும் அவன் மேல் காட்டுகிறான். அதைப் பார்த்ததும் தனக்குத் தெருவில் கிடைத்த காசை பத்திரப் படுத்தும் எண்ணத்தோடு பாக்கெட்டில் கையை விடும் பொழுது அது அங்கே இல்லை. ஒரு ஓட்டையின் வழியாக அது நழுவி விட்டது.



திடுக்கிடுகிறார் சாப்ளின்! அது சாப்ளினை விட ஏழையான ஒருவனுக்குக் கிடைக்கிறது. அதை அவன் சாப்பிட்ட உணவிற்குப் பணமாகக் கொடுக்கிறான். அது அந்த சர்வரிடம் கொடுக்கும் பொழுது நழுவித் தரையில் விழுகிறது!

*(தொடரும்)*

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

## 25

## புவா பேகம்

**ஒரு** பெண் மனத்தாங்கலுக்கு உள்ளானால், அதனை எப்படி தன்னுள்ளேயே அடக்கி வைத்து வெளிக்காட்டுவாள் என்பதற்கு வரலாற்றிலேயே காரணமாகியவள்தான் புவா பேகம்.

வரலாற்றாசிரியர்களினால் முதலாம் பானிபட் போர் என அழைக்கப்படும் யுத்தம் 1526ஆம் ஆண்டு இடம் பெற்றது. வட இந்தியாவில் நடைபெற்ற இந்தப் போரில் இக்காலத்திற்கு எவ்வகையிலும் குறைவில்லாத அளவில் கடும் சமர்கள் இடம்பெற்றன. இந்தப் போரில் மோதிய இரு தரப்பினரிலும் தலைமை தாங்கியவர்கள் மன்னர் பாபரும், மன்னர் இப்ராஹிமும் ஆவார்கள்.

இதில் மன்னர் பாபர்தான் தற்போது பாரத தேசத்தில் கடும் சிக்கலுக்குள்ளாகி இருக்கும் பாபர் மசூதியை நிர்மாணித்தவர் ஆவார். என்னதான் யுத்தம் என்றாலும் அக்காலத்தில் அதில் ஒரு நேர்மை இருந்தது. யுத்தத்தில் குழந்தைகள், பெண்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்ற சிந்தனை மேலோங்கி இருந்தது.

இந்த யுத்தத்தில் இப்ராஹிம் மன்னர் களப்பலியானார். ஆயினும் யுத்தத்தில் தான் மரணமடைந்தால் தனது உடல் கூட எதிரிப் படையாகிய பாபரின் படைகளிடம் சிக்கிவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த இப்ராஹிம் மன்னர், முன்னதாகவே தனது வீரர்களிடம் சில உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார்.

அதாவது, யுத்தத்தில் தான் மரணமடைந்தால் எதிரிப் படை கண்டெடுக்கக்கூடாத ஓர் இடத்தில் தன்னை அடக்கம் செய்ய வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார். எதிர்பார்த்தபடியே அவர் களப்பலியானதும், இப்ராஹிம் மன்னரின் மெய்ப்பாதுகாவலர்கள் அவரை ரகசியமாக அடைத்துவைத்து விட்டனர். அதன்பின் எஞ்சிய அவரின் படையினரில் கைது செய்யப்பட்டவர்கள் போக, மிகுதியானோர் தப்பி ஓடிவிட்டனர்.

உண்மையில் இப்ராஹிம் மன்னர் அக்ராவினை உள்ளடக்கிய பெருந்தேசத்தின் மன்னராகவே விளங்கினார் என்ற படியால் இப்ராஹிம் மன்னரின் குடும்பத்தவர்கள் ஆக்ரா அரண்மனையிலேயே தொடர்ந்தும் தங்கியிருந்தனர். இவ்வாறு தங்கியிருந்தவர்களில் இப்ராஹிம் மன்னரின் தாயாரே புவா பேகம் ஆவார்.

நடைபெற்று முடிந்த போரில் வெற்றி பெற்ற பாபர் மன்னர், இப்ராஹிம் மன்னரின் உடல் எங்கே புதைக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறிய தனது வீரர்களைக் கொண்டு சல்லடை போட்டுத் தேடினார். என்ன இருந்தாலும் ஓர் நிலப்பிரதேசத்தினைக் கைப்பற்றிய ஓர் ஆதிக்க மன்னருக்கு ஓர் புதைகுழியைத் தேடிப்பிடிப்பது ஒன்றும் கஷ்டமான விடயமல்ல.

அதன்படி அவரின் படைவீரர்களின் தீவிர விசாரணையின் பின் களப்பலியான இப்ராஹிம் மன்னரின் உடல் தேடிப்பிடிக்கப்பட்டிருந்தது. ஆனால் எவருமே எதிர்பாராத விதமாக அங்கு விஜயம் செய்த மன்னர் பாபர், மன்னரின் உடலுக்கு மிகுந்த மரியாதை கொடுத்தார். தகுந்த மரியாதைகள் கொடுத்து அங்கேயே அரசருக்குரிய மரியாதையுடன் அடக்கம் செய்வித்தார். இவ்வளவு விடயங்களையும் தானே முன்னின்று மேற்கொண்டார். அதன் பின்னர் ஆக்ரா அரண்மனைக்குச் சென்றார்.

ஆக்ரா அரண்மனையில் இப்ராஹிம் மன்னரின் குடும்பத்தினர் அனைவரும் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். ஆயினும் எவரும் எவ்விதக் கஷ்டத்திற்கும் உள்ளாக்கப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த பாபர் மன்னரின்



ஆணைக்கிணங்க அனைவரும் கௌரவமாகவே நடாத்தப்பட்டனர்.

போர் முடிந்ததும் அவ்விடத்திற்கு வந்தடைந்த பாபர் மன்னர், காவல் அரண்மனையில் இருந்த இப்ராஹிம் மன்னரின் தாயார் புவா பேகத்தையும் ஏனைய உறவினர்களையும் விடுதலை செய்து, அவர்களை அழைத்துச் சென்று ஒரு மன்னருக்குரிய மரியாதையுடன் அவர்கள் தனது அரண்மனையில் தங்குவதற்கு அனுமதியும் தந்தார்.

எனினும் தனது மகனை போரில் படுகொலை செய்த பாபர் மன்னர் மீது கடுமையான கோபத்திலேயே புவா பேகம் இருந்தாள். அவளது அடிமனது எப்படியாவது அவரைப் பழிவாங்கவே திட்டங்களைத் தீட்டியவண்ணமிருந்தது.

சற்றுக் காலம் பொறுத்திருந்த புவா பேகம் மெதுமெதுவாக தனது திட்டங்களைத் தீட்டத் தொடங்கினாள். பாபர் மன்னருக்கு வழங்கப்படும் அன்றாட உணவை ருசி பார்க்க நியமிக்கப்பட்டிருந்த இரு உதவியாளர்களை தனது கைக்குள் போட்டுக் கொண்டு உணவில் விஷம் கலந்து கொடுக்க ஏற்பாடு செய்தாள். வழமை போலவே உணவருந்த உட்கார்ந்த பாபருக்கு சிறிது சாப்பிட்டதுமே ஏதோ செய்தது. வயிற்றுக் குமட்டல் ஏற்பட்டது. கடும் சந்தேகம் தோன்றிய அவர், சமையல்காரர்கள் அனைவரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தினார். தனக்கு வழங்கப்பட்ட உணவினை ஒரு நாய்க்கு போட்டுப்பார்த்தார். அந்த நாய் உடனே சுருண்டு வீழ்ந்து இறந்தது. உடனடியாக முழு விசாரணை நடாத்திய பாபர் மன்னர் சமையல் சம்பந்தப்பட்ட அனைவரையும் கடும் விசாரணைக்கு உட்படுத்தினார். இதில் குற்றஞ்சாட்டப்பட்ட சமையல்காரர்கள் கொதிக்கும் எண்ணெயில் பொதித்தெடுக்கப்பட்டனர். அரசரது உணவினை ருசி பார்க்க நியமிக்கப்பட்ட இருவரும் கண்டதுண்டமாக வெட்டப்பட்டனர்.

பாபர் மன்னருக்கும், இப்ராஹிம் மன்னருக்கும் இடையில் நடைபெற்ற போரில் பாபர் வெற்றி பெற்ற 8ஆவது வாரம் சதியுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் கொல்லப்பட்டனர். இதில் புவா பேகத்தின் அந்தரங்க உதவிப் பெண்கள் இருவரையும் அந்தப்புரத்தினுள் அனுப்பி வைக்க உத்தரவிட்ட மன்னர், அரண்மனையுடன் சம்பந்தப்பட்ட எவரும் அவர்களை அனுபவிக்கலாம் என உத்தரவிட்டார்.

இவ்வளவும் செய்த பாபர் மன்னர், புவா பேகத்தை மட்டும் ஒன்றுமே செய்யவில்லை. அவளை காபூலுக்கே மீண்டும் அனுப்பினார். ஆயினும் பாபரின் வீரர்கள் சற்று அசந்திருந்த நேரம் மெதுவாக நழுவிய புவா பேகம், சிந்து நதியில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டாள். இன்றும் அவளைப் பற்றிய கல்வெட்டுகள் அவ்விடத்தில் காணப்படுகின்றன.

*(இரகசியங்கள் தொடரும்...)*

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## பிரபாகரனின் திட்டம் குறித்து இந்திய உளவு வட்டாரங்கள் எச்சரிக்கை

**திலீபனின்** உண்ணாவிரதத்தைப் புலிகள் இயக்கம் ஒழுங்கு செய்வதற்குச் சில தினங்கள் முன்னதாக, ஐந்து கோரிக்கைகளடங்கிய மகஜரொன்றினை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது. புலிகளுக்குப் பெரும்பான்மை அங்கத்துவத்துடன் இயன்றவரை விரைவாக வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதே புலிகளின் முதலாவது கோரிக்கையாக அமைந்திருந்தது. இடைக்கால நிர்வாகத்தில் அங்கம் வகிக்க ஏனைய குழுக்களால் சிபார்சு செய்யப்படுபவர்கள் குறித்துத் தம்முடன் கலந்தாலோசித்தே இறுதி முடிவெடுக்கப்பட வேண்டுமென்பதே புலிகளின் இரண்டாவது கோரிக்கையாகும்.

## 175 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

வடக்கு - கிழக்கின் பொலிஸ் படை, புலி இயக்க உறுப்பினர்களைக் கொண்டு நிரப்பப்பட வேண்டுமென்பது மூன்றாவது கோரிக்கையாகும். வெளி விவகாரம், பாதுகாப்பு, குடிவரவு, சுங்கப்பகுதி போன்றவை தவிர, சட்டம், ஒழுங்கு மற்றும் ஏனையவை தொடர்பான பொறுப்புகள் கொண்ட அதிகாரப் பகிர்வுகள் உடனடியாக இடைக்கால நிர்வாகத்துக்கு வழங்கப்பட வேண்டுமென்பது நான்காவது கோரிக்கையாகும். அரசியல் மன்னிப்பு வழங்கப்பட்ட தமிழ்க் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென்பது ஐந்தாவது கோரிக்கையாகும். அதாவது, திலீபனின் உண்ணாவிரதத்தையொட்டி முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு முன்னதாகவே வித்தியாசமான இந்த ஐந்து கோரிக்கைகளையும் புலிகள் இயக்கம் அனுப்பி வைத்தது.

செப்டெம்பர் 23, 26, 28ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய அமைதிப் படைத் தலைமையகத்தில் பிரபாகரன் தலைமையிலான புலி இயக்க உறுப்பினர்களுக்கும் தீக்ஷித் தரப்பினருக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் இடம்

> இதற்கிடையில் உண்ணாவிரதமிருந்து வந்த திலீபனின் உடல் நிலை மோசமடைந்து கொண்டிருந்தது. திலீபன் உண்ணாவிரதமிருந்த நல்லூர் கந்தசுவாமி கோவில் வளாக மேடைக்கு இந்திய உயர்ஸ்தானிகர் தீக்ஷித் நேரடியாகச் சென்று உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு திலீபனிடம் கோரிக்கை விடுக்க வேண்டுமென்று பிரபாகரன் வலியுறுத்தினார். திலீபன் தனது கோரிக்கையையேற்று உண்ணாவிரதத்தைக் கைவிடுவாரென்று உறுதியளித்தால், தான் நேரடியாகச் சென்று கோரிக்கை விடுக்கத் தயாரென்று தீக்ஷித் பதிலளித்தார். அந்த உறுதிமொழியை வழங்கப் பிரபாகரன் தயாராயில்லை. பிரபாகரனின் தந்திரம் குறித்து ஏற்கனவே இந்தியப் புலனாய்வு வட்டாரங்கள் தீக்ஷித்துக்கு எச்சரிக்கை விடுத்திருந்தன

பெற்றன. இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், பிரபாகரன் எழுப்பிய பிரச்சினைகளைக் கேட்டறிவதே இந்திய தரப்பின் முக்கிய பணியாக இருந்தது. அத்துடன் இந்திய அமைதிப் படைக்கெதிராக நடத்தப்பட்டுவரும் ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் நிறுத்துமாறும் திலீபனின் உண்ணாவிரதத்தைக் கைவிடச் செய்யுமாறும் இந்திய தரப்புக் கோரியது. இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதாகவும் இந்திய தரப்பினர் உறுதியளித்தனர்.

இடைக்கால நிர்வாக சபைக்கு உடனடியாக ஜனாதிபதி

(அரசியல் தொடர்)

ஜெயவர்த்தனா தனக்கிருக்கும் செயலாற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி வழங்க முன்வந்த அதிகாரப் பகிர்வுகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

பிரபாகரன் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட வழமையான விடயங்களை வலியுறுத்தியதோடு புலி இயக்கத்துக்கு எதிரான ஏனைய தமிழீழக் குழுக்கள் யாழ்ப்பாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் செயற்பட அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்தினார். குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் ரெலோ இயக்க உறுப்பினர்கள் தமிழ்ப் பகுதிகளில் இயங்க அனுமதிக்கக் கூடாது என்பதே பிரபாகரனின் கோரிக்கையாகவிருந்தது. இலங்கைத் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியாகப் புலிகள் இயக்கத்தைப் புதுடில்லி அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டுமென்றும் பிரபாகரன் வற்புறுத்தினார். இத்தகைய காரணங்களுக்காகவே பிரபாகரன் இந்தியாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களைத் தூண்டி விட்டார் என்று இந்தியத் தரப்பினர் கருதினர். தேசிய பந்தோபஸ்து அமைச்சராகவிருந்த லலித் அத்துலத்முதலி வடமராட்சியில் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தபோது, சிங்கள இராணுவத்திற்கு எதிராகப் போராட இந்தியாவிடமும் சென்னை அரசாங்கத் திடமும் தான் உதவிகள் கோரியதாகவும் அதற்கு இந்திய மத்திய, மாநில அரசுகள் இரண்டுமே செவிசாய்க்கவில்லையென்றும் பிரபாகரன் குறைப்பட்டுக் கொண்டார்.

புலிகள் இயக்கம் இடைக்கால நிர்வாக சபையில் அங்கம் வகிப்பதற்கான தமது பிரதிநிதிகளின் பெயர்களை செப்டெம்பர் மாதம் நடுப் பகுதிவரை அனுப்பாததுதான் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டமைக்குக் காரணமென்று இந்தியத் தரப்பு தெரிவித்தது.

இடைக்கால நிர்வாகத்தில் அங்கம் வகிப்பதற்குப் புலிகள் சிபாரிசு செய்யும் பெயர்களை அனுப்பிவைக்குமாறு ஆகஸ்ட் மாத ஆரம்பத்திலேயே பிரபாகரனுக்கு தகவல் அனுப்பப்பட்டதென்று தீக்ஷித் சுட்டிக் காட்டினார்.

வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ் பகுதிகளில் 1950ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களை இலங்கையிலுள்ள எந்த அரசாங்கத்தினாலும் வெளியேற்ற முடியாது என்று இந்தியத் தரப்பு பிரபாகரனுக்குச் சுட்டிக் காட்டியது. 1980களில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களை அங்கிருந்து அப்புறப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க முடியுமென்று இந்தியத் தரப்பு தெரிவித்தது. அத்துடன் வடக்கு, கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டதும் எந்தவொரு சிங்களக் குடியேற்றத்திட்டமும் இடம்பெறாமல் தடுக்க முடியுமென்றும் இந்திய தரப்பு சுட்டிக்காட்டியது. சகல தமிழீழக் குழுக்களும் தமிழ் கட்சிகளும் இணைந்து வடக்குக் கிழக்கு நிர்வாகத்தை நடத்துவதன் மூலம், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம் + அம்பி மகன்**

குறிப்பிடப்பட்ட விதிகளை நிறைவேற்ற முடியுமென்று இந்தியத் தரப்பு சுட்டிக்காட்டியது. ஈரோஸ் இயக்கத்துடனும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும் இணைந்து தன்னால் செயற்பட முடியுமென்றும் புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய இயக்கங்களுடன் இணைந்து செயற்படத் தான் தயாரில்லையென்றும் பிரபாகரன் பதிலளித்தார்.

உத்தேச இடைக்கால நிர்வாக சபையில் பன்னிரண்டு அங்கத்தவர்கள் இருக்க வேண்டுமென்றும் அதில் ஆகக் குறைந்தது ஏழு பேராவது புலிகளின் சிபாரிசின் பேரில் நியமிக்கப்பட வேண்டுமென்றும் பிரபாகரன் கோரினார். அத்துடன் சபையின் தலைமைப் பொறுப்பு தமது இயக்கத்தினால் சிபாரிசு செய்யப்படுபவருக்கே வழங்கப்பட வேண்டுமென்றும், முஸ்லிம் பிரதிநிதிகளில் ஒருவரை நியமிக்கும் அதிகாரம் தமது இயக்கத்துக்கு வழங்கப்பட வேண்டுமென்றும் பிரபாகரன் வலியுறுத்தினார். அத்துடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பொலிஸ் படையில் புலிகள் இயக்க உறுப்பினர்களே கூடிய அளவில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதும் பிரபாகரனின் கோரிக்கையாகவிருந்தது.

இதற்கிடையில் உண்ணாவிரதமிருந்து வந்த திலீபனின் உடல் நிலை மோசமடைந்து கொண்டிருந்தது. திலீபன் உண்ணாவிரதமிருந்த நல்லூர் கந்தசுவாமி கோவில் வளாக மேடைக்கு இந்திய உயர்ஸ்தானிகர் தீக்ஷித் நேரடியாகச் சென்று உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு திலீபனிடம் கோரிக்கை விடுக்க வேண்டுமென்று பிரபாகரன் வலியுறுத்தினார். திலீபன் தனது கோரிக்கையையேற்று உண்ணாவிரதத்தைக் கைவிடுவாரென்று உறுதியளித்தால், தான் நேரடியாகச் சென்று கோரிக்கை விடுக்கத் தயாரென்று தீக்ஷித் பதிலளித்தார். அந்த உறுதிமொழியை வழங்கப் பிரபாகரன் தயாராயில்லை. பிரபாகரனின் தந்திரம் குறித்து ஏற்கனவே இந்தியப் புலனாய்வு வட்டாரங்கள் தீக்ஷித்துக்கு எச்சரிக்கை விடுத்திருந்தன. அதாவது உண்ணாவிரத மேடைக்கு தீக்ஷித்தை அழைத்துச் சென்று, அவர் மேடையில் இருக்கத்தக்கதாக தீக்ஷித்தின் கோரிக்கையை நிராகரிக்க வைத்து இந்தியாவுக்கு எதிரான மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தப் புலிகள் திட்டம் தீட்டியிருந்த தகவல் புலிகளியக்கத்திற்குள்ளிருந்தே இந்தியப் புலனாய்வு வட்டாரங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. இதன் மூலம் இந்தியாவுக்கு எதிரான மாபெரும் பிரசார இயக்கமொன்றை முன்னெடுக்கப் புலிகள் இயக்கம் திட்டமிட்டிருந்தது.

செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி திலீபன் மரணமடைந்தார். அன்றைய தினம் பிரபாகரன் தரப்பினருக்கும் தீக்ஷித் தலைமையிலான குழுவினருக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. திலீபன் மரணமடைந்த காரணத்தினால் இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு ஆதரவு வழங்கி, அதனை அமுல்படுத்த உதவ முடியாமல் போய் விட்டதென்று பிரபாகரன் குறிப்பிட்டார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு புலிகள் இயக்கம் ஆதரவு வழங்கக் கூடாது என்பது திலீபனின் நிலைப்பாடாக இருந்தது என்று கூறினார் பிரபாகரன். புலிகள் இயக்கத்துக்குள் முடிவெடுக்கும் முழு அதிகாரமும் பிரபாகரனுக்கே உள்ளதென்றும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கு முன்னரேயே அதற்குக் குழிபறிக்க முனைந்தால் புலிகள் எவ்வித உதவியையும் இந்தியாவிடமிருந்து பெறமுடியாதென்றும் எச்சரித்தார் தீக்ஷித்.

திலீபனின் மரணச் செய்தி யாழ்ப்பாணத்தில் பரவியதையடுத்து ஆங்காங்கே வன்செயல்கள் வெடித்தன. வன்செயல்களை தடுக்கும் முயற்சியில் புலிகளே ஈடுபட வேண்டிய நிலையேற்பட்டது ஏன் என்பதை அடுத்த வாரம் பார்ப்போம்.

(தொடர்ந்து வழியும்....)

# நள்ளிரவு மல்லிகை




"**நான்** ஒண்ணு சொல்லட்டுமா?" - ஸ்ரீதேவி கேட்டாள்.

"சொல்லு!"

"தப்பா நினைச்சுக்கக் கூடாது. ஏன்னா நீங்க ரெண்டுபேரும் நண்பர்கள்!"

"அதுக்கென்ன? உன் மனசுக்குத் தோணுறதைச் சொல்லலாம்".

"பிரபாகரனும் சந்துநாயரும் மருமகன் மாமா உறவுக்காரங்க. ஒருவேளை அவரை அவங்க மாமா தன் பக்கம் இழுத்துக்கிட்டாரோ என்னமோ?"

"உனக்கு ஏன் திடீர்னு இப்படித் தோணுது?"

"உறுதியாச் சொல்ல முடியலை. இதெல்லாம் என்னோட யூகம்தான். ஆனா, அதுக்கு வலுவான ஆதாரம் இருக்கு. நான் மட்டும் சரியான நேரத்துக்கு வந்து சேரலைன்னா. நீங்க இந்நேரம் அந்த பாழுங்கிணத்துக்குள்ள விழுந்து கிடப்பீங்க".

"அதனால..."

"உங்களை எதுக்காக அவர் அந்த வழியில கூட்டிட்டு வரணும்? சரி, வந்தது வந்தாச்சு, கிணத்தங் கரையில இருந்து ஏன் உங்களைத் தடுத்து நிறுத்த முயற்சி பண்ணலை?"

"இதெல்லாம் உண்மையாகவே இருந்தாலும் அதனால அவனுக்கு என்ன லாபம்?"

"எனக்கு என்னமோ அவர் மேல ஒரே சந்தேகமா இருக்கு".

"நீ இவ்வளவு தூரம் சொன்ன பிறகு நானும் யோசிக்கவேண்டி இருக்கு. இதெல்லாம் எவ்வளவு தூரம் சரின்னு கண்டுபிடிக்கலாம்". - குமார் ஒப்புக் கொண்டார்.

பிரபாகரனின் உருவிலிருந்த கோவிந்தன் நேராகப் போனது தேங்காய் கிட்டங்கிக்குத்தான்.

அங்கு சந்து நாயரும் ஜயந்தனும் இருந்தனர். நடந்த

**எழுதுவது சிவன்**

விஷயங்களையெல்லாம் கோவிந்தன் விளக்கினான்.

"இவ்வளவெல்லாம் செஞ்சும் உன்னால மாணிக்கத்தை எடுத்துட்டு வர முடியலை. அவனையும் கொல்ல முடியலை. இனிமேல் இதெல்லாம் எப்ப நடக்குமோ?" ஜயந்தனின் குரலில் கோபம் தெரிந்தது.

"என்னோட தவறினால் நீங்க சொன்ன எதுவும் தடைப்படலை". - கோவிந்தன் பதிலளித்தான்.

"அப்புறம் யாரால?"

"அவன்கூட ஒரு பொண்ணு இருக்கிறா. அவள்தான் இதுக்கெல்லாம் காரணம்".

"யாரு ஸ்ரீதேவி தானே?" - சந்துநாயர் கேட்டார்.

"ஆமாம்".

"அப்படியானால் இனிமேலும் அவளை விட்டு வைக்கக் கூடாது. என்ன செய்யலாம் ஆசானே?" ஜயந்தனைப் பார்த்தபடி சந்துநாயர் கேட்டார்.

"கேள்விக்கு வேலையே கிடையாது. அழிச்சிடவேண்டியது தான்".

"சாத்தியமா?"

"அவளோட ஜடத் தன்மையை அழிச்சுட்டா கூடப் போதும்".

"அதுக்கு வழி இருக்கா?"

"அதாவது அவ புகுந்திட்டிருக்கிற எலும்புக்கூட்டை நாசமாக்கிடணும். அதுக்கான ஒரே வழி அதை எரிச்சுடறதுதான்.



காலேஜில இருந்து அவளோட எலும்புக் கூட்டை வெளியில் கொண்டு வந்தால் வேலை ரொம்பவும் சுலபம்".

"அதுக்குத் தகுந்த ஆள் யார்?"

"கோவிந்தன் போதும். அவனால நிச்சயமா அந்த வேலையைச் செய்ய முடியும்!" என்ற ஜயந்தன் அவனைப் பார்த்தார்.

"என்ன கோவிந்தா உன்னால அது முடியாதா என்ன?" - ஜயந்தன் கேட்டார்.

"முயற்சி பண்றேன்!" - கோவிந்தன் பதிலளித்தான்.

"இப்படிச் சொன்னா எப்படி? அழிச்சே தீரணும். நாங்க உனக்குப் புதுசா ஒரு மறுபிறவியையே தந்திருக்கிறோம். ராத்திரி நேரங்களில் அதாவது சூரியன் மறைவதிலிருந்து பொழுது விடிவது வரையில் நீ ஒரு மனிதனைப் போலவே நடந்து கொள்ளலாம். பகல் நேரத்தில் இந்த கிட்டங்கிக்குள்ளேயே படுத்துக் கொள்ளவும் செய்யலாம்." - சந்து நாயர் எடுத்துக் கூறினார்.

அவர் சொன்னதெல்லாம் சரிதான். இரவு நேரத்தில் தன்னை, எந்தக் காரணம் கொண்டும் சந்தேகிக்க முடியாது -தான் பிரபாகரனேதான். பிரபாகரனின் வீட்டுக்குக் கூடப் போகலாம். அவனுடைய அம்மாவுக்குக் கூடச் சந்தேகம் ஏற்படாது. உண்மையிலேயே ஒரு புதுப் பிறவிதான் கிடைத்திருக்கிறது என்பதில் எந்த விதமான சந்தேகமும் கிடையாது. அதுவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம் தான்.

ஒரு ரத்த ரஷஸாக மாறி அவன் மனித ரத்தத்தைச் சுவைக்கலாம். சமீப காலம் வரை ஓர் எலும்புக் கூட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்த அவனுக்கு இது உண்மையிலேயே புதுவாழ்வுதான். எனவே இந்த வாய்ப்பைச் சரியானபடி பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று அவன் தீர்மானிக்கவும் செய்தான். இந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால் ஜயந்தனையும் சந்து நாயரையும் அனுசரித்துப் போவதைத் தவிர வேறு வழியில்லை.

"ஒரு விஷயத்தை நீ ஞாபகம் வெச்சுக்கிறது நல்லது. பிரபாகரனோட உடம்பு கிடைச்சுட்டதால நீ முழுசா ஒரு மனுசனா மாறிட்டதா நினைக்காதே, பகல் பொழுது முழுவதும் நீ வெறும் பிணம்தான். இந்த உடம்பைச் சாம்பலாக்கிவிட்டால் நீ பழையபடி ஒன்றுமில்லாமல் போய் விடுவாய். இதையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் சரி!" - ஜயந்தன் எச்சரிக்கைத் தொனியில் கூறினார்.

உண்மைதான். அவர்களுடன் இணங்கிப் போகாவிட்டால் தன்னுடைய நிலைமை மோசமாகிவிடும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

"நாங்க இதுவரைக்கும் சொன்னதெல்லாம் புரிஞ்சது இல்லையா? இப்படியெல்லாம் நடந்துக்கிட்டா உனக்கு நல்லது." - ஜயந்தன் நினைவூட்டினார்.

"சரி... செய்யுறேன்!" - அவன் ஒப்புக்கொண்டான்.

மறுநாள் சனிக்கிழமை.

சூரியன் மறைந்த உடனேயே கோவிந்தன் தேங்காய் கிட்டங்கியிலிருந்து எழுந்தான்.

வெளியே வந்து சுற்று முற்றும் பார்த்தான்.

யாரும் தட்டுப்படவில்லை.

சற்று நேரத்துக்குள் ஜயந்தன் அங்கு வந்தார்.

"என்ன... இன்னிக்கு காலேஜில போய் முயற்சி பண்ணலாமில்லையா?" - ஜயந்தன் கேட்டார்.

"போகலாம். ஆனால், நான் எப்படிக் கதவைத் திறப்பது?" - சந்தேகத்துடன் கேட்டான்.

"அதுக்கான சக்தியெல்லாம் உனக்கு இருக்கிறது. நீ தாழ்ப்பாளைப் பிடித்து இழுத்தாலே அது தானாகத் திறந்து கொள்ளும்" - ஜயந்தன்

(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி


# சோதனை... சாதனை...!

**அவர்** ஒரு ஜமீன்தார். ஆனால், மகா கஞ்சப் பிரபு! ஒரு முறை நாட்டில் கடுமையான பஞ்சம். மக்கள் குடிப்பதற்குத் தண்ணீர் கூட இல்லாமல் வேதனைப்பட்டார்கள். ஜமீன்தார் என்ற முறையில், அவர் தன் சொந்தப் பணத்தைப் போட்டுக் கிணறு வெட்டி மக்களின் தாகத்தைப் போக்கியிருக்க வேண்டும். ஆனால், செய்யவில்லை.

ஜமீன்தாரின் மனைவியோ இவருக்கு நேர்மாறு. மிகுந்த இரக்க குணமுள்ளவர். அவர் தோட்டக்காரனின் துணையுடன் தானே வயல்வெளியில் இறங்கிக் கிணறு தோண்ட ஆரம்பித்தார். ஒரு நாள் முழுக்கத் தோண்டினாலும் அவர்களால் கொஞ்சம்தான் தோண்ட முடிந்தது. அதனால் ஜமீன்தாரின் மனைவி ஒரு ஐடியா செய்தார். இவர்கள் கிணறு தோண்டும் இடத்துக்கு ஜமீன்தார் வந்த சமயம், அந்தப் பள்ளத்தில் கொஞ்சம் எண்ணெயை ஊற்றிவிட்டு, 'இங்கே எண்ணெய்க் கிணறு இருக்கலாம் என்று தோன்றுகிறது' என்று ஜமீன்தாரிடம் சொல்ல... உடனே ஜமீன்தார் பத்துப் பேரை வேலைக்கு அமர்த்தி, இரவோடு இரவாக அங்கே கிணறு தோண்ட ஆரம்பித்தார். ஜமீன்தாரின் மனைவி சொன்னது போல அங்கே எண்ணெய் வரவில்லை. அதற்குப் பதிலாகக் கற்கண்டு போல் இனிக்கும் தண்ணீர் சுரந்து வர... ஜமீன்தார் ஏமாற்றமடைந்தார். ஆனால், மக்கள் பயனடைந்தார்கள். ஜமீன்தாரின் மனைவியும் மகிழ்ச்சியடைந்தார்.

இந்தக் கதையை இங்கே சொல்லக் காரணம் இருக்கிறது. மேற்கொண்டு படியுங்கள்.

அவர் என் நீண்ட நாள்



மாணவர். இன்று அவர் நேர்மையான ஒரு பொலிஸ் ஆபீஸார். சமீபத்தில் அவர் என்னைத் தேடி வந்தார்..

"இதுவரை எந்த கோல்மாலுக்கும் இடம் இல்லாத ஒரு பதவியில் நான் பணியாற்றி வந்தேன். ஆனால், திடுதிப்பென்று எனக்கு வேறு ஒரு பதவி கொடுத்து, 'அங்கே போய் வேலை செய்!" என்று உத்தரவு போட்டுவிட்டார்கள். அது பண முதலைகளும் ரௌடிகளும் அரசியல் தலையீடுகளும் புழங்கும் பதவி. எனக்கு அந்தப் பதவி சரிப்பட்டுவரும் என்று தோன்றவில்லை. பேசாமல் வேலையே வேண்டாம் என்று ராஜினாமா கடிதம் கொடுத்துவிட்டுப் போய்விடலாமா என நினைக்கிறேன்" என்றார் அவர்.

அவருக்கு நான் அப்போது சொன்ன கதைதான் மேலே நீங்கள் படித்தது.

இறைவனின் ஆலயத்தில் குருக்களாக இருப்பவர் எந்தத் தீய பழக்கங்களும் இல்லாமல் இருப்பது ஒரு பெரிய விஷயமே இல்லை. ஆனால், சாராயக்கடைக்குப் பக்கத்தில் பக்கோடா கடை நடத்தும் நபர் எந்தவிதத் தீய பழக்கமும் இல்லாமல் இருப்பாரேயானால் அதிகம் பாராட்டப்பட வேண்டியவர் அந்த நபர்தான் இல்லையா? கெட்டுப் போவதற்கு அதிகச் சந்தர்ப்பங்கள் இருந்தும் ஒருவர் கெடாமல் இருந்தால் அதுதானே சவாலான விஷயம்? அதுதானே அதிகம் பாராட்டுக்குரிய விஷயம்?

நான் அந்த பொலிஸ் அதிகாரியிடம் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவர் என்னை இடைமறித்து,? "என்னதான் நீங்கள் ஆயிரம் சமாதானம் சொன்னாலும், ஊழல் பேர்வழிகளோடு சேர்ந்த என்னால் எப்படி வேலை செய்ய முடியும்? நான் அந்தப் பதவியில் இருந்தால், ஒன்று நானும் ஊழல் செய்ய வேண்டும்... அல்லது, என் மீது ஏதாவது வீண்பழி சுமத்தி என்னை அவமானப்படுத்திவிடுவார்கள்..."

அந்த பொலிஸ் அதிகாரி மிகவும் உணர்ச்சிவசப்பட்டிருந்தார்.

"குறிப்பிட்ட இந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்பதை நீங்களே தான் முடிவு செய்ய முடியும். ஆனால், பொதுவாக ஒரு விஷயத்தை உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்பகிறேன்." என்று கூறி, அவருக்குச் சொன்ன விஷயங்களை இங்கே உங்களிடம் நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஆண்டவன் நமக்கு அளிக்கும் வாய்ப்புகள் எதுவாயினும், அதை எப்படிப் பயனுள்ளதாக்கிக் கொள்வது என்பது நம் கையில்தான் இருக்கிறது.

ஆண்டவன் நமக்கு மாம்பழத்தை அளித்தால், மாம்பழ ஜூஸ் செய்து அனைவருக்கும் பருகக் கொடுப்போம். எலுமிச்சைப் பழத்தைக் கொடுத்தால், எலுமிச்சம் ஜூஸ் செய்வோம். ஆனால், ஆண்டவன் கொடுத்த எலுமிச்சைப் பழத்தை கையில் வைத்துக் கொண்டு, அதிலிருந்து மாம்பழ ஜூஸ் செய்ய முடியவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் எப்படி?

இது கிரிக்கட் சீஸன் என்பதால் அதையே உதாரணமாகக் காட்டிச் சொல்கிறேன். பேட்ஸ்மேனை நோக்கி வீசப்படும் ஒவ்வொரு பந்தும் அவரை ஆட்டத்திலிருந்து அவுட் செய்யப்படுவதற்காகவே வீசப்படுகிறது. அதே சமயம் ∴போர், சிக்ஸர் என்று ரன்கள் குவிக்க பெஸ்ட்மேனுக்குப் பயன்படுவதும் அதே பந்துதானே!

நம்முடைய அலுவலகத்தில்... குடும்பத்தில்... இப்படி எந்த இடத்தில் என்ன மாற்றங்கள் நடந்தாலும் சரி... நாம் நினைத்தால் சோதனைகளைக் கூடச் சாதனைகளாக மாற்றிக் கொள்ள முடியும்! சின்னச் சின்ன விஷயங்கள் நமக்குள் சீரிய சிந்தனைகளை விதைக்க முடியும்.

ஓர் உதாரணத்துக்கு பென்சிலையே எடுத்துக் கொள்ளுங்கள்.

செதுக்குதல் என்பதோ சீவுதல்' என்பதோ வலி நிறைந்ததுதான். என்றாலும், பென்சில் சீவப்பட்டால் தான் கூர்மையானதாக இருக்கும்.

இந்த உண்மை மனிதர்களாகிய நமக்கும் பொருந்துமா, பொருந்தாதா? சற்றே யோசித்துப் பாருங்கள்.

பென்சிலின் வெளிப்புறத் தோற்றம் முக்கியமல்ல... அதன் உள்ளே இருப்பதுதான் முக்கியம்.

பணம், செல்வம், வசதி வாய்ப்புக்கள்... இதெல்லாம் வெளிப்புறம். மகிழ்ச்சி, சந்தோஷம், திருப்தி,... இதெல்லாம் உட்புறம் என்ற அர்த்தத்தில் யோசித்துப் பாருங்கள். பென்சிலுக்குப் பொருந்தும் தத்துவம் நமக்கும் பொருந்தும்தானே?

(தொடர்ந்து வரும்.....)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள்
சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள்
அடங்கிய இப் போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு
பரிசுகளையும், பாராட்டுக்களையும்
பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 184

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| | | 15 | 16 | 17 | 18 |
| 19 | | | 22 | | 24 |
| 25 | 26 | | 28 | 29 | |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1.சட்டத்தரணிகளின் களம் என்றும் கூறலாம்.
7.நோய். (குழம்பியுள்ளது)
11.வனம் என்றும் பொருள்படும். (திரும்பியுள்ளது)
15.குறிஞ்சி நிலப்பெண் இப்படி அழைக்கப்படுவாள். (குழம்பியுள்ளது)
25.கட்டளை என்றும் கூறலாம்.
28.பெண் அல்லது ஆண்டாள். (திரும்பியுள்ளது)
31.மாமி என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது)
35.முக்கனிகளில் ஒன்று. (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. கமல் நடித்த திரைப்படமொன்று.
2. ஊழ் அல்லது ஆயுள் என்றும் கூறுவர் (தலைகீழ்).
3. மனிதனின் முன்னேற்றத்தை தடுக்கக்கூடிய பழக்கம் அல்லது குற்றம் (குழம்பியுள்ளது).
5. ஆயுத உபகரணம் ஒன்று (குழம்பியுள்ளது).
6. இராகங்களில் ஒன்று (குழம்பியுள்ளது).
16. ஊர்வனவற்றில் ஒன்று (குழம்பியுள்ளது).
19. இரவில் கூர்மையான பார்வைத் திறனுடைய பறவை (குழம்பியுள்ளது)
26. கரை அல்லது தடுப்பு என்றும் கூறலாம் (தலைகீழ்).
29. துணிவற்றவன் அல்லது பயந்தவன் என்று கூறலாம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 182க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

கே. வின்சன், மல்வத்தை வீதி, தெஹிவளை.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. சு. மதி, இல 61, குருமண்காடு, வவுனியா.
2. பி. ரமிளா, போல்ஸ் வீதி, புத்தளம்.
3. ஜெ. குமார். கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
4. த. வேந்தன், இல. 89, டன்பார் வீதி, ஹட்டன்.
5. எஸ். சுரேஷ், பிரதான வீதி, கல்முனை.
6. சா. டனிஸ்ரன், பெரிய கடை, மன்னார்.
7. செ. சியாமளா, பிரதானவீதி, ஏறாவூர்.
8. த. கோகிலா, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06
9. எல். கனிசியஸ், பிரதான வீதி, மன்னார்.
10. ஜெ. அனுராஜ், விதானையார் வீதி, சுண்டிக்குழி. யாழ்ப்பாணம்.

### குறுக்கெழுத்துப் போட்டி 182 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓ 1 | சா 2 | ர் 3 | | மா 5 | னி 6 |
| ஆ 7 | பி 8 | த் 9 | | கை 11 | வ 12 |
| றை 13 | | நி 15 | றை 16 | | |
| | ற 20 | வ 21 | கு 22 | | கை 24 |
| தீ 25 | க 26 | தி 27 | | ள 29 | வி 30 |
| ஆ 31 | டி 32 | | | டை 35 | ஓ 36 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 05.09.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-184
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# மின்சாரக் கதைகள்

- வழங்குவது ராஹில்

## நீ வெட்கம் சுமந்த போது...!

விரும்பியவாறு கவிதை படைக்கச் சொன்னார் ஆசிரியர். நீ மலர்கள் பற்றிப் பேசியிருந்தாய்.

"ஒரு ரோஜா, பூக்கள் பற்றிப் புகழ்ந்திருக்கிறது" என்றேன் நான்.

உன் முகம் பூந்தோட்டமானது.

"நீ எதைப் பற்றி எழுதியிருக்கிறாய்?" என்று கேட்டாய்.

"நானும் மலர் பற்றித்தான் மனம் திறந்திருக்கிறேன்" என்றேன் நான்.

"நீ என் கவிதையைக் காப்பியடித்திருப்பாய்" என்றாய் நீ.

"நீ சொன்னது சரி" என்றேன்.

மலர் உன்னைக் காப்பியடித்தது.

உன்னை நான் காப்பியடித்தேன்.

நீ வனத்துக்குச் சென்றாய், மரங்கள் எல்லாம் சந்தணமாகின.

நீ பூஞ்சோலைக்குச் சென்றாய், பூக்கள் எல்லாம் விண்மீன்களாகின.

நீ கடற்கரைக்குச் சென்றாய், கடல் பால் நிறமானது.

நீ குளக்கரைக்குச் சென்றாய், தாமரைகள் முத்துக்கள் பூத்தன.

நீ எனக்குள் வந்தாய், நான் நீயாகிப் போனேன்.

என் கவிதை சுவாசித்த ஆசிரியர் புல்லாங்குழலாகிப் புகழ்ந்தார்.

"உன் கற்பனை அற்புதம். ஆனால் உன்னிடம் காதல் வந்திருக்கிறது" என்றார்.

நீ என் கவிதை கண்டாய்.

"சூ..ப்..ப்..பர்...ர்..!" நீ இனிப்பு வார்த்தை ஊட்டினாய்.

"நீ... யாரையோ... லவ் பண்ணுகிறாய்..."

நீ என்னைக் கண்டு பிடித்தாய். ஆனால் எனக்குள் புல்லாங்குழல் வாசிக்கும் உன்னை உன்னால் கண்டு பிடிக்க முடியவில்லை.

"நீ யாரை லவ் பண்ணுகிறாய்...?"

நீ மீண்டும் விசாரித்தாய்.

நீ செய்த கேள்விக்கு விடை இருக்கிறது. ஆனால் உன்னிடம் சொல்லும் துணிவு இல்லை.

"லவ் பண்ணத் துணிவு இருக்கிறது... ஆனா... பெயர் சொல்லத் தைரியம் இல்லை..." நீ கிண்டலால் என் மானத்தைக் காயமாக்கினாய்... என் காதலை ஈரமாக்கினாய்.

என் மௌனம் மெள்ள விலகியது.

"பெயர் சொன்னால் பூ முள்ளாகுமா?
அழகிய ஓடை காட்டாறாகுமா??
புன்னகை கண்ணீராகுமா?
என் இனிப்பு நெருப்பாகிடுமா?"
என்றேன்.

"நீ இப்போ அழகாகப் பேசுகிறாய்" என்றாய் நீ.

அதைக் கற்றுக் கொடுத்ததே உன் கண்கள் தானே!

அழகை என்னில் அணிந்து விட்டவளும் நீதானே!

"சொல்லமாட்டாயா...?" என்றாய் மீண்டும் மீண்டும் நீ.

தக்காளி தங்கப் பழங்கள் தந்தன, நீ தண்ணீர் ஊற்றியதால்!

குருவிகள் கீச் கீச் மறந்தன. உன்னைக் கண்டதும் இச் இச் என்றன.

அழகு வரிகளால் உன்னை அலங்கரித்தேன்.

"என்...ன்...னை..யா...யா...???... எவ்வளவு சந்தோஷமா.... இருக்கிறது... தெரியுமா?...போ...டா...! என்னை சில நொடிகள் சாகடிச்சுட்டியே...!" என்றாய்.

நீ வெட்கம் சுமந்தபோது என்னில் ஒரு கோடிப் பூக்கள் அவிழ்ந்தன.


## இவ்வாரச் சிறு கதைகள்

# விடிவைத் தேடும் விளக்கு!

**அன்று** ஞாயிற்றுக்கிழமை. அதுவும் மாலை நேரம், மழை பெய்து கொண்டிருந்தது. ஜன்னலின் கம்பிகளைப் பிடித்தபடி தன்னந்தனியாக உருவமொன்று நின்று கொண்டிருந்தது. அவ்வுருவத்திற்குச் சொந்தக்காரி வேறுயாருமில்லை, அவள்தான் சந்தியா. கண்களில் கண்ணீரும் முகத்திலே ஏக்கமும், எதிர்பார்ப்புமாக நின்று கொண்டிருந்தாள் சந்தியா. "சந்தியா, சந்தியா நீ எங்கயிருக்க". என்றொரு குரல். அது சந்தியாவின் தாயின் குரல். தன் தாய் கூப்பிடும் சத்தம் கூட அவளுடைய காதில் விழவில்லை. ஏதோ யோசனையுடன் நின்று கொண்டிருந்தாள் சந்தியா. இதைக் கண்ட தாய் "சந்தியா உனக்கு என்ன ஆச்சி?" நா கூப்பிடுகிறது கூட ஒன்னோட காதுல விழலையா?" என்றார். அப்போதுதான் இவ்வுலகத்திற்கு வந்தாள் சந்தியா. "அம்மா... அம்மா என்ன கூப்பிட்டீங்களா? ஏன் அம்மா" என்று கேட்டாள். "வாமா சாப்பிடலாம். எவ்வளவு நாளைக்குத். தான் நீ இப்படியே இருப்ப. எல்லாம் நம்ம தலையெழுத்து" என்று கூறியபடி அழத்தொடங்கினார் அம்மா. "சரி, சரி, அம்மா அழாதிங்க. வாங்க சாப்பிடப் போவோம்." என்றாள். இருவரும் சாப்பிடச் சென்றனர்.

சாப்பாட்டை அம்மாவுக்குக் கொடுத்துவிட்டு இவளும் சாப்பிடுவதற்காக தன் தட்டை எடுத்து சோறையும், கறியையும் இட்டுக்கொண்டு ஓரமாகச் சென்று உட்கார்ந்தாள். சோற்றைப் பிசைந்தபடி சாப்பிடாமல் தன் கடந்த காலத்தை யோசிக்கலானாள். வறிய குடும்பத்தில் பிறந்தவள் சந்தியா.

வறிய குடும்பத்தில் பிறந்தாளும் சந்தோஷமாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்தாள். இவளுக்கு "சிவா" என்ற பெயரில் ஒரு தம்பியும் இருந்தான். இவளின் அப்பா மீன்பிடித்தொழிலைச் செய்கிறவர். பிடிக்கின்ற மீன்களைப் பொறுத்தே அவருடைய வருமானம் அமையும். இப்படிப்பட்ட




சூழ்நிலையிலும் சந்தியாவையும், சிவாவையும் படிக்க வைத்தார். இவர்கள் இருவரும் பாடசாலைக்குச் செல்லும். போது அங்குள்ள மாணவர்களெல்லாம் மூக்கை மூடிக்கொண்டு "மீன் வந்திருச்சி எல்லாம் அங்கிட்டு ஓரமா போங்க" என்றெல்லாம் கேலி செய்வார்கள். சந்தியா அதைப் பொருட்படுத்தாமல் படித்தாள். ஆனால் தம்பி சிவாவோ தம் பெற்றோரிடம் கூறி அழுவான். இதன் காரணமாகவே சிவா படிப்பை இடைநிறுத்தி, தன் அப்பாவுடன் மீன்பிடிக்கச் சென்றான். இதையெல்லாம் நினைத்த சந்தியா "நான் எப்படியாவது படித்து ஒரு வைத்தியராக வந்து, இவர்களுடைய முகத்தில் எல்லாம் கரி பூச வேண்டும் என்று நினைத்தாள். இவள் கஷ்டப்பட்டுப் படித்ததன் பயனாக சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தாள். அடுத்த படியாக உயர்தரம் தான் படிக்க வேண்டும் என்பதை பெற்றோருக்கும், தம்பிக்கும் தெரிவித்தாள் சந்தியா. இதைக் கேட்ட சந்தியாவின் குடும்பம் மகிழ்ச்சியில் மிதந்தது. உயர்தரத்திலே விஞ்ஞானத்துறையை தெரிவு செய்து கடுமையாகப் படித்தாள். பரீட்சைக்கு மூன்று மாதங்கள் இருந்தன. அப்பொழுது அவளுக்கு அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது.

மீன்பிடிக்கச் சென்ற தன் அப்பாவும், தம்பியும் சூறாவளி காரணமாகப் படகு கவிழ்ந்து இருவரும் இறந்துவிட்டார்கள். இருவரின் இழப்பையும் தன் தாயின் நிலைமையையும் பார்த்த சந்தியாவினால் படிக்க முடியாததால் பரீட்சைக்குச் சென்று ஒழுங்கான விடையை எழுத முடியாமல் திண்டாடினாள். பரீட்சையிலும் தோல்வியடைந்தாள். தாயையும் அவள் இழக்க விரும்பவில்லை. அதனால், அவள் கம்பனி ஒன்றுக்கு வேலை செய்வதற்காகச் சென்றாள். அதில் வருகின்ற வருமானம் இருவருக்கும் போதுமானதாகவே இருந்தது. அப்போதும் கூட அவளால் தன் பழைய அம்மாவைப் பார்க்க முடியவில்லை. இதனால், இவள் வேறொரு ஊருக்குச் செல்ல முடிவு செய்தாள். அதன்படியே, அவளுடைய முதலாளியுடன் வேறொரு ஊருக்குச் சென்றாள். காலங்கள் கடந்தன...

அதே ஊரில் உள்ள "அருண்" என்ற வாலிபனை விரும்பினாள். அவனும் சந்தியாவை விரும்பினான். அருண் பணக்கார வீட்டுப் பையன். இவர்களுடைய நேசிப்பு இரு வீட்டாருக்கும் தெரியவந்தது. அருணுடைய அம்மாவுக்கு சந்தியாவை தெரியாததால், சந்தியாவைக் கோயிலுக்கு வரவழைத்து அம்மாவிடம் சந்தியாவை அறிமுகப்படுத்தினான். சந்தியாவின் அழகும், பணிவும் அருணின் அம்மாவுக்குப் பிடித்திருந்தது. "சந்தியாவை நீ கலியாணம் செய்ய விரும்பினால் பத்துச் சவரம் நகை போடச் சொல். அப்படி ஒத்துக்கொண்டால் சம்மதிக்கிறேன்" என்றாள். அம்மாவின் முடிவை சந்தியாவின் குடும்பத்திற்குச் சொன்னான் அருண். இதைக் கேட்ட சந்தியா, "வேணாம் அம்மா" என்றாள். அதற்கு அம்மா "இல்ல மக. நல்ல சம்பந்தத்த ஏன் விடவேணும். உன்னக் கட்டி கொடுத்தாத்தான் அப்பாவின் ஆத்மா சாந்தியடையும்" என்றார். இதையெல்லாம் கருத்தில் கொண்ட சந்தியா "அம்மா நான் வேலை செய்யுற கம்பனியில லோன் போட்டு பத்து சவரம் வாங்குவோம்" என்றாள். சந்தியாவின் அம்மாவும் இதற்குச் சம்மதித்தார்.

அதன்படி எட்டுச் சவரம் நகை வாங்குவதற்கே, பணம் கிடைத்தது. மீதி இரண்டு சவரம் நகையை பிறகு தருவதாக சந்தியாவின் வீட்டில் கூறினர். இறுதியாக இரு வீட்டாரின் சம்மதத்துடனும் திருமணம் நடந்தது.

காலங்கள் சென்றன....

சந்தியாவும் கர்ப்பமடைந்தாள். "இன்னும் இரண்டு சவரம் நகை போட இருக்குதே, அருணும் கேக்க மாட்டேங்கிறான்" என்று அருணின் அம்மாவின் மனத்திரையிலே ஓடியது. "சந்தியா, இங்கே வா! இவ்வளவு நாளு ஆகியும் ஒன்னோட வீட்டில கொடுக்க வேண்டிய நகை இன்னும் வந்து சேரல்ல. இப்போ போய் வாங்கிட்டு வா! நகை இல்லாமல் வீட்டுக்கு வராத என்றாள் மாமி. இதைக் கேட்ட சந்தியா அதிர்ச்சியில் மூழ்கிக்கிடந்தாள். இதை கேட்ட அருண், "என்னம்மா இப்ப "இத கேக்குறீங்க! அவளும் கர்ப்பமாகத்தானே இருக்கிறா" என்றான். "அருண் நீ வாய மூடு. ஒனக்கு நா வேணுமா? அவ வேணுமா?" என்றாள் அம்மா. யோசித்தபடி "அம்மா எனக்கு நீங்க ரெண்டுபேரும் வேணும் என்றான்" இதைக் கேட்ட அம்மா "அவ வீட்டில் இருந்தா நா உயிரோட இருக்கமாட்டேன்" என்றாள். பேசமுடியாமல் அருண் வாயடைத்து நின்றான். அழுது கொண்டிருந்த சந்தியாவின் பிடரியைப் பிடித்துத் தள்ளிவிட்டு கதவை மூடினாள் அம்மா.

"மாமி, மாமி கதவ திறங்க" என்று கத்தினாள் சந்தியா. பயன் ஒன்றுமில்லை. தன் தாயிடம் சென்று நடந்தவற்றைக் கூறினாள் சந்தியா. அன்று வீட்டுக்கு வந்த சந்தியா, இன்றுவரை அதாவது குழந்தைக்கு இரண்டு வயதாகியும் அருண் வீட்டுக்கு வராததையிட்டு துயரமடைந்தாள். இவளுடைய வாழ்க்கையில் எப்போதுதான் விடிவுக்காலம் வரப்போகிறதோ தெரியவில்லை! ***(யாவும் கற்பனை)***

# கல்வியா? காதலா?

**மருத** நில அரசன் கண் விழித்தான். இளந் தென்றல் காற்று சில்லென்று வீசியது. படுக்கையில் சுருண்டு படுத்திருந்த ராஜாவை இன்னும் கொஞ்ச நேரம் தூங்கு என்று குளிர்காற்று தாலாட்டியது. பச்சை பசேலென அசைந்தாடிக் கொண்டிருந்த இளம் நெற்கதிர்களின் ஆட்டத்திற்கேற்ப பாட்டுப் பாடிக்கொண்டிருந்தன பறவையினங்கள். சூரிய பகவான் தலையை நீட்டினான். தன் தலைவன் வருகையை எதிர்பார்த்திருந்த தாமரையின் முகங்கள் மலர்ந்தன. அவ்வழகிய வயற்பிரதேசத்திலே ஏழை விவசாயியான சொக்கலிங்கம் ஓலைக் குடிசையில் வாழ்ந்து வந்தான்.

"ராஜா எழும்பு, எழும்பு பாடசாலைக்குப் போகணும்" என்று தாய் தன் மகனை மெதுவாக எழுப்பினாள். ராஜா அவசரமாக எழும்பி, தான் வழமையாக நீராடும் பள்ளமடு குளத்துக்கு வேகமாகச் சென்றான். அந்த அதிகாலைப் பொழுதில் குளத்தின் வசீகரத்தில் மெய்சிலிர்த்து நின்றான். அந்த அழகிய குளத்தைச் சூழ்ந்து நின்ற மதுரை மரங்கள் தெளிந்த தெள்ளமுதான நீரிலே தங்கள் முகத்தைப் பார்த்து சீவிச் சிங்காரித்துக் கொண்டு நின்றன. அந்த அழகிய குளத்தில் மலர்களின் நடுவே பாய்ந்து தொப்பென்று விழுந்த ராஜா அவசரமாக நீராடிவிட்டு, அம்மா தந்த கூழை அன்பு கலந்த அமிர்தமாகப் பருகிவிட்டு அம்மாவிடமும், அப்பாவிடமும் விடைபெற்றுச் சுறுசுறுப்பாக பாடசாலைக்குச் சென்றான்.

பாடசாலை தரிப்பிடத்தில் அவனின் கண்கள் யாரையோ தேடின. அவன் மனம் தணலாகக் கொதித்தது. "சுதா எனக்காகக் காத்திருப்பாள். சதா" "காதலென்பது இதா" என்று எண்ணிக்கொண்டிருக்கும் பொழுது, சுதாவும் அங்கு வந்து சேர்ந்தாள். அவர்களின் உள்ளங்கள் பராக்கிரமபாகு சமுத்திரம் போன்று சந்தோஷத்தால் நிறைந்தது. இருவரும் கல்லூரியின் காதல் சிட்டுக்கள். உயர்தரம் கற்கும் மாணவர்கள். கல்லுக்குள் இருக்கும் தேரை போல் யாருக்கும் தெரியாமல் அவர்களின் கண்கள் கதைகள் பேசின. கல்வி,




விளையாட்டுக்கள், கலை நிகழ்வுகள் அனைத்திலும் திறமையுடையோராகத் திகழ்ந்தனர். உயர்தரப் பரீட்சையும் நெருங்கியது. ஏழை விவசாயி சொக்கலிங்கம் "மகனே உன் உயர்தரப் பரீட்சை பெறுபேற்றில்தான் இந்த ஏழையின் இலட்சியம் தங்கியுள்ளது" என்றான். ராஜாவின் தாய் "மகனே தாயின் கனவை நனவாக்கு" என்றாள். சுதாவின் பெற்றோர்களோ வசதியானவர்கள். சுதாவை நோக்கி அவர்கள் அடிக்கடி கூறும் வார்த்தை "மகளே உன் உயர்தரப் பெறுபேற்றில்தான் நம்முடைய கௌரவம் தங்கியுள்ளது" என்பார்கள்.

சுதா இரவில் படிப்பதற்காக கொப்பியைப் புரட்டினாள். அங்கு ராஜாவின் முகம் தெரிந்தது. மென்மையான உள்ளத்தில் இருந்து ராஜா பேசிய காதல் மொழிகள் ஓவியம்போல் தீட்டப்பட்டு ஞாபகத்துக்கு வந்து தொல்லைப்படுத்தின.

இளமையின் முறுக்கேறிய நரம்புகளையும், அகன்ற புயத்தையும் நுண்ணிய சிந்தனையையுமுடைய ராஜா இரவில் படிக்க முயன்றபோது, கடலில் மிதக்கும் தெப்பம்போல் அவனின் உள்ளத்தில் அவள் குடியிருந்தாள். படிக்க ராஜா முயன்றான். அவனின் உள்ளத்தில் தாமரையாக அவள் மலர்ந்தாள். இவ்வாறு இருவரும் பல நாட்கள் முயற்சி செய்தும் அவர்களால் சிறப்பாகப் படிக்க முடியவில்லை. பரீட்சையும் நெருங்கியது. பரீட்சைக் காலத்திலும் இருவர் கண்களும், சந்தித்தன. நள்ளிரவு மல்லிகை போல் உள்ளம் மலர்ந்தன. சுதா சிரிக்கும் சிரிப்பொலிகள் ராஜாவுக்கு இரவின் தாலாட்டாக அமைந்தது. சுதாவுக்கு ராஜாவின் கம்பீரம், அமைதியான போக்கு, மென்மையான பேச்சொலி பல நாள் இரவு தூக்கத்தைக் கெடுத்தது.

பல நாட்கள் படுக்கையில் புரண்டு படுத்தாள். நித்திரை வர மறுத்தது. தூக்க மாத்திரைகூட உபயோகித்தாள். நித்திரை ஓடி ஒளிந்தது. ராஜாவின் எண்ணங்கள் பசுமரத்தாணி போல் மனதில் பதிந்தது. பரீட்சை நெருங்கியது. இருவரும் பரீட்சை எழுதும் போது பேனா முனையில் ஒருவர் மீது ஒருவர் கொண்ட காதல் கடிதங்கள் எட்டிப்பார்த்தன. பரீட்சை வினாவுக்கான விடைகள் ஞாபகத்துக்கு வர மறுத்தன. பரீட்சை பெறுபேறும் ஒரு சில மாதங்களால் வந்தது.

பாடசாலையே அன்று பெற்றோர்களால் நிரம்பி வழிந்தது. பல பெற்றோர்களின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. சுதாவின் அப்பாவின் கண்கள் கோபத்தால் சிவந்தன. ஏழை விட்ட வியர்வைக்கு பயனில்லையென்று எண்ணி ராஜாவுடைய அப்பாவின் கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி வழிந்தது.

ஒரு சில ஆண்டுகள் உருண்டோடின. ராஜா, சுதா காதல் வீட்டுக்குத் தெரிந்தது. சுதாவின் அப்பா, "சொக்கலிங்கத்தின் மகனா?" அவண்ட தரம் என்ன? என் தரம் என்ன? என்று ஆவேசப்பட்டு சுதாவுக்கு பெரிய இடத்தில் மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கினார். சொக்கலிங்கம் ராஜாவிடம் சீறிப்பாய்ந்தார். ராஜா இச்செய்தி கேட்டு அனலிடைப்பட்ட புழுப்போல் வேதனையடைந்தான். சுதா பெட்டிக்குள் அடைக்கப்பட்ட பாம்பு போல பெருமூச்சு விட்டுக்கொண்டு கண்ணீரினால் உடல் குளித்தாள். நாட்கள் நகர்ந்தன. சுதாவுக்கு மாப்பிள்ளை வசதியான இடத்தில் இருந்து கிடைக்கப் பெற்றது. சுதாவின் அப்பா, "நான் பார்த்த மாப்பிள்ளையையே நீ திருமணம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் ராஜாவை ஆள் வைத்து கொன்று விடுவேன்" என்று பயமுறுத்தினார். சுதாவும் பயத்தால் ஒப்புக்கொண்டு உணர்ச்சியற்ற பொம்மையாக விளங்கினாள். திருமணமும் நிறைவு பெற்றது. ராஜா கல்வியையும் இழந்து காதலையும் இழந்து, நடுக்கடலில் அகப்பட்டவன் போல் தத்தளித்தான். தன் நிலை இனிமேல் பாடசாலையில் கற்கும் மாணவர்கள் யாருக்கும் வரக்கூடாது என்று இறைவனைப் பிரார்த்தித்தான்.

***(யாவும் கற்பனை)***

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

இந்த மாபெரும் பூவுலகில் தோன்றி மறைந்த, மறைகின்ற மனித சமுதாயத்தில் எத்தனையோ விதமான மக்கள் கூட்டங்களின் நின்று தோன்றி மறைந்துபோன வாழ்க்கை முறைகள், தோன்றவிருக்கின்ற சமுதாய மாற்றங்கள், அதனால் ஏற்படக் கூடிய நன்மை, தீமைகளைப் பட்டியலிட்டுக் கூற முடியாவிட்டாலும், அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகின்ற தாக்கங்கள் ஓரளவுக்கேனும் வாழ்க்கையின் பிரதிபலிப்புகளைச் சித்தரித்துக்கொண்டே இருக்கின்றன.

சமூகத்தில் ஏதோ ஒரு வழியில் கெட்டவர்கள், நல்லவர்கள் என்று வேறுபடுத்திக் கூறிக்கொண்டே இருப்பதற்குக் காரணம், அவரவர் செயற்பாடு, ஒழுக்கம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளமை கண்கூடு. இதற்குச் சான்று பகர்வது போல் பெருந்தகை கூறிவைத்திருப்பதைக் கவனிப்போமா?

**"நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு**
**இனத்தியல்ப தாகும் அறிவு".** *குறள் : 451*

நீரானது, நிலத்தின் அமைவால் தன்மை மாறுபடுவது போல், தாம் சேருகின்ற மனிதர்களின் தன்மையைப் போன்றே தாமும் மாறிவிடுவதும் அவரவர் அறிவுக்கு அமைந்தே தமது அறிவும் மாறிவிடுவதும் இயல்பாகியுள்ளது.

## சிந்தியா பதில்கள்

**✉ நிவர்சிபிள் உடை கேள்விப்பட்டுள்ளீர்களா?**
*- எம்.மகமுத் - கல்முனை*

கேள்விப்பட்டது மட்டுமல்ல, பார்த்துமுள்ளேன். ஆண்களின் சட்டையில் ஆரம்பித்தது தற்போது பெண்களின் சேலையில் வந்தடைந்துள்ளது. சுருக்கமாகச் சொல்வதாயின் புறப்பக்கமாய் கட்டிப் போட்டான் (ள்) என்ற பேச்சிற்கே இடமில்லாமல் உள்ளும், புறமும் அணியக்கூடியதே நிவர்சிபிள் உடை ஆகும். இதற்கு சரியான தமிழ்ச் சொல் யாராவது சொன்னால் தான் சரி.

**✉ தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் எப்படி?**
*-ரகுமான்கான் - நிந்தவூர்.*

பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாக தென்னாபிரிக்கா கிரிக்கெட்டில் இருந்து ஒதுங்கி இருந்த அதே வேளை, குண்டுச் சத்தங்கள் ஒரு புறமும், பாதுகாப்பு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் திருப்திகரமாக இடம்பெற்றுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது.

**✉ சிந்தியா செல்போன் உபயோகிக்கிறீர்களா?**
*- பர்சான் - சரிக்கமுள்ள.*

அடையாள அட்டைக்கு அடுத்தபடியாக அத்தியாவசியப் பொருளாகி விட்டது. தவிர்க்க முடியவில்லை.

**✉ சுனாமி விட்டுச் சென்ற தடயம் ஏதாவது உங்களிடம் உண்டா?**
*- சம்சபாத் பீவி - பேருவளை.*

ஆம்.
ஏய் அலையே!
தரையின் தலையில் அடித்து
சத்தியம் செய்கின்றாய்
என்று தான் நினைத்தோம்.
இல்லை...
எங்களை இழுத்துச் செல்ல
நீ பார்த்த ஒத்திகை
என்று புரிந்து கொண்டோம்
என்ற தாமரை மகனின் வைர வரிகள்தான் ஞாபகத்தில் வருகின்றது.

**✉ நீங்கள் கடைசியாக வாசித்த புத்தகம் எது?**
*- சிவப்பிரியா - கொட்டாஞ்சேனை.*

சுசி ஜெயகரன் எழுதிய "மூதாதையரைத் தேடி" எனும் நூல். நாம் வரலாறுகளை வாசித்திருப்போம். ஆனால் மனிதகுல உருவாக்கத்தின் வரலாற்றினையே இந்நூலில் ஆதாரங்களுடன் பதிவு செய்திருக்கின்றார்.

**✉ நவக்கிரகத்தில் இருந்து புளூட்டோவை தூக்கிவிட்டார்களாமே? என்ன அநியாயம்?**
*- சரஸ்வதி - கல்குடா.*

அது நீங்களோ நானோ எடுத்த முடிவு இல்லை. 2,500 உலகளாவிய விஞ்ஞானிகள் ஒன்று கூடி 70 ஆண்டுகளாக அவதானித்த பின்னர் எடுத்த முடிவு. 'இயற்கை மாற்றங்களில் இது சாதாரண விடயம்' என புளூட்டோவை கண்டு பிடித்தவரின் மனைவியே கூறியுள்ளார்.

**✉ செஞ்சோலை...?**
*ப.ரதன் - குருமண்காடு.*

புறொய்லர் கோழி.

**✉ 'இம்சை அரசன் 23ஆம் புலிகேசி' எத்தனை தடவைகள் பார்த்து விட்டீர்கள்?**
*றிஸ்வானா - மல்வானை*

இம்சை அரசன் முதலாம் புலிகேசியே பங்கரை விட்டு வருகிறார் இல்லை. இதில் நீங்கள் வேறு.

**✉ துன்பத்திலும் சிரிக்கக் கூடிய ஜோக் பிளீஸ்?**
*- பிரியா - கொட்டாஞ்சேனை.*

இப்போதைக்கு மேலே உள்ள பதிலை மட்டும் பார்க்கவும்.

**✉ வேட்டையாடு விளையாடு. ஒரே வரியில் விமர்சிக் கவும்.**
*- ராதா - கண்டி.*

"பார்த்த முதல் நாளே" பாடல் இன்னமும் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

**✉ சிந்தியா அமரர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை நடந்து எட்டு மாதம் கடந்து விட்ட நிலையில் இப்போது விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட்டிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்?**
*- ஐ. கேதீஸ்வரன் - மட்டக்களப்பு.*

ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுவதில் நம்பிக்கைகள் இழக்கப்பட்டுள்ளன. இதற்குப் பிரதான காரணம் குற்றவாளிகள் அரச கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குள் போய் ஒளிந்து கொள்கின்றனர். உண்மை என்னவென்றால் விசாரணை ஒரு பக்கம், குற்றவாளி ஒருபக்கம் இருப்பதுதான். ஆணைக் குழுக்கள் நம்பிக்கை இழக்காமல் என்ன செய்யமுடியும்.

**✉ வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு அலகு என்றால் அந்த அலகை எப்படி அழைக்கலாம்?**
*- ஆர். வஷ்ணி - திருமலை.*


இந்தியாவில் தமிழ் நாடு போல் நாம் "தாயகம்" எனலாம். ஈழம் என்றும் சொல்லலாம், பெயர் அல்ல பிரச்சினை. ஆட்சியாரிடம் - பயங்கரவாதத்திடமா? ஜனநாயகத்திடமா என்பதுதான்.

**✉ கொழும்பில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு இருப்பதாகச் சொல்கிறார்களே. நான் வருவதென்றால் என்ன முன் ஆயத்தம் செய்யவேண்டும்?**
*- எம். இந்திரன் - வவுனியா.*

அடையாளப்படுத்தக் கூடிய ஆவணங்கள் இருந்தால் போதும். பிடிபட்டால் எடுத்து விடுவார் என்று யாரிடமும் பணம் கொடுத்து ஏமாறாத புத்தி சாதுரியமும் கொஞ்சூண்டு இருப்பது நல்லது.

**✉ சச்சினின் வருடாந்த வருமானம் 61.15 கோடியாமே. சிந்தியாவின் வருடாந்த வருமானம் அதிலிருந்து எத்தனை வீதம்?**
*- நுஷ்ரா - கந்தானை.*

தற்கொலைக்கு ஒப்பான கேள்விகளை இனிமேல் கேட்காதீர்கள்.




## இலக்கிய நயம்


# மனதில் எழுந்த ஒலி

### தருவது கற்பகன்

விக்கிரமன் குரல் கொடுத்ததும், மரகதவல்லி அங்கயற்கண்ணியின் முகத்தைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் இழையோடிய தாபம் அவள் உள்ளத்தில் மட்டுமல்ல, முகத்திலும் பிரதிபலிப்பதைக் கண்ட அங்கயற்கண்ணி, மரகதவல்லியின் கையைப் பற்றியவாறு "என்ன யோசிக்கிறீர்கள், தனியாக விட்டுவிட்டுப் போகிறேன் என்றா? அந்தக் கவலையே தேவையில்லை. நான் இனிமேல் உங்களோடுதான் இருக்கப்போகிறேன்" என்றதும் மரகதவல்லியின் முகத்தில் தோன்றிய பூரிப்புக்கு அளவே இல்லை. அந்த மகிழ்ச்சியில் அங்கயற்கண்ணியின் இரு கைகளையும் பற்றிக் கொண்டு கேட்டாள். "என்னை ஏமாற்ற மாட்டீர்களே?" என்றதும் "நிச்சயமாக இல்லை. ஆனால் எனக்கொரு உதவி செய்ய வேண்டும் செய்வீர்களா?" என்று அங்கயற்கண்ணி கேட்டதும், மரகதவல்லியின் புருவங்கள் இரண்டும் ஒருமுறை உயர்ந்து பதிந்தன. அது 'என்ன உதவி செய்யவேண்டும்' என்பது போலிருந்தது. "பெரிதாக ஒன்றுமில்லை. இனிமேல் என்னை நீ, என்று ஒருமையில் கூப்பிடவேண்டும். நீங்கள் என்று எனக்கு மரியாதை தருவதெல்லாம் இன்றோடு நிற்கவேண்டும் சரிதானே?" என்றாள் அங்கயற்கண்ணி. இதைக் கேட்டதும், "போடி நீ மிகவும் கிண்டல் செய்கிறாய்! வா போகலாம்" என்று அவளை அழைத்துக் கொண்டு வரவேற்பு மண்டபத்தை நோக்கி நடந்தாள் மரகதவல்லி.

மண்டபத்தை அடைந்த இருவரையும் கண்ட விக்கிரமனுக்கு அவனது கண்களையே நம்ப முடியவில்லை. என்ன இவர்களுக்குள் இத்தனை பிணைப்பா? என்ற கேள்வி தோன்றி மறைவதற்குள், "அண்ணா! நான் இங்கேயே இருந்து விடுகிறேனே?" என்றதும், விக்கிரமனுக்கு ஏற்பட்ட வியப்பு மேலும் ஒருபடி உயர்ந்து அதிர்ச்சியாகியது. அவனால் எதுவும் கூறமுடியாது வாயடைத்து நின்று விட்டான். இதைக் கேட்டதும் மரகதவல்லியின் தந்தைக்கோ எதுவுமே புரியாத புதிராகி விட்டது. அவர் விக்கிரமனின் முகத்தை ஏறிட்டார். விக்கிரமன் பதிலுக்கு விசமத்தனமானதோர் புன்னகையை உதிர்ந்தவாறு "இந்தப் பெண்களே இப்படித்தான். பேச்சுக் கிடைத்து விட்டால் உறக்கத்தைக் கூட மறந்து விடுவார்கள். அத்தனையும் வெட்டி" என்றதும், "ஆமாம், உனக்குப் பெண்களையே பிடிக்காதே, அவர்கள் பேச்சு மட்டும் பிடிக்கப் போகிறதா என்ன?" என்று துடுக்காகக் கேட்டுவிட்டாள். இதைப் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டுமிருந்த மரகதவல்லிக்கு, அண்ணன் தங்கையின் உரையாடலில் உள்ள பாச உணர்வின் நெருக்கத்தையும் வியக்காமலிருக்கமுடியவில்லை.

அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த பெரியவருக்கு இப்படியொரு நெருக்கமான உறவு முறை இந்த மாளிகையிலும், ஏற்பட்டுவிட்டால்



எத்தகையதொரு நிம்மதி கிடைக்கும் என்ற எண்ணமே தலைதூக்கியது.

இந்த நிலையில் விக்கிரமன் "விளையாடியது போதும். வா போகலாம்" என்று அவன் தங்கை அங்கயற்கண்ணியை அழைத்தபோது, அவள் "நான் வரவில்லை" என்று அடம்பிடித்தாள்.

இதைக் கேட்டதும் மரகதவல்லியின் முகத்தைப் பார்த்தான் விக்கிரமன். அந்தப் பார்வை "நீதான் இவளை நிற்கும்படி சொல்லிவிட்டாய் போலும்" என்பது போலிருந்தது. மரகதவல்லியின் கண்கள் அவன் முகத்தை ஆராய்ந்தது. அந்தப் பார்வையில் என்றுமில்லாதவாறு ஒரு கொஞ்சலும், கெஞ்சலும் இழையோடி இருந்ததை விக்கிரமன் கவனிக்கத் தவறவில்லை. அங்கயற்கண்ணியின் பிடிவாதக்குணம் ஏற்கனவே அவனுக்குப் பழக்கப்பட்டதாகையால் அவள் முடிவை மாற்றமுடியாது என்பதை அவன் அறிவான். ஆயினும் மரகதவல்லியின் கண்கள் விடுத்த வேண்டுகோளை அவனால் மறுக்க முடியாததுதான் முதலிடத்தில் இருந்தது. இவைகளால் அவன் ஒரு முடிவுக்கு வரமுடியாதிருந்ததால் அங்கே நிசப்தம் நிலவியது.

இவைகளையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த மரகதவல்லியின் தந்தை, "ஏது அண்ணனும், தங்கையும் ஒரு முடிவுக்கு வருவதற்கிடையில் நள்ளிரவு தாண்டிவிடும் போலிருக்கிறதே" என்றவர், விக்கிரமனைப் பார்த்து "இளவரசரே! உங்கள் தங்கை தானே. ஏதோ ஆசைப்படுகிறாள். இன்று இரவுக்கு இங்கேயே தங்கிவிட்டுப் போவதில் ஏதும் பெரிதாக ஆகப் போவதில்லையே?" என்றதும், விக்கிரமன் அவரை நோக்கி "எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை. நாளை இவளை இங்கிருந்து அழைத்துப் போகவும் நான் தானே வரவேண்டியிருக்கும்" என்றதும், அங்கயற்கண்ணி குறுக்கிட்டாள்.

"நீ மட்டும் இந்த நள்ளிரவில் அங்கு சென்று எதை வெட்டி முறிக்கப்போகிறாய்? நீயும் நாளைவரை இங்கேயே இருந்துவிடேன். அப்படியென்றால் உனக்கும் சிரமம் இருக்காது" என்றதும், விக்கிரமன் "அதெல்லாம் எனக்குச் சரிப்பட்டுவராது. நான் இதுவரை என் கட்டிலை விட வேறு எதிலும் தூங்கியதில்லை. பாசறையில் கூட எனக்குத் தனி இடந்தான்" என்று அவசரமாகக் கூறி முடித்தான்.

இதைக் கேட்டதும் அங்கயற்கண்ணி "இன்னும் எத்தனை காலத்துக்கு இப்படியே இருக்கிறதாம்?" என்றாள் கிண்டலாக.

"ஏன்? முடியும்வரைதான்" என்றான் விக்கிரமன்.

"எது முடியும்வரை" திருமணமா? என்று அங்கயற்கண்ணி கேட்டதும், திடீரென்று அவளிடம் சென்ற விக்கிரமன், அவளது காதைத் திருகியவாறு கேட்டான். "உனக்கு வரவர கிண்டல் அதிகமாகி விட்டது. உன்னை ஒரு முரட்டு வீரன் கையில் கொடுத்தால்தான் உனக்குப் புத்திவரும்" என்று கூறியதும், ஒருவழியாகத் தன்னை விடுவித்துக்கொண்ட அங்கயற்கண்ணி, "அதை அப்போது பார்க்கலாம்" என்றாள். இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பெரியவர், "இளவரசரே! உங்கள் இருவரின் சண்டையில் நேரம் போவதே தெரியவில்லை. இரவு இரண்டாம் ஜாமத்தைத் தாண்டிவிட்டது. நீங்கள் இங்கேயே தங்கிவிடலாமே! இப்பெரிய மாளிகையில் தங்களுக்குப் படுக்கக்கூடவா இடமில்லை?" என்றதும், எல்லோருமே சிரித்துவிட்டார்கள். அந்தச் சிரிப்பொலி அடங்க வெகுநேரம் பிடித்தது. அது மரகதவல்லியின் இதயத்திலெழுந்த மகிழ்ச்சி ஒலி தானோ? அல்லது விக்கிரமனின் மனதில் எழுந்த ஒலியோ? யாரறிவார்?.

*"காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு நல்லாண்மை என்னும் புணை"*

அதிகாரம்: 114.
குறள்: 1134.

## இடம் பெயர்ந்தவர்களின்...
## 05 ஆம் பக்கத் தொடர்ச்சி....

தாக்குதல்களைத் தொடர்ந்து 4365 குடும்பங்களைச் சேர்ந்த 16786 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்கள் போரைதீவுப்பற்று, கோரளைப்பற்று வடக்கு, மண்முனை மேற்கு, வவுணதீவு, போரதீவுப்பற்று - வெள்ளாவெளி, கோரளைப்பற்று, கிரான், களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேசப் பிரிவுகளிலிருந்து இடம் பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களாக இருக்கும் 1284 குடும்பங்களைச் சேர்ந்த 47835 பேருக்கான உலர் உணவு மற்றும் அத்தியாவசியத் தேவைகளை உலக உணவுத்திட்டத்துடன் இணைந்து அரசு செய்து வருகிறது. இவர்களுக்கான தங்குமிட வசதிகள் போதுமானதாக இல்லாததாலும், பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாலும், அவசரமாக 100 X 18 அடிகள் நீளமான 20 தற்காலிகத் தங்குமிடங்களை அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கென அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு 2.254 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளதாக மட்டக்களப்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. இந்த வேலைகளைக் கவனித்துவரும் திட்டத் தயாரிப்பாளரின் பணியும் இந்த வேளையில் குறிப்பிடத்தக்கதாகும்.

வடக்கைப் பொறுத்தவரை வன்னியில் மக்களின் இடம் பெயர்வுகள் தொடர்பான சரியான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. இதுவரை கிடைத்த தரவுகளின்படி வடமராட்சி கிழக்கு, பளை, பூநகரி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலிருந்து பெருமளவிலானவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இதன்படி பச்சிளைப்பள்ளியிலிருந்து 3095 குடும்பங்களும், வடமராட்சி கிழக்கிலிருந்து 2336பேரும், பூநகரியிலிருந்து 2113 குடும்பங்களுமாக சுமார் 32175 பேர் அகதிகளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களோடு அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து சென்ற 5000 பேரும் அகதிகளாகியுள்ளனர்.

இந்த மக்களுக்கான உணவு, நிவாரண உதவிகள் கிடைப்பதில் தடைகளும் தாமதங்களும் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதிகளிலிருந்து அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் வெளியேறியுள்ளமையும், புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் தொடரும் மோதல்களும், ஏ-9 வீதி மூடப்பட்டுள்ளதும் காரணங்களாக இருக்கின்றன. யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருட்கள் போவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வழித்துணை வழங்கியது போல, வன்னிப் பகுதி மக்களுக்கும் நிவாரணப் பொருட்கள் கிடைக்க வேண்டுமென கோரிக்கைகளும், அழுத்தங்களும் விடுக்கப்பட்டு வருகின்றன. இவர்களில் பெரும்பாலானவர்கள், விமானத் தாக்குதல் அச்சம் காரணமாகவே இடம் பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர். ஆனால் இதுவரை விமானத் தாக்குதல்களினால் பொதுமக்களின் குடியிருப்புகள் தாக்கப்பட்டதாக எவ்விதத் தகவல்களும் இல்லை. புலிகளின் அச்சமூட்டும் செயற்பாடுகளே இடப்பெயர்வுக்குப் பெரும் காரணமாக அமைந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன் அரங்குகளை அண்டிய பகுதிகளில் தொடரும் மோதல்களும், இருதரப்பும் நடத்தும் எறிகணை வீச்சுக்களுமே அப்பகுதி மக்களின் இடப்பெயர்வுக்குக் காரணமாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தில், வரணி, உசன், கச்சாய், கொடிகாமம், மிருசுவில் ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் கரவெட்டியில் உள்ளனர். இவர்கள் 466 குடும்பங்களைச் சேர்ந்த 1875 பேர். யாழ்ப்பாணம் கரையோரப் பகுதிகளிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பாஷையூர், குருநகர், கொழும்புத்துறை மக்கள் இடம்பெயர்ந்து ஒஸ்மானியாக் கல்லூரியில் 85 குடும்பங்களைச் சேர்ந்த 350 பேரும், கதீஜா முஸ்லிம் பெண்கள் கல்லூரியில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 170 பேரும், கொட்டடி வில்லூன்றிப் பிள்ளையார் கோயில் வளாகத்தில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 138 பேரும், யாழ்.லேடன் பெக்டரியில் 40 குடும்பங்களைச் சேர்ந்த 188 பேரும் தங்கியுள்ளனர். இதேபோல் தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் ஊர்காவற்றுறை தேவ மாதா ஆலயத்தில் 245 குடும்பத்தைச் சேர்ந்த 850 பேரும், காரைநகர் இளைஞர் சேவை மன்றத்தில் 54 குடும்பத்தைச் சேர்ந்த 207 பேரும், நாரந்தனை சம்பேதுருவானர் ஆலயத்தில் 53 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேரும் வேலணையில் 110 குடும்பங்களைச் சேர்ந்த 330 பேரும், தங்கியுள்ளனர். இது தவிர, தாக்குதல் அச்சம் காரணமாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் இடம் பெயர்ந்தவர்கள், யாழ் கொஞ்சேஞ்சி மாதா தேவாலயம், சென்.பற்றிக் கல்லூரி, புனித அன்னம்மாள் தேவாலயம், அரியாலை பார்வதி வித்தியாசாலை, மருதனார்மடம் பெண்கள் கல்லூரி ஆகியவற்றில் தங்கியுள்ளனர். அந்த விபரங்கள் கிடைக்கவில்லை. இவர்களில் 1800 குடும்பங்களைச் சேர்ந்த 8033 பேர் தங்கியுள்ளனர். இது தவிரவும், நல்லூரில் 88 குடும்பங்களைச் சேர்ந்த 336 பேரும், சாவகச்சேரியில் 361 குடும்பங்களைச் சேர்ந்த 1418 பேரும், உடுவிலில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேரும் அகதிகளாகத் தங்கியுள்ளனர். யாழ் அரச அதிபரின் தகவலின்படி 3142 குடும்பங்களைச் சேர்ந்த 13099 பேர் இடம் பெயர்ந்திருப்பதாகவே தெரிவிக்கப்பட்டது.

திருமலை மாவட்டத்துக்கும், மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் நிவாரணப் பொருட்கள் தரைப்பாதை ஊடாக பார ஊர்திகளில் கொண்டு செல்லக்கூடிய வசதிகள் உள்ளன. இவ்வாறு மட்டக்களப்பிலிருந்து வாகரை, கதிரவெளி அகதிகளுக்காக 32 பார ஊர்திகளில் அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்களில் 7 பார ஊர்திகளில் பொருட்களை புலிகள் கடத்திச் சென்றதாக தகவல்கள் தெரிவித்தன. யாழ்ப்பாணத்துக்கான தரைப் பாதை மூடப்பட்டதாலும், பலாலி விமான ஓடுபாதைப் பகுதியை நோக்கிப் புலிகள் எறிகணை வீச்சுக்களை தொடர்ந்து நடத்தியதாலும் 11.08.06 அன்று யாழ்ப்பாணத்தில் மோதல்கள் ஆரம்பமாகியதன் பின்னர் யாழ்ப்பாணத்துடனான சகல தொடர்புகளும் தடைப்பட்டன. இதற்கிடையே யாழ்ப்பாண எரிபொருள் தேவைக்காக கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட 17 எரிபொருள் தாங்கிகளையும் புலிகள் வன்னியில் வைத்து அபகரித்துக் கொண்டதோடு சாரதியையும், நடத்துனரையும் திருப்பி அனுப்பிவைத்தனர். இதற்குப் பிறகு 22.08.06. அன்று 1500 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு 'எம்.வீ. மேக்ஸ் றுகுனு' என்ற கப்பல், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணையோடு யாழ்ப்பாணத்துக்குச் சென்றது. இந்தப் பயணம் 19.08.06ஆம் திகதி ஆயத்தப்படுத்தப்பட்டபோதும், காலநிலை சீரின்மையும், புலிகளிடமிருந்து செய்தி வரும் வரை காத்திருந்ததும் காரணமாகத் தாமதப்பட்டது. பின்னர் 21.08.06 அன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கொழும்பு துறைமுகத்துக்கு நேரடியாகச் சென்று பொருட்கள் ஏற்றப்படுவதைப் பார்வையிட்டு பயணத்தை உறுதிப்படுத்தினர்.

இவ்வாறு சென்ற கப்பல் 25.08.06 அன்று காங்கேசன்துறை துறைமுகத்தை சென்றடைந்தது. பின்னர் அதே கப்பலில் அவசரப் பயணத்தை கொழும்புக்கு மேற்கொள்ளவிருந்த 161 பயணிகளுடன், திருமலைக்கு வந்து சேர்ந்தது. இதைத் தொடர்ந்து அவசர மனிதாபிமான அடிப்படையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வரப் பதிவு செய்தவர்களை அழைத்துவருவதற்காக 26.08.06 அன்று ஐ.சீ.ஆர்.சீ., சேருவில - II என்ற பயணிகள் கப்பலை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு சென்றது.

இப்போது யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுவதாகக் கூறப்பட்ட 3800 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களின் மிகுதியான 2300 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கிடையே திருமலையிலிருந்து இடம்பெயர்ந்து வாகரை, கதிரவெளிப் பகுதிகளில் தங்கியுள்ள சுமார் 20000 பேருக்கு மாத்திரமே அரசு உணவுப் பொருள் வழங்குவதாகவும், ஏனையோருக்கு எந்த உதவியும் வழங்கப்படுவதில்லை என்றும் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஆனால் இந்தக் குற்றச்சாட்டை திருமலை, மட்டக்களப்பு அரச அதிகாரிகளும், அனர்த்த நிவாரண அமைச்சகமும் நிராகரிப்பதோடு இடம் பெயர்ந்த அனைவருக்கும் நிவாரணப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், அரசு பாரபட்சமற்ற வகையில் உதவிகளைச் செய்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

இருந்தாலும் இடம் பெயர்ந்த மக்களின் உடனடித் தேவைகள் தீர்க்கப்பட்ட நிலையில் இப்போது தேவைகள் அதிகரிப்பதாகத் தெரிவிக்கின்றனர். முதலில் ஓடி வந்த மக்களுக்கு உணவு, உடை அவசியமாக இருந்தது. இப்போது தனியான தங்குமிடம், சமைக்கும் வசதிகள் தேவைப்படுகிறது. இப்படி ஒன்று சரி செய்யப்படுகின்றபோது இன்னொரு தேவை ஏற்படுகிறது. ஆகையால் மக்களைப் பொறுத்தவரை திருப்தியான நிலையைக் காண முடியவில்லை என்று சில அரச அதிகாரிகள் கூறுகின்றனர்.

மக்களைப் பொறுத்தவரை அவர்கள் மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்வதற்கு அஞ்சுகின்றனர். தாக்குதல்கள் ஓயாமல் மக்களை மீளக்குடியமர்த்துவது சரியான முடிவாக இருக்காது. இது தவிரவும், மக்களின் பாதுகாப்பு உத்தரவாதத்தை உறுதி செய்ய வேண்டும். மக்கள், யுத்தம் நடைபெறக் கூடிய பகுதிகளிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்குப் போக எத்தகைய தடையும் விதிப்பது மனித உரிமை மீறலாகும். நிவாரண உதவிகள் கிரமமாகக் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

மக்களின் இயல்பு வாழ்வை, தெரிந்தே சீர்குலைத்தவர்களிடம் மக்களைப் பாதுகாக்கும் படி கேட்க முடியாது. ஆகவே மக்களை கவசமாகவோ, அரணாகவோ பாவிப்பதையும், மக்களின் மரணங்களை வெளிக்காட்டி அதனூடாகப் போர் இலாபம் பெற முயற்சிப்பதையும் வன்மையாகக் கண்டிக்க சர்வதேச மனித உரிமை ஆர்வலர்கள் முன்வர வேண்டும்.

⬭

# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## வெற்றிவாகை சூடிய இந்தியா!

**தெ**ற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை இந்தியா தட்டிச் சென்றுள்ளது. மொத்தம் 118 தங்கப்பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் இந்தியா முதலிடம் பிடித்தது.

பத்தாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் கொழும்பில் கடந்த 18ஆம் திகதி தொடங்கின. பத்து நாட்களாக நடைபெற்ற போட்டிகள் 28ஆம் திகதி நிறைவடைந்தன. பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்த இந்தியாவுக்கு, ஒட்டு மொத்த சாம்பியன் கோப்பையை இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்கா வழங்க,



இந்தியா சார்பாக 'செப் டி மிஷன்' ரங்கில் சிங் இதனைப் பெற்றுக் கொண்டார்.

இவ்விருதுக்கான கோப்பை கோலாகலமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இசை, நடன கலைஞர்கள் புடை சூழ பல்லக்கில் அமர்ந்து கொண்டு இலங்கை பிரபல நடிகை யசோதா, விருதை மேடைக்கு ஏந்தி வந்தார்.

இது பற்றி இலங்கை ஒலிம்பிக் கமிட்டித் தலைவர் ஹேமாஸ்ரீ பெர்னாண்டோ கூறுகையில், "ஒலிம்பிக், காமன்வெல்த் போட்டிகளில் சாம்பியன் பட்டம் வெல்லும் நாட்டிற்கு விருதுகள் எதுவும் தனியாக வழங்கப்படுவதில்லை. ஆனால் இம்முறை ஸ்பொன்சர்கள் இவ்விருதை வழங்க முடிவு செய்தனர். அவர்களது முயற்சியினால் தான் இது சாத்தியமானது. குண்டு வெடிப்புகளுக்கு மத்தியிலும் போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பித்த நாடுகளுக்கு இலங்கை சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம், என்றார்.

**மறக்க முடியாது:**

இந்தியா ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் வென்றது பற்றி ரங்கில் சிங் கூறுகையில், "சாம்பியன் பட்டத்திற்கு விருது வழங்கப்பட்டது எதிர்பாராதது. ஆனால் இது மிகவும் 'ஸ்பெஷல்'. இதனால் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை இந்திய அணியினர் அனைவரும் தங்கள் வாழ்நாளில் மறக்க மாட்டார்கள்" என்றார்.

இது தவிர தங்கப்பதக்கம் வென்ற வீரர், வீராங்கனைகளுக்கு நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

நிறைவு விழாவில் கலந்து கொண்ட பாகிஸ்தானின் 'செப் டி மிஷன் கூறுகையில், 'சார்க்' கூட்டமைப்பு நாடுகளின் வீரர், வீராங்கனைகள் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ள தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மட்டுமே ஒரே வாய்ப்பாக உள்ளது. இதன் மூலம் நாடுகளிடையே நட்புணர்வு வளரும் என்றார்.

எட்டு நாடுகள் கலந்து கொண்ட போட்டிகளில் இந்தியா தனது அசுர பலத்தைக் காட்டி, பதக்கங்களை அள்ளியுள்ளது.

இந்தியா தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் வென்றுள்ள அதிக பட்ச தங்கப்பதக்கங்கள் (118) இதுவே. இதற்கு முன்பு 2004இல் இஸ்லாமாபாத்தில் நடந்த போட்டிகளில் இந்தியா 103 தங்கப் பதக்கம் வென்றிருந்ததே சாதனையாக இருந்தது.

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| இந்தியா | 118 | 69 | 47 |
| பாகிஸ்தான் | 43 | 44 | 71 |
| இலங்கை | 37 | 63 | 78 |
| நேபாளம் | 9 | 14 | 31 |
| ஆப்கானிஸ்தான் | 6 | 7 | 18 |
| வங்காளதேசம் | 3 | 15 | 32 |
| பூட்டான் | 0 | 13 | 0 |
| மாலைத்தீவு | 0 | 0 | 0 |

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 6, கூட்டெண் - 8

6,15,24 போன்ற தேதியில் பிறந்து தேதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 8 வருமேயானால் இவர்கள் சுக்கிரன், சனி ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

இவர்கள் பார்ப்பதற்கு சுமாரான உயரத்துடனும், சிறிது மிகுந்த சிவந்த கண்களுடனும் காட்சியளிப்பர். எந்தப் பொருளையும் உன்னிப்பாகக் கவனிப்பர். கடுமையாக முயன்று வெற்றி பெறுவதே இவர்கள் இலட்சியம். போக விஷயங்களில் அதிக நாட்டமுடைய இவர்கள் தமக்குத் தீங்கு விளைவிக்கும் எனத் தெரிந்தவுடன் அதைக் குறைத்துக் கொள்வர். கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்கள் தங்களுடைய கடுமையான உழைப்பால்தான் உயரமுடியும் எனக்கூறுவர். இவர்கள் மனம், மோட்டார் எலக்ட்ரிக் சாதனங்கள், கவிதை, கதை, ஆடம்பரப் பொருட்கள் ஆகியவற்றில் லயிக்கும், இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர், இளமையிலேயே வசதி படைத்தவர்களாக இருந்தாலும், பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் தமது தனித்தன்மையால் உயர்வர்.

ஆனால் பெயர் பொருத்தமின்றி இருக்குமேயானால் இவர்களது வாழ்வில் அடிக்கடி தோல்வியைச் சந்திக்க நேரிடும். உலகத்திலுள்ள அனைத்து விஷயங்களையும் தெரிந்து வைத்திருக்கும் இவர்கள் எப்போதும் எதையாவது செய்து கொண்டேயிருப்பர். தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவுவதாலும் தம் தகுதியை உயர்த்திக்கொள்வர். இவர்களுக்குப் பெயர் மட்டும் பொருத்தமானதாக அமைந்து விடுமேயானால் தாம் வகிக்கின்ற உத்தியோகத்திலோ, அல்லது தாம் செய்யும் தொழிலிலோ உயர்ந்த நிலையை அடைவர்.

மறைத்துப் பேசத் தெரியாத இவர்கள் எதையும் பகிரங்கமாக வெளியிடுவர். இவர்களுடைய மனம் வரலாற்றுப் புகழ்பெற்ற இடங்களைப் பார்ப்பதிலும், பெரிய தொழிற்கூடங்களைக் கண்டு களிப்பதிலும் ஆர்வம் காட்டும். இவர்களுடைய பிறந்த தேதிக்குப் பொருத்தமான பெயர் அமைந்துவிட்டால், நல்ல ஆரோக்கியம், நல்ல வாழ்க்கைத் துணை, நல்ல குழந்தைகள், நல்ல செல்வம் பெற்று வாழ்வர். ஆனால் பிறந்த தேதிக்குப் பொருத்தமற்ற பெயர் அமைந்துவிட்டால் வீண் குழப்பங்களும், விரயச் செலவுகளும் வந்து எதிர் நிற்கும். பிறருக்காக ஒரு பிரச்சினையில் இறங்கும் போது துணிவாகச் செயல்படுவர். ஆனால் தனக்கென்று வரும்போது மிக அமைதியாகச் செயல்படுவர். இவர்களிடம் யோசனை கேட்பதற்குப் பலர் வருவர்.

சட்டம், சமயம், மருத்துவம், கணிதம் போன்றவற்றில் ஆராய்ச்சி இருக்கும். இவர்கள் எத்துறையில் இறங்கினாலும் சிறப்பான முன்னேற்றத்தைப் பெறும் வாய்ப்புள்ளது. ஆனால் பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமற்ற பெயராக இருக்குமேயானால் முன்னேற்றம் தடைப்படும். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களில், உத்தியோகம் பார்ப்பவர்கள் சிலர். ஆனால் தொழில் செய்பவர்கள் பலர். வாகனம் ஓட்டுவதிலும், வாகனத்தை அலங்கரித்து வைத்துக் கொள்வதிலும் ஆர்வம் உடையவர்களாக இருப்பர். தூர தேசப் பயணங்கள் மேற்கொள்வதில் ஆர்வம் காட்டும் இவர்கள், தாம் செய்கின்ற பயணம் எதிர்காலத்தில் நல்ல வருவாய்க்கு வழிகாட்டவேண்டும் என எண்ணுவர். பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்களுக்குப் பொருத்தமான பெயர் அமைந்துவிட்டால் படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவர்.

***தொழில்***

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு இரும்பு சம்பந்தப்பட்ட, நெருப்பு சம்பந்தப்பட்ட அனைத்து தொழிலும் சிறந்தவையே. மேலும் ஆடம்பரப் பொருட்களாலும், கமிஷன், காண்ட்ராக்ட், ஏஜென்ஸீஸ் போன்றவற்றாலும் லாபம் பெறுவர்.

***நோய்***

சுக்கிரன், சனி ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு வயிற்றுக் கோளாறு, மலச்சிக்கல், உஷ்ண சம்பந்தப்பட்ட நோய், மூட்டுவலி, இரத்தக்கொதிப்பு போன்றவைகள் வந்து நீங்கும்.

***பெயர் அமைக்கும் முறை***

சுக்கிரன், சனி ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு சுக்கிரன், புதன், சூரியன் ஆதிக்கமான 15, 24, 33, 42,51, 60, 69, 14, 23, 32, 41, 50, 59, 19, 37, 46, 64 போன்ற எண்களில் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை.**

| | |
|---|---|
| யோகமான எண் - | 6,5,1. |
| யோகமான தேதிகள் - | 6,15,24,5,14,23. |
| யோகமான நிறம் - | நீலம், பச்சை, மஞ்சள். |
| யோகமான மோதிரக்கல் - | மரகதம், நீலக்கல். |
| ஆகாத தேதிகள் - | 3,12,21,30. |
| ஆகாத நிறம் - | கறுப்பு, சிவப்பு, ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பு நிறம். |

அடுத்த வாரம் பிறப்பெண் 6, கூட்டெண் 9 பற்றிப் பார்ப்போம்.

# ரெனே டேக்கார்ட்டே (- 1596 - 1650 நூற்றாண்டு)

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

டேக்கார்ட்டே தமது கொள்கையைக் கூறுவதற்குத் தொடங்கும் முறைதான் அவரது கொள்கையின் மிகச் சுவையூட்டும் பகுதியாகும். ஏராளமான தவறான கொள்கைகள் பொதுவாக ஏற்றுக்கொண்டிருப்பதைக் கருத்தில் கொண்டு உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு முதலிலிருந்தே தாம் புதிதாகத் தொடங்க வேண்டும் என முடிவு செய்தார். எனவே, எல்லாவற்றின் மீதும் தமது ஆசிரியர்கள் கற்பித்த அனைத்தின் மீதும், தாம் போற்றிப் பேணிய நம்பிக்கைகள் அனைத்தின் மீதும், தமது பொது அறிவுக் கொள்ளைகள் எல்லாவற்றின் மீதும் - புற உலகம் இருப்பதைக் கூட ஏன், தாம் வாழ்ந்திருப்பதைக் கூட ஐயுறுகிற முறையில் இவர் தமது ஆய்வினைத் தொடங்குகிறார்.

இந்த முறையினால், ஒரு சிக்கல் எழுகிறது. எல்லாவற்யையும் பற்றிய ஐயப்பாட்டினை வெற்றி கொண்டு அவை பற்றிய நம்பகமான அறிவைப் பெறுவது எவ்வாறு? டேக்கார்ட்டே மதி நுட்பம் வாய்ந்த மெய்விளக்க வாதங்களை அடுக்கடுக்காகக் கூறி, தாம் உயிர் வாழ்வதைத் தமக்கு மன நிறைவளிக்கும் வகையில் மெய்ப் பித்துக் காட்டினார். ("ஆகவே நான் நானாக இருப்பதாகக் கருதுகிறேன்") அதேபோன்று இறைவன் இருக்கின்றான் என்பதையும் மெய்ப்பித்தார். டேக்கார்ட்டே கோட்பாட்டுக்கு இவை தொடக்கமாக அமைந்தன.

டேக்கார்ட்டேயின் இந்த முறை, இரட்டை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. முதலாவதாக, இவர் அடிப்படையான அறிவாதார வினாவை தமது தத்துவ அமைப்பு முறையின் நடுநாயக பீடத்தில் அமர்த்தி வைக்கிறார். "மனித அறிவு எங்கிருந்து தோன்றியது?" உலகின் இயல்பை விவரித்துக் கூற முந்தையத் தத்துவஞானிகள் முயன்றுள்ளனர். "நான் அவ்வாறு அறிந்து கொள்கிறேன்?" என்ற வினாவுடன் இணைவாக அல்லாமல், இத்தகையதொரு வினாவுக்கு மனநிறைவளிக்கும் வகையில் மறுமொழி கூற இயலாது என டேக்கார்ட்டே நமக்குக் கற்றுத் தந்தார்.

இரண்டாவதாக, "எதையும் 'நம்பிக்கை'யுடன் தொடங்கலாகாது, மாறாக, ஐயுறவுடன் தொடங்க வேண்டும்" என்று டேக்கார்ட்டே உணர்த்துகிறார். (இது புனித அகஸ்டைன் போன்ற மத்திய காலத்து இறைமையியலறிஞர்கள் பெரும்பாலானோரின் மனப்பான்மைக்கு முற்றிலும் எதிர்மாறானதாகும். அவர்கள், "முதலில் நம்பிக்கை கொள்ள வேண்டும்" என வலியுறுத்தினார்கள். இதன் பிறகு, டேக்கார்ட்டே ஏற்றுக் கொள்ளப்பட்ட இறைமையியல் முடிவுகளுக்கே வருகிறார் என்பதும் உண்மைதான். எனினும் இவர் செய்த முடிவுகளைவிட, இவர் கூறிய முறையில் தான் வாசகர்கள் மிகுதியாகக் கவனம் செலுத்துகிறார்கள். (டேக்கார்ட்டேயின் இவ்வகை எழுத்துகள், இறுதியில் சீர்குலைவுக்கு வழிவகுக்கும் எனத் திருச்சபையினர் அஞ்சினர். அவர்களுடைய அச்சம் முற்றிலும் நியாயமானதாகவே இருந்தது.

டேக்கார்ட்டே தமது கோட்பாட்டில், உள்ளத்திற்கும், உலகாயதப் பொருள்களுக்கு மிடையிலான வேறுபாட்டினை வலியுறுத்துகிறார். இந்த வகையில், இவர் விடாப்பிடியான ஓர் இரட்டைக் கொள்கையைப் பரிந்துரைக்கிறார். இந்த வேறுபாடு முன்னதாகவே கூறப்பட்டதுதான் எனினும், இதுபற்றிய ஒரு கோட்பாட்டு' வாதத்தை டேக்கார்ட்டேயின் எழுத்துகள் தூண்டிவிட்டன. அது முதற்கொண்டு இவர் எழுப்பிய வினாக்களைத் தத்துவ அறிஞர்கள் ஆர்வத்துடன் விவாதித்து வருகிறார்கள். இந்த விவாதம் இன்னும் முடிவுறவில்லை.

இயற்பியல் உலகம் பற்றிய டேக்கார்ட்டேயின் கோட்பாடும், பெருஞ் செல்வாக்குப் பெற்றது. இறைவனும் மனித ஆன்மாவும், நீங்கலாக, உலகம் முழுவதும் எந்திர கதியில் இயங்கி வருகின்றது என்றும், ஆகவே இயற்கை நெகிழ்வுகள் அனைத்தையும் எந்திர நுட்பக் காரணங்களால் விளக்கிக் கூற முடியும் என்றும் இவர் நம்பினார். இதே காரணத்திற்காக, சோதிடம், மந்திரம் போன்ற மூட நம்பிக்கைகளை இவர் எதிர்த்தார். அதே போன்று, "இயற்கை நிகழ்ச்சிகளின் காரணகாரியத் தொடர்புகள் தற்செயல் நேர்வுகளல்ல - இறுதி விளைவு நோக்கிய ஒரே மூலத் திட்ட அமைப்பின் கூறுகளே" என்று கூறும் இயல்திட்டவாத (Teleological) விளக்கங்களையும் இவர் தீவிரமாக எதிர்த்தார். டேக்கார்ட்டேயின் கண்ணோட்டத்தில், விலங்குகள் அடிப்படையில் சிக்கலான எந்திரங்களைப் போல் அமைந்துள்ளன. மனித உடலும், வழக்கமான எந்திரவியல் விதிகளுக்கு உட்பட்டதாகவே இருக்கிறது. இக்கொள்கைகள் யாவும் பின்னர் மெய்ப்பிக்கப்பட்டு நவீன உடலியலின் அடிப்படைக் கொள்கைகளாக அமைந்தன.

அறிவியல் ஆராய்ச்சியை டேக்கார்ட்டே ஆதரித்தார். அதன் நடைமுறைப் பயன்பாடுகள் சமுதாயத்திற்கு நன்மை விளைவிக்கும் என நம்பினார். துல்லியமற்ற கோட்பாடுகளை விஞ்ஞானிகள் தவிர்க்க வேண்டும் என்றும், உலகைக் கணிதச் சமன்பாடுகளால் விவரித்துக் கூறுவதற்கு முயலவேண்டும் என்றும் இவர் வலியுறுத்தினார்.

## உலகை வியக்க வைத்தவர்கள்

இவருடைய இந்தக் கொள்கைகள் அனைத்தும் நவீன நோக்குடையனவாக இருந்தன. எனினும், டேக்கார்ட்டே தாமே பல பரிசோதனைகளைச் செய்திருந்த போதிலும், அறிவியல் முறையில் பரிசோதனைகள் செய்வதன் இன்றியமையா முக்கியத்துவத்தை வலியுறுத்தாமல் விட்டு விட்டார்.

புகழ்பெற்ற பிரிட்டிஷ் தத்துவஞானியாகிய ஃபிரான்சிஸ் பேக்கன், அறிவியல் ஆராய்ச்சியின் தேவையினையும் அதனால் கிடைக்கும் நன்மைகளையும் டேக்கார்ட்டேக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே அறிவித்திருந்தார். அதுமட்டுமின்றி, "ஆகவே நான் நானாக இருப்பதாகக் கருதுகிறேன்" என்ற டேக்கார்ட்டேயின் வாதம்கூட, அவருக்குச் சொந்தமானதன்று, அவருக்கு 1200 ஆண்டுகளுக்கு முன்னரே புனித அகஸ்டைன் வேறு விதமாக இதே கருத்தைக் கூறிவிட்டுச் சென்றிருக்கிறார். அதேபோன்று, கடவுள் இருக்கிறார் என்பதற்கு டேக்கார்ட்டே கூறிய சான்றுறுதி (Proof) புனித ஆன்செல்ம் (1033-1109) முதலில் கூறிய மெய்ப்பொருளியல் வாதத்தின் ஒரு மாற்று வடிவமேயாகும்.

வியப்புக்கள் தொடரும்....

# காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



**நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை**
*-காதில பூ கந்தசாமி-*

**வணக்கமுங்கோ!**

தமிழ் நாட்டில ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுக்கிறவையின்ர குரல்கள் அதிகரித்துக் கொண்டு வருகுது. அது சந்தோஷமான விஷயம் தான். அடடே நமக்கொன்று எண்டால் அயல் நாட்டில இருக்கிற தமிழர்களுக்கு மனசு தாங்குதில்லையே எண்டு நினைச்சால் நமக்குப் பின்னால தமிழகம் இருக்கு எண்டொரு மனத்துணிவுதானாகப் பிறக்குதுங்கோ. அந்த வகையில அண்ணன் வைக்கோவை சந்திச்சு நன்றி சொல்ல வேணுமெண்டிட்டுச் சந்திச்சேனுங்கோ. வைக்கோ என்ன சொன்னவர் தெரியுமோ. கீழ படிங்கோவன்.

***வைகோ.*** :- வணக்கம் ஈழத்தமிழா வருக வருக.

**கா.பூ.** :- வணக்கம் தமிழகத் தமிழா

***வைகோ.*** :- என்ன எப்படி இருக்கிறது ஈழம்?

**கா.பூ.** :- ஈழம் நன்றாக இருக்கிறது. நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?

***வைகோ.*** :- இருக்கிறேன்... ஈழத் தமிழர்களுக்காக கடைசிவரை குரல் கொடுத்து வாழ்வது தான் என் லட்சியம்.

**கா.பூ.** :- நீங்கள் குரல் கொடுப்பது தமிழனென்ற உணர்விலா அல்லது...

***வைகோ.*** :- என்ன நீங்கள் கேட்பதைப் பார்த்தால் நான் வேறு எதுக்காகவோ குரல் கொடுப்பதாக நினைக்கிறீர்களோ?

**கா.பூ.** :- கா...கா...சிலர் சொல்கிறார்கள் வைக்கோ புலிகளிடமிருந்து பணம் வேண்டிக் கொண்டுதான் கூலிக்கு மாரடிக்கிறார் என்று பேசிக் கொள்கிறார்கள்.

***வைகோ.*** :- அது அப்பட்டமான வதந்தி. யாரோ என் அரசியல் வாழ்க்கையை சீர் குலைப்பதற்காகச் செய்யும் சூழ்ச்சி. சரி, அப்படித்தான் நான் பணம் வாங்கினாலும் அது ஈழத் தமிழர்களின் பணம் தானே. அதில் இவர்களுக்கு என்ன இருக்கிறது.

**கா.பூ.** :- அப்புடியென்றால் அங்கே வாங்கப்படும் வரி கப்பத்தில் உங்களுக்கும் ஒரு பங்கு இருப்பதாகவும் சொல்கிறார்களே.

***வைகோ.*** :- இது அபத்தம். வைக்கோ மட்டும் தான் பணம் வேண்டுகிறானா. வேறு ஒருவரும் வேண்டவில்லையா. நான் வேண்டுமானால் பெயர்பட்டியலைத் தரட்டுமா. ஒன்றை மட்டும் தான் சொல்வேன். என்னை சீண்டி விட்டுப் பார்க்க நினைத்தால், பலரின் இரகசியங்கள் அம்பலத்துக்கு வரும். பிறகு அது அசிங்கமாகிவிடும்.

வடிவேல் சொன்ன மாதிரி டறியல்... ஆகிவிடுவீர்கள். டறியல்.

**கா.பூ.** :- நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இங்கே ஒரு கூட்டமே கூடித்தான் ஈழத் தமிழர்களின் வாழ்க்கையில் கும்மியடிக்கிறீர்களா.

***வைகோ.*** :- புலிகளுக்குத் தேவை தமிழகத்தில் பிரசாரம்; எங்களுக்குத் தேவை பணம் முடிந்தால் கொஞ்சம் பொலிரிக்ஸ். ஏன் சொல்லுங்கோ தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் மாறிமாறி ஆட்சி செய்யும் ஒரு நாட்டில், நாங்கள் அரசியல் கட்சி நடத்துவது. என்ன நாக்கு வழிக்கவா. நாங்களும் களத்தில் இருக்கிறோம் எண்டு காட்டவேண்டாமா, அதுதான்...

**கா.பூ.** :- சரி. ஈழ அகதிகள் வருகிறார்களே அவர்களைப் போய் ஒரு எட்டுப் பாத்திருக்கிறீர்களா?

***வை.கோ.*** :- ஏன் பார்க்க வேணும் என்கிறேன். அவர்கள் இங்கே வரவேண்டும் என்று திட்டம் போட்டதே நாங்கள் தானே. அது தவிரவும் அவர்கள் எங்கள் நாட்டுக்கு விருந்தாளிகளா இல்லையே. நாட்டுக்குச் சொந்தக்காரார்கள்.

**கா.பூ.** :- வைக்கோ எப்பவுமே கழுத்தில் ஒரு கறுப்புத் துண்டைப் போர்த்துக் கொண்டு திரிகிறீர்களே என்ன விஷேசம்.

***வைகோ.*** :- ஓ...அதுவா...யாரும் நினைக்கலாம் முகமூடித் திருடன் கறுப்புத் துணியைக் கழுத்திலேயே கொண்டு திரிகிறான் என்று அப்படி நினைப்பவர்கள் மனநோயாளிகள் அவர்களுக்காக நான் வருந்துகிறேன்.

**கா.பூ.** :- இந்தியாவின் இறைமைக்கு எதிராக யார் நடந்து கொண்டாலும் அவர்களைச் சட்டம் தண்டிக்கும் என்று கொஞ்சம் காட்டமாகவே கலைஞர் சொல்லியிருக்காரே...

***வைகோ.*** :- அந்த மிரட்டலுக்கெல்லாம் நான் பயப்படமாட்டேன். நான், மிசா, பொடா, தடா என்று பல சட்டங்களை எதிர்கொண்டவன். என்னை எந்த சட்டமும் ஒன்றும் செய்ய முடியாது. கலைஞருக்கு நான் கட்சி மாறிய கோபம் இன்னும் இருக்கிறது. அவரும் ஒரு காலத்தில் ஈழத்தமிழர் விடயத்தில் கையைச் சுட்டுக் கொண்டவர்தான்.

**கா.பூ.** :- ராஜிவ்காந்தியை புலிகள் கொன்றதை ஒரு இந்தியன் என்ற வகையில் எப்படிப் பார்க்கிறீர்கள்?

***வைகோ.*** :- அது கண்டனத்துக்குரிய குற்றம். புலிகள் செய்த பெருந்தவறு. அதற்கு மன்னிப்பே கொடுக்கமுடியாது. பயங்கரவாதிப் புலிகளை கைது செய்து உரிய தண்டனை வழங்க வேண்டும். புலிகள் மனித இனத்துக்கே எதிரானவர்கள், அவர்களின் பாஸிச முகம் கிழித்தெறியப்பட வேண்டும்.

**கா.பூ.** :- இப்படி திட்டுகிறீர்களே. அடுத்தமாதக் கொடுப்பனவு, தடைப்பட்டால் என்ன செய்வீர்கள்.

***வைகோ.*** :- ஓ...தவறுதலாக நான் ஒரு இந்தியன் என்ற மன நிலையில் சொல்லிவிட்டேன். இப்படிப் பேசும் என்னைத்தான் இந்திய இறைமைக்கு எதிரானவன் என்கிறார்கள். இதை விட்டு ஒரு கைக் கூலியாகப் பார்க்கும் போது புலிகள் ராஜிவ் காந்தியை கொலை செய்தது தவறுதலாக செய்யப்பட்டதுதான். இது ஒரு பயங்கரவாதமாக கூறப்படுவது அறியாமையாகும்.

**கா.பூ.** :- அநியாயத்துக்கு இப்படி மாத்தி மாத்திப் பேசுறீங்களே...

***வைகோ.*** :- பேசத்தெரியாதவன் என்று நினைத்துக் கொண்டீர்களா. என் மூச்சு இருக்கும் வரையும் பேச்சும் இருக்கும் பேச்சு இருக்கும் வரை அதற்குள் பிரட்டும் உருட்டும் இருக்கும். யாராவது வைகோவுக்கு பேசத் தெரியாது என்றால் அவர்களை நல்ல டாக்டரிடம் கூட்டிக் கொண்டு போய் காட்ட வேண்டும். அதற்காக அவர்களின் மருத்துவச் செலவுகளை எனது கட்சியான ம.தி.மு.க. ஒருபோதும் பொறுப்பேற்காது என்பதை இந்த நேரத்தில் தெட்டத்தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கா.பூ.** :- சரி...சரி...இவ்வளவு நேரம் என்ன பேசினீர்கள்.

***வைகோ.*** :- என்னப்பா இது தொண்டைத் தண்ணி வத்துமளவுக்கு பேசியிருக்கிறேன் என்ன பேசினேன் என்று கேக்கிறீர். சின்னப் புள்ளத்தனமா இருக்கே...

**கா.பூ.** :- இல்லாம இருக்குமா. நீங்களே ஒரு பெரிய டுபாக்கூர் நீங்க பேசினது மட்டும் டுபாக்கூர் இல்லாம இருக்குமா...சரி எனக்கு நேரமாகுது நான் வரட்டுமா...

***வைகோ.*** :- என்னை என்ன இலிச்சவாயன் என்று நினைச்சிட்டாங்களா...எல்லாப் பயலும் வந்து எங்கிட்டையே வம்புக்கு வாரஞ்சலோ கலைஞரில இருந்து கா.பூ.வரைக்கும் கககபோவுக்கு நான்தான் கெடைச்சனா. முடியலை...முடியலை...

**யாவும் கலப்படமற்ற கற்பனை**


# இந்த வாரம் உங்கள் பலன்

**(31.08.2006 தொடங்கி 09.06.2006 வரை)**


## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

சிங்கம் - சூரியன், புதன். கன்னி - செவ்வாய், கேது. துலாம் - வியாழன். மீனம் - இராகு. கர்க்கடகம் - வெள்ளி, சனி. சந்திரன் விருச்சிகம், தனு, மகரம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.



**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், புதிய முயற்சி, பணச் செலவு, எதிர்பாரா பிரயாணம், உறவினர் உதவி, குடும்பக் கஷ்டம், உத்தியோக முயற்சி, புதிய பதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**



**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் மந்தம், பெரியோர் சகாயம், வெளியிட வாசம், மனக்குறையதிகம், தேகசுக நன்மை, குடும்ப சுகம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**




**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் உயர்ச்சி, பண வரவு, உயர்ந்த நிலை, வீண் குறை கேட்டல், காரிய கஷ்டம் குடும்ப மேன்மை, உத்தியோக மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**



**கர்க்கடகம்** : (புனர் பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் பலிதம், பணச் செலவு, புதிய முயற்சி, எதிர்பாரா பிரயாணம், குடும்ப மனஸ்தாபம், உத்தியோக இடர், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**




**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் மாற்றம், பணச் செலவு, வெளியிட வாழ்க்கை, இன சன நன்மை, காரியானுகூலம், குடும்ப மகிழ்ச்சி, பிள்ளைகளால் கஷ்டம், உத்தியோக முயற்சி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 7.**




**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் மேன்மை, செலவு மிகுதி, பண வரவு குன்றல், பெரியோர் சகாயம், உயர்ந்த நட்பு, குடும்ப நன்மை, உத்தியோகச் சிக்கல், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**




**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் உயர்ச்சி, காரியானுகூலம், பண வரவு, மனக்குறை நீங்கும், பிரயாண அலைச்சல், பயனுள்ள செயல், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**




**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் நன்மை, மனமகிழ்ச்சி, உயர்ந்தோர் நட்பு, பெரியோர் சகாயம், துயர் நீங்கும், பயனுள்ள செயல், குடும்ப நன்மை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 04.**




**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் கலக்கம், செலவு மிகுதி, பெரியோர் சகாயம், வீண் குழப்பம், தூர இடப் பயணம், இன சன மகிழ்ச்சி, குடும்பப் பாரம், உத்தியோக மாற்றம், புதிய பதவி, மாணவர் கல்வி மேன்மை, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**



**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் அச்சம், பண முடங்கல், பெரியோர் உதவி, மறைமுக எதிர்ப்பு, வெளியிட வாழ்க்கை, குடும்ப நன்மை, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**



**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் அலைச்சல், காரியத் தடை, பண வரவு முடங்கல், இனசன நன்மை, உறவினர் உதவி, சுப காரியக் கஷ்டம், உத்தியோக மேன்மை, மாணவர் கல்விக் மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**



**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் மந்தம், பண விரயம், வெளியார் உதவி, மனக்குறையதிகம், குடும்பக் கஷ்டம், பிள்ளைகளால் கவலை, உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**




ஸ்பெயினில், சீனாவைச் சேர்ந்த 'பக்கிங் நஷனல்' அக்ரோபட்டிக் சர்க்கஸில், சாகசம் செய்யும் பெண்.




சீனாவைச் சேர்ந்த பக்கிங் நஷனல் அக்ரோபட்டிக் நடன மற்றும் சாகசக் குழுவினர் கடல் கடந்து சென்றும் தமது கலை நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றனர். ஸ்பெயின் தேசத்திற்கு அண்மையில் விஜயம் செய்த மேற்படி குழுவினைச் சேர்ந்த பெண் ஒருவர், வெள்ளை வைன் நிரப்பப்பட்ட கண்ணாடி தம்ளர்களை கொண்டு சாகசம் செய்யும் காட்சியே படத்தில் காணப்படுகின்றது.





மெல்போர்னில் நடந்த ஹேர் ஸ்டைல் அழகு போட்டியில் கலந்து கொண்ட அழகிகள்.




நியூயோர்க் புரோனக்ஸ் மிருகக்காட்சி சரணாலயத்தில் இலைகளைத் தின்னும் கொரில்லா வகை குரங்குகள்.

# 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி சிவானுஜா | 27.08.2006

யாழ்ப்பாணம் சிவநேசன் (சிவா) - நிறோஜினி (நிறோ) தம்பதியினரின் செல்வப் புதல்வி சிவானுஜா தனது முதலாவது பிறந்த நாளை 27.08.2006 அன்று பிரான்ஸில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, ஆசை அண்ணா, அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மம்மாமார், அம்மப்பாமார், தாத்தாமார், பாட்டிமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார், பூட்டி மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கைதடி இனுங்கித்தோட்டக் கந்தன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்:-
அம்மம்மா, மாமா, குடும்பம்

மொடாக்குடியர்களைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். படத்தைப் பார்த்துவிட்டு இவர்களையும் மொடாக்குடியர்கள் என எண்ணி விட வேண்டாம். சீனாவில் வருடந்தோறும் இடம்பெறும் பியர் திருவிழாவைக் கொண்டாடுவதற்காக குயின்டல் நகரில் உற்சாகமாக பியர் குடிக்கும் ஜோடிகளே இவர்கள். ஒருநாள் மட்டும்தான் இந்த மொடாக்குடிக் கூத்து.




தேசிய லொத்தர் சபை
நாட்டில் கோடீஸ்வரர்களை உருவாக்குகிறது.

கொவிசெத லொத்தரின் அடுத்த
கோடீஸ்வரரா நீங்களா ?

கோடீஸ்வரராகுங்கள்,
மென்மேலும் கொவிசெத
டிக்கெட்டுகளை
வாங்குங்கள்!



கொவிசெத

இலங்கையரின் அபிமானத்திற்குரிய
மகத்தான லொத்தர்

தேசிய லொத்தர் சபை
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663, 2433631 இணையதளம் www.nlb.lk